
# பொருளியல் நோக்கு

மார்ச் 1994


# மனித மூலவளங்களின் அபிவிருத்தி




மக்கள் வங்கி வெளியீடு

# மானிட அபிவிருத்தி - சாதனைகள்


வருமானத்துக்கும் மானிட அபிவிருத்திக்குமிடையே
தானாகவே பிணைப்புக்கள் ஏற்படுவதில்லை





## தலைக்குரிய மொ.தே.உ. - ஒப்பீட்டு நோக்கு





## துறைவாரியாக தொழில்வாய்ப்பு




## ஆயுள் எல்லை




## வயது வந்தோர் எழுத்தறிவு




ஆதாரம் மானிட அபிவிருத்தி அறிக்கை, 1993

Theaky - Shanmugalingam


# பொருளியல் நோக்கு

மலர் 19 இதழ் 12 மார்ச் 1994

வெளியீடு: ஆராய்ச்சிப் பகுதி
மக்கள் வங்கி, தலைமையலுவலகம்,
சேர் சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்தை
கொழும்பு 2.
இலங்கை.


உள்ளே

நிரல்கள்


| | | |
|---|---|---|
| | 3 | மானிட அபிவிருத்தி - ஒரு தொகுப்பு |
| ஏ. சுமாதிகே | 24 | நீர்ப்பாசன முகாமை: விவசாயிகள் அமைப்புக்களின் பங்கேற்பு |
| ஏ.ஜே. சதரசிங்க | 25 | அமோக நெல் அறுவடை-1993 |


விசேஷ அறிக்கை

*மனித மூலவளங்களின் அபிவிருத்தி*


| | | |
|---|---|---|
| பீ. ஹேவாவித்தாரண | 4 | ஒட்டுமொத்த அபிவிருத்திக்கான ஓர் அணுகுமுறை என்ற முறையில் மனித வளங்களின் அபிவிருத்தி |
| சுதத்த ரணசிங்க | 15 | இலங்கையில் மனித மூலவளங்களின் அபிவிருத்தி |
| மல்லிகா மனுரத்ன | 22 | மனித மூலவளங்களின் முகாமை |


சிறப்புக்கட்டுரை


| | | |
|---|---|---|
| பீ.எம்.எஸ்.தந்திரிகம | 28 | இலங்கைக்கும் புதிதாக தொழில் வளர்ச்சி கண்டிருக்கும் ஆசிய நாடுகளுக்கு மிடையே வர்த்தக மாதிரிகள் |


அடுத்த இதழில்

- இலங்கையின் பொருளாதாரம்- அண்மைக்கால போக்குகள்
  - பேரண்டப் பொருளியல் அபிவிருத்தி
  - வருமானப் பகிர்வும், வறுமையும்
  - பணவீக்கம்
- அரிசியில் சுயதேவைப் பூர்த்தியும் உணவுப் பாதுகாப்பும்

பொருளியல் நோக்கு கருத்துக்களையும் அறிக்கைகளையும் புள்ளிவிவரத்தரவு-களையும் உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தினைத் தூண்டி அறிவினை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்ட இதழாகும்.



பொருளியல் நோக்கு வெளியீடு மக்கள் வங்கியின் முழு ஒரு சமூகப்பணித்திட்டமாகும். எனினும், அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோகபூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக் கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக் கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதி-பலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும் குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.



பொருளியல் நோக்கு மாதந்தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்தியோ அல்லது விற்பனை நிலையங்-களிலிருந்தோ பெற்றுக்கொள்ள முடியும்.

அட்டைப்படம் : சாந்த கே. ஹேரத்

| முன்னேற்றம் | துன்பம் |
|---|---|
| **ஆயுள் எல்லை** | |
| 0 கடந்த மூன்று தசாப்த காலத்தின் போது சராசரி ஆயுள் எல்லை மூன்றில் ஒரு பங்கினால் அதிகரித்துள்ளது: சுமார் 23 நாடுகள் 70 வயதுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட ஆயுள் எல்லை மட்டங்களை சாதித்துக் கொண்டுள்ளன. | 0 உலகில் இப்பொழுது 60 வயதுக்கு மேற்பட்ட சுமார் 30 கோடி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் சுமார் 20 சதவிகிதத்தினர் மட்டுமே ஏதாவது வருமானப் பாதுகாப்பு முறையொன்றைப் பெற்றுள்ளார்கள். |
| **சுகாதாரமும் பொது சௌக்கியமும்** | |
| 0 வளர்முக உலகில் சுமார் 70 சதவிகிதத்துக்கு மேற்பட்ட குடித்தொகையினர் சுகாதார சேவைகளைப் பெற்று வருகின்றார்கள்;<br>0 சுமார் 60 சதவீதமான குடித்தொகையினர் பொதுச் சௌக்கிய வசதிகளைப் பெற்றுக் கொள்கிறார்கள். | 0 வயிற்றுப்போக்கு, மலேரியா மற்றும் சயரோகம் போன்ற தொற்று நோய்களினாலும் ஒட்டுண்ணி நோய்களாலும் ஒவ்வோராண்டிலும் சுமார் 1 கோடியே 70 இலட்சம் மக்கள் மரணித்து வருகின்றனர். |
| **உணவும் போஷாக்கும்** | |
| 0 1965க்கும் 1990 க்கும் இடையில் தமது நாளாந்த கலோரி தேவைப்பாடுகளை நிறைவு செய்து கொண்ட நாடுகளின் எண்ணிக்கை 25 இலிருந்து 50 ஆக இரட்டிப்பாகியுள்ளது. | 0 சுமார் 80 கோடி மக்கள் இன்னமும் போதியளவில் உணவைப் பெற்றுக் கொள்ளவில்லை. |
| **கல்வி** | |
| 0 கடந்த இரண்டு தசாப்த காலத்தில் ஆரம்ப பாடசாலை நுழைவு விகிதம் 70%க்கும் குறைவாக இருந்து, சுமார் 80% க்கும் கூடுதலாக அதிகரித்துள்ளது. இதே காலப் பிரிவில் நடுநிலைக் கல்விக்கான நுழைவு, விகிதம் 25% க்கும் குறைந்த மட்டத்தில் இருந்து 40% ஆக அதிகரித்துள்ளது. | 0 சுமார் 100 கோடி மக்கள் – வயதுவந்தவர்களில் 35 சதவிகிதத்தினர் - எழுத்தறிவற்றவர்களாக இருந்து வருகின்றனர். தொடக்கக்கல்வியில் கல்வியை விட்டுச் செல்பவர்களின் விகிதம் இன்னமும் 30% வரையில் உயர்வாக இருந்து வருகின்றது. |
| **வருமானமும் வறுமையும்** | |
| 0 வளர்முக உலகின் குடித்தொகையினரில் சுமார் மூன்றில் இரண்டு பங்குக்கு மேற்பட்டவர்கள் வாழ்ந்து வரும் தென் ஆசியாவிலும் கிழக்காசியாவிலும் 1980 களின் போது, மொதேஉ வளர்ச்சி ஆண்டொன்றுக்கு 7% க்கும் கூடுதலாக இருந்து வந்தது. | 0 உலகின் மொத்தக் குடித்தொகையில் சுமார் மூன்றில் ஒரு பங்கினர் (அல்லது 130 கோடி மக்கள்) இன்னமும் கடும் வறுமையில உழன்று வருகின்றார்கள். |
| **சிறுவர்** | |
| 0 கடந்த 30 வருட காலத்தின் போது சிசு மரண விகிதமும் 5 வயதுக்குக் குறைந்த குழந்தைகளின் மரண விகிதமும் சுமார் அரைவாசியளவில் குறைவடைந்துள்ளன. | 0 ஒவ்வொரு நாளும் சுமார் 34,000 இளம் பிள்ளைகள் போஷாக்கின்மையாலும் நோயினாலும் மரணித்து வருகின்றனர். |
| **மகளிர்** | |
| 0 நடுநிலைக்கல்வியில் மகளிரின் சேர்வு விகிதம் 1970ல் 17% ஆக இருந்து, 1990ல் 36% ஆக அதிகரித்திருந்தது. | 0 எழுத்தறிவற்றவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் மகளிராவர். |
| **மானிடப் பாதுகாப்பு** | |
| 0 கெடுபிடி யுத்தம் முடிவுக்கு வந்ததனையடுத்து, வளர்முக நாடுகள் வல்லரசுப் பகைமைக்கு இடையில் அகப்பட்டு துன்புற வேண்டிய நிலை நிலவி வரவில்லை. அத்துடன், 1990ல் சுமார் 380,000 அகதிகள் ஆசியாவிலும், இலத்தீன் அமெரிக்காவிலும், ஆபிரிக்காவிலும் அமைந்திருந்த தமது தாயகங்களுக்கு திரும்பினார்கள். | 0 உள் மோதல்களினால் சுமார் 60 நாடுகள் துன்புற்று வருகின்றன; சுமார் மூன்றரைக் கோடி மக்கள் அகதிகளாக உள்ளனர்; அல்லது தமது நாடுகளுக்குள் இடம் பெயர்ந்துள்ளனர். |
| **சுற்றுச்சூழல்** | |
| 0 கடந்த இரண்டு தசாப்த காலத்தின் போது பாதுகாப்பான நீரைப் பெற்றுக் கொள்ளக்கூடிய கிராமிய குடும்பங்களின் சதவிகிதம் (10%க்கும் குறைந்த அளவிலிருந்து) சுமார் 60% வரையில் அதிகரித்தது. | 0 பல்வேறு கட்டங்களில் தரிசு நிலமாகிக்கொண்டு வரும் பிரதேசங்களில் சுமார் 85 கோடி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். |

ஆதாரம்: மானிட அபிவிருத்தி அறிக்கை, 1993




# மானிட மூலவளங்களின் அபிவிருத்தி

## கோட்பாடும் நடைமுறைகளும்

அண்மைய வருடங்களில், பெரும்பாலான வளர்முக நாடுகளில் மானிட மூலவள அபிவிருத்தி நடவடிக்கைகள் விரிவடைந்து வந்ததுடன் இணைந்த வகையில், அபிவிருத்தி மற்றும் வளர்ச்சி என்பன தொடர்பான முன்னுரிமைகளில் ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளது. முன்னர் பௌதீக மூலவளங்களை அபிவிருத்தி செய்வதில் பெருமளவுக்கு கவனம் செலுத்தப்பட்டு வந்தது. இப்பொழுது பொருளாதார வளர்ச்சிக்கான மிக முக்கியமான பங்களிப்புக் காரணி என்ற வகையில் மானிட மூலவளங்கள் பெற்றுள்ள முக்கியத்துவத்தை அங்கீகரிக்கும் வகையில், "மக்களின் தெரிவுகள்" என்ற விடயம் பௌதீக மூல வளங்களிலும் பார்க்க முன்னணிக்கு வந்துள்ளது. கடந்த இரண்டு தசாப்த காலத்தின் போது கொள்கை வகுப்போரும் திட்டமிடுவோரும் மட்டுமன்றி கொடுகடன் நிறுவனங்களின் முகாமைக் குழுவினரும் கூட மானிட மூலவளத்தின் அடிப்படையிலான அபிவிருத்தியில் சம்பந்தப்பட்டு வந்துள்ளனர். அவர்கள், வளர்ச்சியை துரிதப்படுத்துவதற்கு மிகவும் அவசியமானவை எனக் கருதப்படும் மனிதன் சாராத ஏனைய மூலவளங்களை ஒன்று திரட்டுவதற்கும் ஒழுங்குபடுத்துவதற்குமான ஆற்றலை உருவாக்குவதற்கு மக்களின் திறன்கள், அறிவு மற்றும் நடத்தை என்பவற்றில் அதிக அளவுக்கு கவனம் செலுத்தி வந்துள்ளனர்.

மானிட மூலவள அபிவிருத்தி தொடர்பான பொதுவான அணுகுமுறை தொழில்நுட்ப, தொழில்சார் மற்றும தேர்ச்சி பெற்ற மனித வலுவின் பற்றாக் குறை காரணமாக மிகவும் மோசமான முறையில் இடையூறுகளை எதிர்கொண்டுள்ள பொருளாதார நடவடிக்கைகளை இனங்கண்டு, முக்கியமான மனித வலுவினை அபிவிருத்தி செய்து, பயிற்றுவிப்பதற்குத் தேவையான வழிமுறைகளை துவக்கி வைப்பதாகும். பொருளாதார வளர்ச்சி பெருமளவுக்கு மானிட மூலதன உருவாக்கத்தினாலேயே தோன்றக் கூடியது என்ற எடுகோளினையே மானிட மூலவளங்களின் மிகவும் திறமையான பயன்பாடு அடிப்படையைக் கொண்டுள்ளது.

அடுத்து வரும் பக்கங்களில், மானிட மூலவள அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்டுள்ள பல்வேறு அடிப்படையான விடயங்களும் கோட்பாட்டு ரீதியிலான கட்டமைப்புக்களும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

# ஒட்டுமொத்த அபிவிருத்திக்கான ஓர் அணுகுமுறை என்ற முறையில் மனித மூலவளங்களின் அபிவிருத்தி

**புத்ததாஸ ஹேவாவித்தாரண**
(பொருளியல் பேராசியர், பேராதனைப் பல்கலைக்கழகம்)

முதன்முதலில், பதப்பிரயோகம் குறித்து நிலவி வரும் ஒரு குழப்ப நிலையை தெளிவுபடுத்துவது அவசியமாகும்; ஏனெனில், மானிட மூலவளங்கள் அபிவிருத்தி (HRD) மூன்று வேறுபட்ட கருதுகோள்கள் தொடர்பாக மூன்று வேறுபட்ட பதப்பிரயோகங்களைக் கொண்டுள்ளது. 1950களில் புழக்கத்துக்கு வந்த பாரம்பரிய உபயோகத்தில், கல்வி, பயிற்சி உருவாக்கம், சுகாதார முன்னேற்றங்கள் என்பவற்றால் ஊழியத்தில் ஏற்பட்டு வரும் தரரீதியிலான மாற்றங் களுக்கு இடமளிக்கும் பொருட்டு, "ஊழியம்" என்ற பதத்தின் இடத்தை மானிட மூலவளங்களின் "அபிவிருத்தி" என்ற பதம் பிடித்துக் கொண்டது. இது மானிட மூலதன கருதுகோளாகும். சமீப காலத்தில், பெரிய நிறுவனங்கள் ஆளணித் திணைக்களத்தை "மானிட மூலவள அபிவிருத்திப் பிரிவு" என மறு பெயரிட்டழைப்பது ஒரு புதிய மோஸ்தராக உருவாகி வந்துள்ளது. இதன் பின்னணியிலுள்ள கருது கோள் ஆளணி முகாமையாகும். (மூலவளங்கள் என்ற பதப் பிரயோகமின்றி) "மானிட அபிவிருத்தி" என்ற பதப்பிரயோகம் பயன்படுத்தப்பட்டு வருவதனையும் இங்கு குறிப்பிட வேண்டும். 1990ஆம் ஆண்டு தொடக்கம், ஐ.நா. அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினால் (UNDP)இந்த பதப் பிரயோகம் பிரசித்தப்படுத்தப்பட்டு வருகின்றது. அபிவிருத்தியை அதிகளவுக்கு ஜனநாயகத்தன்மை வாய்ந்ததாகவும் பங்கேற்பு இயல்பினைக் கொண்டதாகவும் உருவாக்குவதன் மூலம் மக்களுக்கான தெரிவுகளை விரிவாக்குவதன் கருது கோளினையே இது அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பான முன்னேற்றத்தை மீளாய்வு செய்து, அளவிட்டு, கண்காணிப்பதற்கென பல்வேறு வகைப்பட்ட வழிமுறைகள் இப்பொழுது உருவாகியுள்ளன.

"மானிட மூலவள அபிவிருத்தி" என்ற என்னுடைய தலைப்பு ஐ.நா. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மானிட அபிவிருத்திக் கருதுகோளுடன் பொதுவில் சம்பந்தப்பட்டுள்ள பல கருத்துக்களையும் சிறப்பம்சங்களையும் உள்ளடக்கியதாக இருந்தபோதிலும், அது இவற்றிலிருந்து வேறுபட்ட ஒரு கருத்தினை தருகின்றது. ஆசிய-பசுபிக் பிராந்தியத்துக்கான பொருளாதார- சமூக ஆணைக்குழு அதன் 1988ம் ஆண்டு மாநாட்டின் போது, மானிட மூலவள அபிவிருத்திக்கான ஜகார்த்தா நடவடிக்கைத்திட்டத்தை பிரகடனம் செய்தது. இந்தப் பிரகடனத்திலிருந்து உருவான மானிட மூலவள அபிவிருத் திக்கான "பாரிய உத்தியே" இங்கு கலந்துரையாடப்பட்டு வருகின்றது. அது 106 நடவடிக்கை யோசனைகளை உள்ளடக்கியுள்ளது; இவை 6 செயற்பாட்டு வகைகளின் கீழ் வகைப்படுத்தப் பட்டுள்ளன. ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள மானிட மூலவள அபிவிருத்தி தொடர்பான சில அடிப் படைக் கோட்பாடுகளை நடைமுறைக்கு கொண்டுவரும் நோக்கில் இந்த யோசனைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**மானிடக் காரணியின் அடிப்படையான இரு முகத்தன்மை**


| அபிவிருத்தி வழிமுறைகள் (அபிவிருத்திக்கான நிர்ணயகரமான உள்ளீடு) | அபிவிருத்தியின் முடிவு (அபிவிருத்தியின் பயனாளிகள்) |
|---|---|
| வழிமுறைகள் அம்சம் வலியுறுத்தப்பட்டால் -அது பொருளாதார உபகரணங்கள் மீதான முதலீட்டுடன் சம்பந்தப்பட்டுள்ளது | முடிவு அம்சம் வலியுறுத்தப்பட்டால் -அது நுகர்வை ஊக்குவிப்பதுடன் சம்பந்தப்பட்டுள்ளது |
| மற்றும் | மற்றும் |
| மானிட மூலவளங்களின் பொருளாதார பரிமாணத்தை பலப்படுத்துவது மானிட மூலதன அணுகுமுறையை குறிக்கின்றது | மானிட மூலவளங்களின் சமூக பரிமாணத்தை பலப்படுத்துவது சமூக அபிவிருத்தி (மானிடத் தேவைகள்) அணுகுமுறையை குறிக்கின்றது |

புதிய கண்ணோட்டம்

- இரு பாகங்களையும் ஒருங்கிணைந்த ஒரு பாகமாக கருதுதல்
- இரு பக்கங்களினதும் சமநிலையான அபிவிருத்தி
- மாமூஅ க்கு ஒரு முழு நிறைவான அணுகுமுறையை உருவாக்குதல்
- மாமூஅ தொடர்பான ஒருங்கிணைந்த தனியொரு நிகழ்வுப் போக்குக்கான ஒரு பேரளவிலான உத்தி

அது சமர்ப்பிக்கப்பட்டுள்ள விதத்தை நோக்கும்பொழுது, கொள்கை உருவாக்கம், நிகழ்ச்சித்திட்டமிடல் மற்றும் அமுலாக்கம் என்பவற்றுக்கான ஒரு நிகழ்ச்சிநிரலாக அது இருந்து வருவதனைக் காணமுடிகிறது. ஜே.எம்.கீன்ஸ் தனது "பொதுக் கோட்பாடு" என்ற நூலுக்கு முன்னுரை எழுதும் பொழுது, அதன் நோக்கம், கோட்பாட்டுடன் சம்பந்தப்பட்டதாகும் என்னும் கோட்பாட்டை நடைமுறைக்குப் பிரயோகிப்பது தொடர்பான விடயம் இரண்டாவது இடத்தை மட்டுமே பெற்றுக் கொள்கிறது என்றும் குறிப்பிட்டிருந்தார். ஆனால், மானிட மூலவள அபிவிருத்திக்கான ஜகார்த்தா நடவடிக்கைத் திட்டத்தைப் பொறுத்தவரையில், இந்த ஒழுங்கு தலைகீழாக மாறிவிடுகின்றது. அது நடைமுறைக்கென வழங்கியுள்ள வழிகாட்டு நெறிகளிலிருந்து எதிர்காலத்திலேயே இதற்கான தர்க்கவியல் அனுமானிக்கப்பட்டு, கோட்பாட்டாக்கம் மேற்கொள்ளப்பட வேண்டுமென கருதப்படுகிறது.

மனித மூலவள அபிவிருத்தி நிகழ்வுப்போக்குகளின் ஒருங்கிணைப்பும் ஒருமைப்பாடும்





## அடிப்படைக் கருதுகோள்கள்

எனவே, அதன் கோட்பாடு ரீதியான அடிச்சரடுகள் என்று கருதப்படக் கூடியவற்றை இனங்கண்டு, விளக்குவதே முதல் படியாக இருக்க வேண்டும். கோட்பாட்டு ரீதியான கட்டுக்கோப்பின் மையம் "மானிடக் காரணியின் அடிப்படையான இரட்டை முகத்தன்மை" எனக் கருதப்பட முடியும்; அதாவது "மனிதர்கள் அபிவிருத்தியின் பயனாளிகளாக இருந்து வருவதுடன், அபிவிருத்தி நிகழ்வுப்போக்குக்கான மிக முக்கியமான உள்ளீடுகளாகவும் இருந்து வருகின்றார்கள்" என்ற உண்மையை இது எடுத்து விளக்குகின்றது. முன்னையது, அபிவிருத்தியின் முடிவினைக் காட்டுகின்றது; அதே வேளையில், பின்னையது, அபிவிருத்திக்கான வழிமுறைகளை விளக்குகின்றது. இந்த இரு முகத்தன்மையிலிருந்து கொள்கை மற்றும் நடைமுறை என்பன தொடர்பாக பாரிய தாக்கங்களை எடுத்துவரக் கூடிய பல்வேறு கருதுகோள்கள் தோன்றுகின்றன.

வழிமுறைகள் என்ற அம்சத்தின் மீது அதிக அழுத்தம் செலுத்தப்பட்டால், அபிவிருத்தி நடவடிக்கை பொருளாதார உபகரணங்கள் மீதான முதலீட்டுடனும், மானிட மூலவளங்களின் பொருளாதார பரிமாணத்தினை பலப்படுத்துவதனுடனும் சம்பந்தப்பட்டதாக இருந்து வரும். இது மானிட மூலவள அபிவிருத்திக்கு மானிட மூலதன அணுகுமுறையை பிரயோகிப்பதனை குறித்துக் காட்டுகின்றது. மறுபுறத்தில், முடிவு அம்சத்தின் மீது அழுத்தம் காட்டப்பட்டால், அப்பொழுது அபிவிருத்தி நடவடிக்கை நுகர்வினை ஊக்குவிப்பதுடனும், மானிட மூலவளங்களின் சமூகப் பரிமாணத்தை பலப்படுத்துவதுடனும் சம்பந்தப்பட்டதாக இருக்கும். இது மானிட மூலவள அபிவிருத்திக்கு, சமூக அபிவிருத்தி அல்லது மானிடத் தேவைகள் அணுகுமுறையை பிரயோகிப்பதனை குறித்துக் காட்டுகின்றது.

மானிட மூலவள அபிவிருத்தி குறித்த புதிய கண்ணோட்டம், முடிவுக்கும் வழிமுறைகளுக்கும் இடையிலான வித்தியாசங்களையும், பொருளாதார பரிமாணங்களுக்கும் சமூக பரிமாணங்களுக்கும் இடையிலான வித்தியாசங்களையும் பகுப்பாய்வுத் தன்மை வாய்ந்தவையாக கருதி வருகின்றது. நடைமுறை நோக்கங்களுக்காக இந்த அனைத்து விதமான அம்சங்களையும் பரிமாணங்களையும் மானிட மூலவள அபிவிருத்தி குறித்த ஒருங்கிணைந்த தனியொரு அணுகுமுறைக்கு சொந்தமானவையென கருதுவதும், அதன் அடிப்படையில் மானிட மூலவள அபிவிருத்தி குறித்த ஒருங்கிணைந்த தனியொரு ஐக்கியப்பட்ட நிகழ்வுப்போக்கினை உருவாக்குவதும் சாத்தியமாகும்.

இத்தகைய வேறுபாடுகளைக் கொண்ட இரு பக்கங்கள், தனியொரு நிகழ்வுப்போக்கினை உருவாக்குவதற்காக ஒன்றாக இணைக்கப்பட வேண்டுமென்ற யோசனை எந்த அடிப்படையில் முன்வைக்கப்பட்டு வருகின்றது? இந்த உத்தியை நிறைவு செய்யும் நோக்கில், மானிட மூலவள அபிவிருத்தி நிகழ்வுப்போக்குகளை ஒருங்கிணைத்து, ஐக்கியப்படுத்துவதானது, மானிட மூலவளங்கள் அபிவிருத்தியின் பயனாளிகள் என்ற முறையிலும், அத்தகைய அபிவிருத்தியை உருவாக்குபவர்கள் என்ற முறையிலும் மக்கள் வகித்து வரும்



பங்குகளுக்கு இடையிலான பிணைப்புக் களுக்கும் பரஸ்பர செயல்களுக்கும் முழு அளவிலான அங்கீகாரத்தை வழங்குவதன் மூலம் மட்டுமே சாதித்துக் கொள்ள முடியும்.

உறுதியான ஒரு சமூக அடித்தளம் இல்லாத நிலையில், பொருளாதார முன்னேற்றம் சாத்தியமற்றது என வாதிக்கப்பட்டு வருகின்றது; ஏனெனில், மனிதர்களின் (குறிப்பாக பிரதிகூலமான நிலையில் இருந்து வருபவர்களின்) சமூக அபிவிருத்தி, அவர்களுடைய பொருளாதார பங்கேற்பில் தாக்கத்தை எடுத்து வருகின்றது; அத்துடன், மனிதர்களின் பொருளாதாரப் பங்கேற்பு அவர்களின் சமூக அபிவிருத்தியின் மீது தாக்கத்தை எடுத்து வருவதனால் இந்த சமூக முன்னேற்றத்தினை பொருளாதார வளர்ச்சியின் நேரடியான எளிமையான ஒரு விளைவாக கருத முடியாதுள்ளது. அது பொருளாதாரப் பங்கேற்புக்கும் சமூக அபிவிருத்திக்கும் இடையிலான பரஸ்பர பங்களிப்புக்களை கொண்ட ஒரு விடயமாகவே இருந்து வருகின்றது. குறிப்பாக, பிரதிகூலமான நிலையிலிருந்து வரும் மக்கள் பிரிவினரை அதிகளவிலான பொருளாதார அபிவிருத்திக்கு இது இட்டுச் செல்கின்றது.

எவ்வாறிருந்தபோதிலும் குறிப்பிட்ட சில கோட்பாட்டு ரீதியான மற்றும் நடைமுறை ரீதியான இடையூறுகள் வழியை மறைத்துக் கொண்டிருக்கின்றன. மானிட மூலவள அபிவீருத்தியின் பொருளாதார பரிமாணத்தினையும், முதலீட்டு அம்சத்தினையம் "சுறுசுறுப்பானவை" எனக் கருதி வருவது வழமையானதாகும். மானிட மூலதன உருவாக்கத்தினை ஒரு கூறாகக் கொண்டுள்ள அபிவிருத்தி மாதிரிகளில் இது காணப்படுகின்றது. சமூக பரிமாணமும் நுகர்வு அம்சமும் "செயலற்றது" என கருதப்பட்டு வருகின்றது. சில பேரண்டப் பொருளியல் திட்டமிடல் மாதிரிகளில் கூட மொத்த நுகர்வு ஒரு "எஞ்சியபகுதி" என கருதப்பட்டு வருகின்றது.

இந்த இரு பரிமாணங்கள் மற்றும் அம்சங்கள் என்பவற்றுக்கிடையிலான இரு வழி பிணைப்புக்களின் தர்க்கவியல், அபிவிருத்தியின் "சுறுசுறுப்பான" உற்பத்திசார் பொருளாதார உபகரணங்களுக்கும் "செயலற்றவை" எனக் கருதப்படடுவரும் நுகர்வை அடிப்படையாகக் கொண்ட சமூக குறிக்கோள்களுக்குமிடையிலான பாரம்பரிய பிரிவினை நிராகரிக்கின்றது. ஒருங்கிணைந்த மானிட மூலவள அபிவிருத்தி உத்தி, முன்னர் குறிப்பிடப்பட்ட சமூக அபிவிருத்தி மற்றும் பொருளாதார பங்கேற்பு என்பவற்றுக்கிடையிலான பரஸ்பர தாக்கத்தை ஏற்படுத்தும் உபாயத்தின் அடிப்படையில், "செயலற்ற" பரிமாணத்தை "சுறுசுறுப்பு" மிக்கதாக நிலைமாற்றம் செய்து வருகின்றது. இந்த நிலைமாற்றத்துக்காக உத்தேசிக்கப்படும் வழிமுறைகள், அபிவிருத்திக்காக வாழ்க்கைத் தரத்தில் ஏற்படும் முன்னேற்றங்களின் நேரடித் தாக்கங்களினால் தூண்டப்படுகின்றன.

**ஒருங்கிணைக்கப்பட்ட பொருள்சார்ந்த அணுகுமுறை**

| தொழில்வாய்ப்பும் மனிதவலு அபிவிருத்தியும் | விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் | வாழ்க்கைத்தரம் தொடர்பான விடயங்கள் |
|---|---|---|
| – தொழில்வாய்ப்பு உருவாக்கம் | – முதல்நிலைக்கல்வி<br>– விஞ்ஞான, தொழில் நுட்ப கல்வி | – எழுத்தறிவு<br>– கல்வி(பல்வேறு வகைகளும் மட்டங்களும்) |
| – வருமான உருவாக்கம்<br>– உற்பத்தித் திறனை அதிகரித்தல் | – தொழில் நுட்பம் கண்டுபிடிப்புக்கள், புதுமைப்புனைவுகள் தழுவல்களும், பிரயோகங்களும் | – ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு |
| – தொழில் பயிற்சி<br>– மனிதவலு அபிவிருத்தியும் திட்டமிடலும் | | – சுகாதார குடும்பத்திட்டமிடலும்<br>– வீடமைப்பு<br>– போஷாக்கு<br>– நகராக்கம்<br>– கலாச்சாரம்<br>– சுற்றுச்சூழல் |

"செயலற்று" இருப்பதனை "சுறுசுறுப்பானதாக" நிலைமாற்றம் செய்வதற்காக, பொருளாதாரத்தின் ஆதிக்கம் நிலவிவரும் மானிட மூலதன அணுகுமுறைக்கும் சமூக நலனின் ஆதிக்கம் நிலவிவரும் மானிடத் தேவைகள் அணுகுமுறைக்கும் இடையில் நியாயமான அளவில் சமநிலையில் உள்ள ஒரு அபிவிருத்தியை எடுத்து வருவது முக்கியமாகும். இந்த இரண்டு பக்கங்களுக்கும் இடையில் வரவு செலவுத் திட்ட ஒதுக்குகளை நியாயமான முறையில் பகிர்ந்தளிப்பதற்கான உத்தி இங்கு ஒரு நிர்ணய காரணியாக இருந்து வருகின்றது. நாடுகளின் இரு வகையான திருப்தியற்ற அனுபவங்களை சுட்டிக்காட்டுவதன் மூலம் அதன் முக்கியத்துவத்தை எடுத்து விளக்க முடியும். சில நாடுகளில் உறுதியான மானிட மூலதன கட்டமைப்பாடுகளுடன் இணைந்த வகையில், வாழ்க்கைத் தரம் தொடர்பான முக்கியமான பிரச்சினைகள் மீது குறைந்த அளவிலான கவனமே செலுத்தப்பட்டு வந்துள்ளது. இதன் விளைவாக, மனிதவலு தொடர்பான இடையூறுகளும் குறைந்த உற்பத்தித்திறன் வளர்ச்சியும் சமூக ஸ்திரமற்ற நிலையும் உருவாகியுள்ளன. இந்நாடுகளில், மிகத் தெளிவாகவே சமூக அபிவிருத்தி, நுகர்வு நோக்கு முறையொன்றில் அணுகப்பட்டு வந்துள்ளது. இதன் காரணமாக, அதற்கு ஒதுக்கப்படும் நிதிகள் பொருளாதார செயற்பாட்டின் மீது தங்கியிருக்கும் மீதி' இயல்பொன்றினைக் கொண்டனவாக இருந்து வருகின்றன. மறுபுறத்தில், வேறு சில நாடுகளில், உறுதியான சமூக அபிவிருத்தி அணுகுமுறைகள் மிகக் கடுமையான வரவு செலவுத்திட்ட நெருக்கடிகளுக்கும், கவலையூட்டும் பொருளாதார செயற்பாடுகளுக்கும் வழிகோலி வந்திருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இத்தகைய ஒரு விளைவு, பல்வேறு வகையான காரணிகளின் நிமித்தம் தோன்றியிருக்க முடியும்; பொருளாதார வளர்ச்சிக்கான சமூக சேமநலத்திட்டங்களின் மறைமுகமான, நீண்ட காலத்தன்மை வாய்ந்த பங்களிப்பு, எளிமையான சமூக சேமநல வழிமுறைகளின் தாக்கமற்ற தன்மை, தனிப்பட்ட முன்முயற்சியையும் வேலை செய்வதற்கான ஊக்குவிப்புக்களையும் மழுங்கச் செய்துவரும் சமூக சேவைகளின் தங்கியிருக்கும் அம்சம் என்பன இத்தகைய காரணங்களாகும். பாரிய அளவிலான சமூக சேமநலச் செலவினங்களை


தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு போதிய மூலவளங்களைப் பெற்றுக் கொள்வது தொடர்பான பிரச்சினைகளை அந்நாடுகள் எதிர்கொண்டு வருகின்றன. ஏனெனில், இத்தகைய செலவுகளை நிதிப்படுத்துவதற்கு அவசியமான மூலவளங்களிலும் பார்க்க வெளியீட்டின் அளவு பின்தங்கியுள்ளது.

வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கான செலவினங்களில் ஏற்பட்டு வந்துள்ள வீழ்ச்சியின் விளைவாக, இப்பொழுது மானிட மூலவளச் செலவுகளின் உற்பத்தித் திறன் குறைவடைந்துள்ளது. இந்த 'மீதிகள்' இறுதிப் பகுப்பாய்வில், மானிட மூலதனச் செலவினங்களின் வெற்றியிலேயே தங்கியுள்ளது. இந்த வழியில், மானிட மூலதனமும் வாழ்க்கைத் தரமும் மாறிமாறி நலிவுற்று வரும் ஒரு சுழல் தோன்ற முடியும். இறுதியாக, அபிவிருத்தியின் நீண்ட கால இலக்குகளின் ஒருங்கிணைந்த ஒரு கூறு என்ற முறையில், சமூக அபிவிருத்திச் செலவினங்களின் முக்கியத்துவம் குறைவடைய முடியும். இந்த நிகழ்வுப்போக்கில், சமூக அபிவிருத்திக் கொள்கை பொருளாதார கொள்கையிலிருந்து பிரிந்து, வேறுபட்டிருக்கும் ஒரு போக்கினைக் காட்டும். மானிட மூலதனத்துக்கும் மானிடத் தேவைகளுக்கும் இடையிலான ஒரு சமநிலையிலான அபிவிருத்தி, இந்த சிக்கலான பிரச்சினைகளை கவனத்தில் எடுக்கின்றது. வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கான செலவு ஒதுக்கீடுகள், உற்பத்தி சார்ந்த முதலீடுகளின் செலவில் மேற்கொள்ளப்பட வேண்டிய நுகர்வு நோக்கிலான உற்பத்திக்கு உதவாத சமூகச் செலவினங்களாகக் கருதப்படக்கூடாது: அதற்கு மாறாக, இந்தச் செலவினங்களால் பயனடைபவர்களை அபிவிருத்தியின் செயல்முனைப்பு மிகுந்த, ஆக்கத்திறன் கொண்ட முகவர்களாக நிலை மாற்றம் செய்வதற்காக மேற்கொள்ளப்படும் செலவினங்களாக அவை கருதப்பட வேண்டும் என்ற வாதத்தை அது அடிப்படையாகக் கொண்டுள்ளது. எனவே, இந்தப் பின்னணியில், மானிட மூலதனத்திலும் பௌதீக உள்கட்டமைப்பு வசதிகளிலும்மேற்கொள்ளப்பட்டுள்ள முதலீடுகளுக்கு குறைநிரப்புச் செய்து, பலப்படுத்தும் முதலீடுகளாகவே இவை இருந்து வருகின்றன. சமூக அபிவிருத்தி தொடர்பான செலவினங்களை "மீதிகள்" என்ற அந்தஸ்திலிருந்து மீட்டெடுத்து, நீண்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் ஒருங்கிணைந்த ஒரு பாகமாக மாற்றியமைப்பதற்கென நிதிகளை ஒதுக்கிக் கொடுக்கும் ஒரு மாதிரியை உறுதி செய்வதே இந்த உத்தியின் நோக்கமாகும். இந்த வழியின் மூலம் சமூக அபிவிருத்திக் கொள்கையை பொருளாதாரக் கொள்கையுடன் மீண்டும் இணைத்து விடுவதற்கு அது எதிர்பார்க்கின்றது.

மானிட மூலவள அபிவிருத்தியை செயலில் விடுதல் மற்றும் மூலவள இடர்ப்பாடுகளுக்கு மத்தியில் உச்ச மட்டப் பயனைப் பெறுதல் ஆகிய இரண்டு விடயங்களையும் ஒன்றாக எடுத்து, ஒன்றாக இணைந்துள்ள ஒரு பிரச்சினையாக நோக்க வேண்டும். இதற்குக் காரணம் ஒரு பேரளவிலான உத்தி நடைமுறைப்படுத்தக் கூடியதாகவும், தாக்கமானதாகவும் இருக்க வேண்டுமானால், அது, வரையறுக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட மூலவளங்களுடன், மானிட மூலவளங்களின் மீது சாத்தியமான ஆக உச்சமட்டத் தாக்கத்தினை உருவாக்கக் கூடிய பல அணுகுமுறைகளையும், உசிதமாக கையாளக்கூடிய பொறிமுறைகளையும் கொண்டிருத்தல் வேண்டும். ஒருங்கிணைந்த மானிட மூலவள அபிவிருத்தி உத்தி இந்த விடயங்களை கவனத்தில் எடுத்து, செலவுத்தாக்கம் கொண்ட அமுலாக்கலினை உறுதி செய்யும் பொருட்டு, தெரிவுக் கோட்பாட்டின் அடிப்படையிலான உத்திகளை தன்னகத்தே கொண்டுள்ளது.

**மானிட அபிவிருத்திச் சுட்டெண்**

***மானிட அபிவிருத்திச் சுட்டெண் (மா அ சு என்பது ஆயுள் எல்லை, கல்வி மற்றும் வருமானம் ஆகிய மூன்று மாறிகளின் ஒரு தொகுப்பு சுட்டெண் ஆகும். இதில் இந்த மூன்று கூறுகளும் சமமான நிறையைக் கொண்டுள்ளன. இந்த சுட்டெண் 0.000தொடக்கம் 1000 வரையில் வேறுபட்டுச் செல்லும் புள்ளிகளில் 173 நாடுகளையும் பிரதேசங்களையும் (கைத்தொழில் நாடுகள், வளர்முக நாடுகள்) வரிசைப்படுத்துகின்றது. இலங்கை தொடர்பான நிலை கீழேயுள்ள வரைபடத்தில் தரப்பட்டுள்ளது.***




## 1. ஒருங்கிணைந்த கருப்பொருள் அணுகுமுறை

இந்த அணுகுமுறையின் கீழ், ஒரு நாட்டின் மானிட மூலவளங்களை அபிவிருத்தி செய்வதில் நிர்ணயகரமான முறையில் முக்கியத்துவம் பெற்றுள்ளவை என்று கருதப்படும் மானிட மூலவள அபிவிருத்தியின் கூறுகளுக்கும் பாகங்களுக்கும் கவனம் வரையறுக்கப்பட்டுள்ளது. இந்தக் கூறுகளைத் தெரிவு செய்வதில், ஏனைய கூறுகளுடன் மிகவும் சக்திவாய்ந்த இடைத் தொடர்புகளை உருவாக்குவதன் மூலம் மானிட மூலவள அபிவிருத்தியின் மீது ஒரு நல்ல தாக்கத்தை எடுத்து வரக்கூடிய சம்பந்தப்பட்ட கூறின் ஆற்றல் மீது விசேஷ கவனம் செலுத்தப் பட்டு வருகின்றது. இந்தக் கூறுகளையும் பாகங்களையும், மூன்று ஒன்றிலொன்று தங்கியிருக்கும் கருப்பொருள்களின் கீழ் வகைப்படுத்த முடியும்: தொழில் மற்றும் மனிதவலு அபிவிருத்தி என்ற கருப்பொருளின் கீழ், வேலைவாய்ப்பு, வருமானம் மற்றும் உற்பத்தித்திறன் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளல், திறன்களின் உருவாக்கம், ஊழியச்சந்தை இயங்கியல் என்பவற்றுடன் சம்பந்தப்பட்டுள்ள அனைத்துக் கூறுகளும் பிரச்சினைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் இரண்டாவது கருப்பொருளாகும். பல்வேறு மட்டங்களிலான தொழில்நுட்பங்களை உறிஞ்சிக் கொள்வதற்காக மானிட மூலவளங்களை தயார் செய்தல், ஒரு நாட்டின் ஊழிய விகிதாசாரங்கள் மற்றும் அபிவிருத்தித் தேவைகள் என்பவற்றுக்கு பொருந்தக்கூடிய விதத்திலான தொழில்நுட்பங்களைக் கண்டுபிடித்து பிரயோகித்தல், இந்த வழிமுறைகளுக்கூடாக சமூகமெங்கிலும் ஒரு தொழில்நுட்ப கலாச்சாரத்தை பரப்புதல் என்பவற்றை இது நோக்கங்களாக கொண்டுள்ளது. விஞ்ஞானம், தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழில் நுட்ப அபிவிருத்தி என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட முக்கியமான பிரச்சினைகள் அனைத்தையும் அது உள்ளடக்கியுள்ளது. வாழ்க்கைத் தரம் தொடர்பான பிரச்சினை

மூன்றாவது கருப்பொருளாகும். இது கலாச்சாரம் மற்றும் சுற்றுச்சூழல் என்பவற்றை உள்ளடக்கிய வாழ்க்கைத்தரம் தொடர்பான பரந்த வீச்சிலான துறைகளில் வாழ்க்கைத் தரத்தை விருத்தி செய்வதற்கும், அதன் மூலம் உற்பத்தித் திறனைப் பெருக்கு வதற்கும் எதிர்பார்க்கின்றது.

இந்தக் கருப்பொருள்களின் உள்ளடக்கக் கூறுகள் மிகவும் நெருக்கமான முறையில் ஒன்றுடனொன்று சம்பந்தப் பட்டிருப்பதால், இந்த பரஸ்பர பிணைப் புக்கள் மற்றும் ஒன்றை மற்றொன்று நிறைவு செய்யும் நிலைகள் என்பவற்றைக் கொண்ட வலைப்பின்னல் அமைப்பினை திட்டமிட்ட விதத்தில், முழு அளவில் பயன்படுத்திக் கொள்வதையே கருப் பொருள் அணுகுமுறை அடிப்படை யாகக் கொண்டுள்ளது. இந்தக் கூறுகளில் எவையும் புதியவையல்ல; அவை மானிட மூலவள அபிவிருத்திக் கொள்கை யுடன் ஒருங்கிணைந்த ஓர் அணுகு முறையில் தொடர்புபடுத்தப் பட்டுள்ளன என்பது மட்டுமே இங்குள்ள புதிய அம்சமாகும். மனிதர்கள் அபிவிருத்தி நிகழ்வுப்போக்கின் நிர்ணயகரமான உள்ளீடுகளாக இருந்து வரும் அதே வேளையில், அதன் இறுதிப் பயனாளிகளாகவும் இருந்து வருகின்றார்கள் என்ற விடயம் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றது. மிகவும் சக்திவாய்ந்த இடைத்தொடர்புகளை உருவாக்கும் ஆற்றல் வாய்ந்த மானிட மூலவள அபிவிருத்திக் கூறுகள் மீது அதிகளவுக்கு அழுத்தம் காட்டப்பட்டு வந்தால், இந்த ஒருங்கிணைப்பு சுமுகமாக இடம்பெறும். உதாரணமாக, அனைத்து வகைகளையும் சேர்ந்த கல்வி மற்றும் பயிற்சி என்பன இடைத் தொடர்புகள் மற்றும் பரஸ்பரம் ஒன்றுக் கொன்று குறைநிரப்புச் செய்தல் போன்ற அம்சங்களை பெருமளவில் கொண் டுள்ளன.

வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்குகளும் நிகழ்ச்சித்திட்டமிடலும் மானிட மூலவள அபிவிருத்தியின் பல்வேறு கூறுகளிலுமான முதலீடுகளை பொருத்தமான விகிதங்களில் இணைத் துக்கொள்ள வேண்டியுள்ளன; இல்லா விடில், இந்தக் கூறுகளுக்கிடையிலான பரஸ்பரம் ஒன்றுக்கொன்று உதவும் இயல்பினையும் பிணைப்புக்களையும் முழு அளவில் பயன்படுத்திக் கொள்ள முடியாது போய்விடும். உதாரணமாக, சுகாதாரம் என்ற கூறின் மீது விகிதாசார ரீதியில் குறைந்தளவு நிதிகள் ஒதுக்கப் படுவதாக கொள்வோம்; இது மானிட மூலவள அபிவிருத்தியின் ஏனைய கூறுகளான கல்வி மற்றும் வேலை வாய்ப்பு என்பவற்றின் மீது பாரிய தாக்கமொன்றை எடுத்துவரும் விஷயத்தில் சக்தியற்றதாக இருந்து வர முடியும்; அது மட்டுமன்றி, இந்தக் கூறுகள் மீது எதிர்மறையான பின்விளைவுகளைக்கூட அது எடுத்து வரமுடியும். இந் நிலைமைகள், கவனமாக திட்டமிடப்பட்ட வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டமிடல் என்பவற்றின் மூலம் மானிட மூலவள அபிவிருத்தியின் பல்வேறுபட்ட கூறுகளிலும் பொருத்த மான முறையில் சமநிலையான அபிவிருத்தி தோன்றுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டிய அவசியத்தை சுட்டிக்காட்டுகின்றன.

வரவுசெலவுத்திட்ட செலவு ஒதுக்குகள் தொடர்பான முன்னுரிமை களை மீளமைப்புச் செய்ய வேண்டியது அவசியம் என்பதனை இங்கு வலியுறுத்த வேண்டும். கருப்பொருள் அணுகுமுறை அடிப்படையின் கீழ், முன்னுரிமை மாதிரிக்கு இணங்கிய விதத்தில் நிதிவளங்கள் ஒதுக்கப்படும்பொழுது, அது, அபிவிருத்தி மீதான செல வினத்தின் திறமையை விருத்தி செய்து, பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக் கொள்கைகளின் விரும்பத்தகுந்த கலவை யொன்றை எடுத்துவரும். ஒருங் கிணைந்த கருப்பொருள் அணுகுமுறை யின் தேவைகளை நிறைவு செய்வதற்காக மூலவள ஒதுக்குதல்களும் மீள் ஒதுக்குதல் களும் செலவுகளைக் குறைத்து, அதே வேளையில் அவற்றின் தாக்கத்திறனை அதிகரிப்பதற்கான சக்திவாய்ந்த பொறி முறைகளாக இருந்து வருகின்றன. சிறிய பண்ணைக் கைத்தொழில்கள், குடிசைக் கைத்தொழில்கள் மற்றும் சிறு அளவு தொழில்கள் போன்ற துறைகள் போன்ற வற்றின் உற்பத்தித் திறனை விருத்தி செய்யக்கூடிய நிதி வளங்களாக இவை இருந்து வருகின்றன. மேலும், மூல வளங்கள் பின்வரும் முறையில் மீள ஒதுக்கப்படுதல் வேண்டும்: தடுப்பு மருத்துவமுறையிலிருந்து ஆரம்ப சுகாதார பராமரிப்புக்கு, நன்கு பயிற் றப்பட்ட மருத்துவர்களிலிருந்து துணை நிலை மருத்துவ ஆளணியினருக்கு, நகர சேவைகளிலிருந்து கிராம சேவைகளுக்கு, பொதுக் கல்வியிலிருந்து தொழில் முன்னிலைக் கல்விக்கு, மூன்றாம் நிலைக்கல்வியிலிருந்து ஆரம்ப மற்றும் இரண்டாம் தரக்கல்விக்கு, முறைசார்ந்த கல்வியிலிருந்து முறைசாராக் கல்விக்கு, முறைசார்ந்த துறையிலிருந்து முறை சாராத் துறைக்கு, செலவு கூடிய வீடமைப்பு முறையிலிருந்து செலவு குறைந்த வீடமைப்பு முறைக்கு என்ற

### மானிட அபிவிருத்தி குறிகாட்டிகள்-இலங்கை

| | |
|---|---|
| குடித்தொகை | 1கோடி 74இலட்சம் |
| நிலப்பரப்பு | 6470,000ஹெக். |
| மொ உ உ | 730 கோடி அ. டொலர் |
| பிராந்தியம் | தென்னாசியா |
| வருமானப்பிரிவு | குறைந்த பிரிவு |
| மாஅக வரிசை (173 நாடுகள் மற்றும் பிரதேசங்கள் என்பவற்றுக்கிடையில்) | 86 |
| மாஅக பெறுமதி (0தொடக்கம் 1வரையுள்ள அளவுகளில்) | 0.663 |
| மானிட அபிவிருத்திக் குழு நடுத்தரம் | |
| மொ தே உ வரிசை சய மாஅக வரிசை | 44 |

### மானிட அபிவிருத்தி

| | | |
|---|---|---|
| ஆயுள் எல்லை (வருடங்கள்) | 1990 | 70.9 |
| சுகாதார வசதி (%) | 1987-90 | 90 |
| பாதுகாப்பான குடிநீர் வசதி(%) | 1988-90 | 60 |
| கழிவு நீர் அகற்று வசதிகள் | 1988-90 | 50 |
| தினசரி கலோரி வழங்கல் (தேவைகளின்% ஆக) | 1988-90 | 101 |
| முதிர்ந்தோர் எழுத்தறிவு (%15+) | 1990 | 88 |
| ஆரம்ப, இரண்டாந்தர கல்வியில் சேரும் விகிதம்(%) | 1987-90 | 88 |
| தலைக்குரிய மொதேஉ(அ.டொலர்) | 1990 | 470 |
| தலைக்குரிய மெய் மொஉஉ(ppp$) | 1990 | 2405 |

### மானிட இடர்
### 1990-1991 (பத்து இலட்சங்கள்)

| | |
|---|---|
| சுகாதார வசதி கிட்டாதவர்கள் | 1.7 |
| பாதுகாப்பான நீர் கிட்டாதவர்கள் | 7.0 |
| கழிவு நீரகற்று வசதிகள் கிட்டாதவர்கள் | 8.8 |
| 5வயதுக்குக் கீழ் பிள்ளைகளின் மரணங்கள் (ஆயிரங்களில்) | 13 |
| 5 வயதுக்குக் கீழ்பட்ட போஷாக்கற்ற பிள்ளைகள் | 0.5 |
| ஆரம்ப அல்லது இரண்டாந்தர பாடசாலைகளுக்கு செல்லாத பிள்ளைகள் | 0.5 |
| எழுத்தறிவற்ற வயது வந்தோர் (15+) | 1.4 |
| எழுத்தறிவற்ற பெண்கள் (15+) | 1.0 |

ஆதாரம் :
மானிட அபிவிருத்தி அறிக்கை,1993

விதத்திலேயே இந்த மீள் ஒதுக்கீடுகள் இடம்பெற வேண்டியுள்ளன.

ஒருங்கிணைந்த கருப்பொருள் அணுகுமுறை, வரையறுக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட வளங்கள் மற்றும் மூலவள இடர்ப்பாடுகள் எனபவற்றுக்குள், மானிட மூலவளங்கள் மீது உச்ச மட்டத்திலான தாக்கத்தை எடுத்துவரும் ஓர் உத்தியாக உள்ளது. இந்த அணுகுமுறை கட்டமைப்புக்குள் பரஸ்பரம் ஒன்றுக்கொன்று ஆதரவளிக்கக் கூடிய ஒன்றையொன்று பலப்படுத்தக்கூடிய மானிட மூலவள கொள்கைகளும் நிகழ்ச்சித்திட்டங்களும் வகுக்கப்படும்பொழுது, அவை தொடர்பு இணைப்புக்களையும் பன்முகப்பட்ட தாக்கங்களையும் உருவாக்கும்; மேலும், இறுதியில் ஒரு மொத்தமான தாக்கத்தை எடுத்து வரும் பொருட்டு, ஒன்றுக்கொன்று துணையாக இருக்கும் கூறுகளை அது முழு அளவில் பயன்படுத்திக் கொள்ளும். அதாவது, இந்த அணுகுமுறையை பின்பற்றுவதன் மூலம் மானிட மூலவளங்கள் மீது உருவாக்கக்கூடிய தாக்கம், அதன் கூறுகள் சிலவற்றை மட்டும் பின்பற்றுவதனால் உருவாக்கப் படும் தாக்கத்திலும் பார்க்க அதிகமான தாக இருக்கும்.

குறைவிருத்தி நாடுகளில், பெரும்பாலான சந்தர்ப்பங்களில், மானிட மூலவள அபிவிருத்தி தொடர்பாக அவ்வப்போதைக்கான அல்லது உதிரியான முயற்சிகளே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவை சார்பு ரீதியில் தாக்கமற்ற வழிமுறைகளாகவே உள்ளன. ஆனால், ஒருங்கிணைந்த கருப்பொருள் அணுகுமுறையின் உள்ளார்ந்த ஆற்றல் கள் இவற்றுக்கு மாறானவையாக இருந்து வருகின்றன. உதாரணமாக, வேலைவாய்ப்பும் மனிதவலுத் திட்டமிடலும் அபிவிருத்தி திட்டமிடல் நிகழ்வுப் போக்கிலிருந்து பிரித்து நோக்கப்பட்டு வருகின்றது. வேலைவாய்ப்பும் மனிதவலுத் திட்டமிடலும் அபிவிருத்தி உத்தியின் ஒருங்கிணைந்த ஒரு கூறாக நோக்கப்படாது, அதன் ஒரு உபவிளைவாக மட்டுமே நோக்கப்பட்டு வருகின்றது. மிகக் கவனமான முறையில் தொடர்புபடுத்தப்பட்ட உத்திகளும் நிகழ்ச்சித்திட்டங்களும் இல்லாத நிலையில், ஏற்றத்தாழ்வு மற்றும் வறுமை ஆகிய பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பது சாத்தியமில்லை என்பது உணரப் படாமல், வறுமையை ஒழித்து விடுவதற்கு, வேலைவாய்ப்புக்களை உத்தரவாதப்படுத்துவதற்கு அல்லது அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்கு தனியான, குறித்துரைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள், அமுல் செய்யப்பட்டு வருகின்றன. கடும் ஏழ்மை ஒழித்தல், முழு நிறைவான வேலைவாய்ப்பு, அகிலம் தழுவிய அடிப்படைக் கல்வி, அனைவருக்கும் நடுநிலைக் கல்விக்கான வாய்ப்பு, தொழில் பயிற்சி, விஞ்ஞானத்திலும் தொழில்நுட்பத்திலும் தேசிய தன்னிறைவு, அடிப்படைத் தேவைகளின் நிறைவேற்றும் மற்றும் மக்கள் பங்கேற்பு போன்ற குறித்துரைக்கப்பட்ட அடிப்படையான அபிவிருத்திக் குறிக்கோள்களை கவனத்தில் எடுக்கும் பொதுவான நிகழ்ச் சித்திட்டங்கள், மானிட மூலவள அபி விருத்தி தொடர்பான ஒருங்கிணைந்த கருப்பொருள் அணுகுமுறையில் அமுல் செய்யப்படுமிடத்துசிறந்த பெறுபேறுகளை எடுத்துவர முடியும்.

**நிறுவன ரீதியான ஏற்பாடுகள்**

ஒருங்கிணைந்த கருப்பொருள் அணுகுமுறை, மறுபுறத்தில், துறைகளுக்குடையிலான ஓர் அணுகுமுறையை அவசியப்படுத்துகின்றது. மானிட மூலவள அபிவிருத்தியின் பல்வேறு கூறுகள், பல்வேறு பிரிவுகளின்கீழ் அல்லது அந்தந்த உப பிரிவுகளின் கீழ் வருவதே இதற்கான காரணமாகும். வழக்கமாக, மானிட மூலவள அபிவிருத்தித் திட்டங்களும் நிகழ்ச்சித் திட்டங்களும் துறைவாரியாக உருவாக்கப்பட்டு வருவதுடன், துறைவாரியான முகவரகங் களால் செயற்படுத்தப்பட்டும் வரு கின்றன. எனினும், ஒருங்கிணைந்த கருப்பொருள் அணுகுமுறையின் தேவை களை நிறைவு செய்வதற்கென, திட்ட மிடல், நிகழ்ச்சித்திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் என்பவற்றின் பெரும்பகுதியை துறைகளுக்கிடையில், தொடர்பு படுத்தப் பட்ட ஒரு முறையில் மேற்கொள்ள வேண்டியுள்ளது. துறைவாரியான அணுகுமுறைக்கும் துறைகளுக் கிடையிலான தொடர்புபடுத்தலுக்குமான நிறுவன ரீதியான ஏற்பாடுகள், பயனாளிகளுக்கான வழங்கல்களை விருத்தி செய்வதன் மூலமும் துறைவாரியாக உருவாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங் களின் முழு அளவுப் பயன்பாட்டுக்கு வசதி செய்து கொடுப்பதன் மூலமும் ஒருங்கிணைந்த கருப்பொருள் அணுகுமுறையின் செலவுச் சேமிப்பு மற்றும் உச்சமட்டப் பயன் என்ற நோக்கத்துக்குப் பங்களிப்புச் செய்கின்றது. அரச துறைக்கும் தனியார் துறைக்கும் அரசு சாரா துறைக்கும் சொந்தமான பல நிறுவனங்களும் முகரகங்களும் மானிட மூலவள அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. எனவே, முகவரகங்களுக்குடையே ஒருங்கிணப்பினையும் தொடர்பிணைப்பினையும் உருவாக்குவதன் மூலம் துறைகளுக்கிடையிலான திட்டமிடலையும், அமுலாக்கலையும் மேற்கொள்ள முடியும். மேலும் இது பல நிறுவனங்கள் ஒரே வேலையை செய்வதைத்தவிர்த்துக் கொள்வதற்கு உதவி, அதன் மூலம் மூலவளங்கள் வீண் விரயம் செய்யப்படுவதனை தடுக்கக்கூடியதாக இருக்கும். இது தவிர, மானிட அபிவிருதகி அறிக்கை 1991 சுட்டிக்காட்டியது போல, அரசு சாரா அமைப்புக்கள் குறிப்பிட்ட சில மானிட மூலவள அபிவிருத்திச் சேவைகளை, பொதுத்துறை முகவரகங்கள் அல்லது தனியார் துறை முகவரகங்கள் மேற்கொள்வதைப் பார்க்கிலும் குறைந்த அலகுச் செலவில் மேற்கொள்ளக்கூடிய நிலையில் இருந்து வருகின்றன. ஒருங்கிணைந்த கருப்பொருள் அணுகுமுறைக்கு அவசியமான நிறுவன ரீதியான பொறிமுறைகள், வரையறுக்கப்பட்ட மூலவளங்களுடன், உச்சமட்ட தாக்கத்தை எடுத்து வருவதற்கு பல்வேறு வழிகளில் பங்களிப்புச் செய்து வருகின்றன.

**இலக்குக்குழு உத்தி**

இந்த உத்தியிலும் கூட, வரையறுக்கப்பட்ட மூலவளங்களுடன் உச்சமட்டப் பயனைப் பெற்றுக் கொள்ளும் முயற்சியில், அனைத்துமடங்கிய தன்மை பலியிடப்பட்டு, தெரிவுக்கோட்பாடு அனுசரிக்கப்பட்டு வருகின்றது. மகளிர், ஐந்து வயதுக்கு குறைந்த பிள்ளைகள், கிராமிய வறியோர், நகர வறியோர், தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடியினர் மற்றும் ஒதுக்கப்பட்ட சமூகங்கள் போன்ற சமூகத்தின் சலுகை குறைந்த பிரிவினரின் அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்கும் முறையே பின்பற்றப்பட்டது. மானிட மூலவள அபிவிருத்தியின் ஒருங்கிணைந்த கருப்பொருள் அணுகுமுறைக்கான இலக்குக் குழுக்களாக இவற்றை ஏற்றுக் கொள்ள முடியும். இத்தகைய சமூக

குழுக்களின் வாழ்க்கைத் தரத்தை விருத்தி செய்யும் பொருட்டு, அவற்றின் மூல வளங்களைப் பயன்படுத்துவதே இலக்குக்குழு சித்தாந்தத்தின் நோக்கமாகும். இது மறுபுறத்தில், அவர்களுடைய பொருளாதார பங்கேற்பும் உற்பத்தித் திறனும் அதிகரிப்பதற்கு வழிகோலும். மானிட மூலவள நிகழ்ச்சித்திட்டங்களின செலவுத்தாக்கம் இத்தகைய குழுக்களுக்கிடையே உச்ச மட்டத்தில் காணப்படுவதன் காரணமாகவே இக்குழுக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகின்றது. எனவே, இவர்கள் மூலவளப் பற்றாக்குறை நிலைமையின் கீழ் உச்சமட்டப் பயன்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய நிலையில் இருந்து வருகின்றார்கள். சமூகத்தின் அடிமட்டத்தில் மிகவும் மோசமான நிலையில் வாழ்ந்து வரும் பிரிவினரை இலக்குக் குழுக்களாக கொள்வது மானிட மூலவள அபிவிருத்தியின் செலவுத் தாக்கத்தினை நான்கு வழிகளில் உச்சப்படுத்துகின்றது.

முதலில், அது, மானிட மூலவள அபிவிருத்தி தொடர்பான செலவினங்களை முழுச் சமூகத்தின் மீதும் பரவலாக மேற்கொள்ளாது, தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரிவினர் மீது நெறிப்படுத்துவதன் மூலம் இத்தகைய செலவுகளை சிக்கனப்படுத்துகின்றது.

இரண்டாவதாக, உயர் பிறப்பு மற்றும் சிசு மரண விகிதங்கள், குறைந்த அளவிலான ஆயுள் எல்லை, குறைந்த எழுத்தறிவு மட்டம் போன்றவற்றால் திருஷ்டாந்தப்படும் மகளிர் தொடர்பான மானிட மூலவள குறைவிருத்தி நிலைமைகளுடன் இணைந்த வகையில் நிலவி வரும் உயர் செலவினங்களை அது குறைத்து விடுகின்றது.

மூன்றாவதாக, ஒடுக்கப்பட்ட சமூகக் குழுக்களாலேயே மானிட மூலவள அபிவிருத்தியிலான முதலீட்டுக்கு உயர் அளவிலான ஆதாய விகிதத்தை- குறிப்பாக, ஆகக்கூடிய நீண்டகால ஆதாய விகிதத்தை - உருவாக்கித் தர முடியும். இவர்களுக்கு சார்பாக மேற்கொள்ளப்படும் சிறிய அளவிலான முதலீடுகள் கூட அவர்களுடைய மானிட மூலவளங்களில் மிக உயர் அளவிலான விருத்தி நிலைமைகளை எடுத்து வரமுடியும். இத்தகைய சமூகக் குழுக்களின் மானிட மூலவள அபிவிருத்தி நிர்ணயகரமானது என்பதனை இது காட்டுகின்றது. இத்தகைய விருத்தி நிலைமைகள் ஆகக் குறைந்தபட்ச வாழ்க்கைத் தரமொன்றை அம்மக்கள் பிரிவினருக்கு பெற்றுக் கொடுப்பது மட்டுமன்றி, மானிட உற்பத்தித் திறனை உயர்த்துவதன் மூலம் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டி துரிதப்படுத்திவிடும். சுகாதாரம், போஷாக்கு மற்றும் குடும்பத் திட்டமிடல் முதலிய நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஊடாக கல்வி, பயிற்சி மற்றும் மானிட உற்பத்தி ஆற்றலை விடுவித்தல் என்பவற்றின் மூலமே உற்பத்தித்திறன் பெருகும்.

நான்காவதாக, "முக்கிய இலக்குக் குழுக்கள்" என்று இனங்காணப்பட்டு வரும் ஆட்கள் குழுக்களின் மானிட மூலவளங்களை அபிவிருத்தி செய்வதற்காக பொருத்தமான முதலீடுகளை மேற்கொள்வதற்கென மேலதிக உப-உத்தியொன்றைப் பின்பற்றுவதன் மூலம் சமூக ஆதாயங்களின் விகிதத்தை மேலும் உயர்த்திக் கொள்ள முடியும். மானிட மூலவள அபிவிருத்தியின் எளிதில் தாக்கப்படக்கூடிய மாறிகளை தூண்டி விடுவதும், பன்முகப்பட்ட, பரவலான தாக்கங்களை உருவாக்கும் காரணிகளை முடுக்கி விடுவதுமே இந்த உத்தியாகும். மானிட மூலவளங்கள் மீதான முதலீடுகளை, தமக்காக மட்டுமன்றி ஏனைய முன்னுரிமைக் குழுக்களுக்காகவும் துறைகளுக்காகவும் மிகவும் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளும் ஆற்றல் வாய்ந்த நபர்கள் உள்ளார்கள். இந்த வகையில், மகளிரின் மானிட மூலவள அபிவிருத்தியை, மானிட உள்கட்டமைப்பின் மீதான மிக முக்கியமான ஒரு முதலீடாக கருத முடியும். ஏனெனில், சமூகத்தின் மிக முக்கியமான, எளிதில் ஊறுபடத்தக்க, குடும்ப முறைக்கூடாக பலதரப்பட்ட தாக்கங்களைப் பரவச்செய்யும் உள்ளார்ந்த திறனை மகளிர் சமூகம் கொண்டுள்ளது. மேலும், பிள்ளைகளின் ஆரோக்கிய நிலையை விருத்தி செய்வதற்கூடாக, எதிர்கால தலைமுறையினரின் வளங்களையும் அது விருத்தி செய்கின்றது. மகளிரின் மானிட அபிவிருத்திக்கான முதலீடுகளின் சமூக ஆதாயங்கள், கருவளத்தின் வீழ்ச்சி, குறைவான சிசு மரணம், பாடசாலையை இடையில் விட்டுச் செல்பவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி, குடும்ப போஷாக்கின் விருத்தி, மெதுவான குடித்தொகை வளர்ச்சி விகிதம் போன்ற வடிவங்களைப் பெறும். "முக்கிய இலக்குக் குழுக்கள்" என்ற தகைமையைப் பெறுவதற்கு மகளிர் தவிர, வேறு சில குழுக்களும் இருந்து வருகின்றன. ஏனெனில், இப்பிரிவினர், வேலை வாய்ப்புக்களின் உருவாக்கம், கேள்வி உருவாக்கம் மற்றும் சமூகப் பங்கேற்பினை மேம்படுத்தல் போன்ற பன்முகப்பட்ட தாக்கங்களுக்கூடாக, தமது சொந்த மானிட மூலவளங்களின் அபிவிருத்தியை சமூகத்தின் ஏனைய உறுப்பினர்களுக்கும் விஸ்தரிக்கக்கூடிய உள்ளார்ந்த ஆற்றலைக் கொண்டுள்ளனர்.

### கேள்வி நோக்கிலான உத்தி

சமூகத்தில் வசதி குறைந்த பின்தங்கிய மக்கள் பிரிவினர் இருந்து வரும் நிலையில், வழமையான விநியோக நோக்கிலான மானிட மூலவள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் நீதியான பகிர்ந்தளிப்பினை போதியளவில் சாதித்துக் கொள்ள முடியாது போகும். ஏனெனில், இம்மக்கள் பிரிவினர் இத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்பதனை பல பொருளாதார, சமூக-கலாச்சார, உளவியல் மற்றும் பௌதீக இடையூறுகள் தடுத்து வருகின்றன. அத்துடன், தமக்கு வழங்கப்பட்டு வரும் மானிட மூலவள அபிவிருத்தி வழிமுறைகளை தாக்கமான முறையில் பயன்படுத்திக் கொள்வதனையும் இவை தடுக்கின்றன. இந்நாட்டில் மானிட மூலவள அபிவிருத்தி தொடர்பான கொள்கைகளும் திட்டமிடல் கட்டமைப்புக்களும் ஏனைய வசதிகளும் இருந்து வந்த போதிலும், ஒடுக்கப்பட்ட சமூக குழுக்களின் மானிட மூலவளங்களின் தரம் சார்புரீதியில் விருத்தி குன்றியதாகவே தொடர்ந்தும் இருந்து வருகின்றது. மானிட மூலவள அபிவிருத்திக்கான கேள்வி நோக்கிலான உப-உத்தியொன்றே இதற்கான தீர்வாகும். வழங்கல் பக்கத்துக்கும் கேள்விப்பக்கத்துக்கும் இடையில் பொருத்தமான ஒரு சமநிலையொன்றை எடுத்துவரவே இந்த உத்தி விரும்புகின்றது. பாதிக்கப்பட்டுள்ள மக்களிடையே மானிட மூலவள அபிவிருததியின் வாய்ப்புக்கள் மற்றும் பயன்கள் குறித்த சமூக மற்றும் தனிநபர் விழிப்புணர்வைத் தூண்டுவதன்மூலம் அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தினை மேம்படுததுவதே இதன் நோக்கமாகும். இதன் மூலம் மானிட மூலவள அபிவிருத்தி தொடர்பாக அவர்களிடமிருந்து வரக்கூடிய கேள்வியை குறைத்விடக்

கூடிய சமூககலாச்சாரத் தடங்கல் களையும் ஏனைய இடையூறுகளையும் வெற்றி கொள்வதற்கான ஆற்றலை அவர்களுக்கு பெற்றுக் கொடுக்க முடியும். இத்தகைய கேள்வியை நிர்ணயம் செய்து வரும் விருப்பியங்கள் மற்றும் மனப்பாங்குகள் என்பவற்றில் தாக்கத்தை எடுத்துவரும் வழிமுறை களுக்கூடாக இதனை சாதித்துக் கொள்ள முடியும். இந்த வகையில், ஜகார்த்தா நடவடிக்கைத் திட்டம் ஒரு முக்கிய பங்களிப்பினை வழங்குகின்றது.

### நிறுவன ரீதியான ஏற்பாடுகளின் தேவை

கேள்வி நோக்கிலான உப-உத்தி யொன்றை செயற்படுத்துவதற்கு, பல் வேறு நிறுவனரீதியான ஏற்பாடுகளால் நிலைநிறுத்தப்படும் கேள்வியைத் தூண்டும் அல்லது உருவாக்கும் பல உபகரணங்களின் பாவனை அவசியப் படுகின்றது. இலக்குக் குழுவினரிடையே மானிட மூலவள அபிவிருத்தியை தூண்டி விடுவதற்கும், வெகுஜனப் பங்கேற்பினை ஒன்று திரட்டுவதற்கும் குழுக்களில் 'இயலச் செய்பவர்களை' பயன்படுத்திக் கொள்ள முடியும். சமூகத்தின் ஒடுக் கப்பட்ட பிரிவினரிடையே மானிட மூலவள அபிவிருத்திக்கான கேள்வியைத் தூண்டு வதற்கான மிக முக்கியமான வழிமுறை களாக சனசமூக நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் தொண்டார்வம் என்பன இருந்து வருகின்றன. ஏற்கனவே குறிப்பிடப் பட்டது போல, நுண்மட்டத்தில் வெளிக் களச் செயற்பாடுகளுக்கான முகவரகங் களுக்கிடையேயான தொடர்புபடுத்தல், செலவுத்தாக்கமான ஒரு வழிமுறையாக இருந்து வருவதுடன், ஒவ்வொரு இலக்குக்குழுவின் மீதும் உச்சமட்டத் தாக்கத்தினை எடுத்து வருவதற்கான ஒரு வழியாகவும் உள்ளது. இந்த நடைமுறை மானிட மூலவள அபிவிருத்தி குறித்த மாற்றுப் பொறிமுறைகள் செழித் தோங்குவதற்கு இடமளிக்கும் அதே வேளையில், பொதுத்துறை, தனியார் துறை மற்றும் அரசு சாராத துறைகளில் செயற்பட்டு வரும் முகரகங்களுக்கும் நிறுவனங்களுக்குமிடையே மானிட மூல வள அபிவிருத்தி குறித்த ஒவ்வொன் றுக்கும் உரிய பங்களிப்புக்களை திட்டமிட்ட முறையில் பகிர்ந்தளிப்பதற்கும் வகை செய்கின்றது. இதன் மூலம், பல முகவரகங்கள் ஒரே வேலையை மேற்கொள்ளும் நிலை தவிர்க்கப் படுவதுடன், பொதுத்துறை மூல வளங்களுக்கு குறை நிரப்புச் செய்வ தற்காக சமூக மற்றும் தனியார் மூல வளங்கள் கண்டறியப்படும் ஒரு நிலை தோன்றும். மானிட மூலவள அிபிவருத்தியின் முகவரகங்களுக்கி டையிலான தொடர்புபடுத்தலுக்கென ஜகார்த்தா நடவடிக்கைத் திட்டம் உருவாக்கியுள்ள புதிய கருதுகோள், அரசு சாரா அமைப்புக்களையும், தனியார் துறை நிறுவனங்களையும் பொதுத்துறை முகவரகங்களின் முனைப் பான பங்காளர்களாக உருவாக்கு வதனையே நோக்கமாகக் கொண்டுள்ளது. இது பாரம்பரிய அணுகு முறையிலிருந்து மாறுபட்டதாகும்.

மானிட மூலவள அபிவிருத்தியின் உள்ளூர் மட்டத் திட்டமிடல் மற்றும் நிகழ்ச்சித்திட்டமிடல் என்பவற்றிலும், "கீழேயிருந்து மேல் நோக்கி" திட்டமிடலிலும் வெகுஜனக் பங்கேற் பினைப் பெற்றுக்கொள்வது, மிகவும் தாக்கமான ஒரு நிறுவனரீதியான ஏற்பாடாக இருந்து வருகின்றது. கேள்வி நோக்கிலான அணுகுமுறைக்கு ஆதரவாக இதனைப்ப யன்படுத்திக் கொள்ள முடியும். வெகு ஜனப் பங்கேற்புக்கான வசதியான, நிறுவனரீதியான கட்டமைப்பொன்றை உருவாக்குவதற்கு அதிகாரப் பகிர்ந் தளிப்பும், பன்முகப்படுத்தப்பட்ட அமுலாக்கலும் அவசியமாகும்.

செயல்தாக்கத்தை அதிகரிக்கும் அதேவேளையில், செலவுகளைக் குறைத்துவரும் பொறிமுறை களாகவும் இந்த நிறுவனரீதியான ஏற்பாடுகளை நோக்க முடியும். பெருமளவுக்கு பன்முகப்படுத்தப்பட்ட பங்கேற்பு அணுகுமுறைகள் விநியோக முறையை விருத்தி செய்வதன் மூலமும், சிக்கன நடவடிக்கைகள் மூலமும், அலகுச் செலவுகளை குறைத்து விடுவதன் மூலமும், சேவைகளை நிதிப்படுத்துதல் மற்றும் விநியோகித்தல் என்பவற்றில் தனியார் முன்முயற்சிகளை ஊக்கு விப்பதன் மூலமும் தற்போதைய மூலவளங்களின் மிகவும் திறமையான பயன்பாட்டினை அதிகரிக்கச் செய் கின்றன. சமூகப் பங்கேற்பும் சுய உதவி முறைகளும் செலவுகளைக் குறைத்து, விரயத்தை ஒழிக்கக்கூடியவை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

### மாமூஅ தொடர்பான ஒருங்கிணைந்த கருப்பொருள் அணுகுமுறையை ஒரு நாட்டின் ஒட்டுமொத்த அபிவிருத்திக்கான ஓர் உத்தியாக கருத முடியுமா?

ஒருங்கிணைந்த கருப்பொருள் அணுகுமுறை, ஒட்டுமொத்த அபிருத்தி அணுகுமுறையொன்றாக அல்லது குறைந்தபட்சம் அதனுடன் பெருமளவுக்கு சம்பந்தப்பட்டுள்ளது என்று கருதப் படுவதற்கு தகைமை பெற்றுள்ளது என்று பல அடிப்படைகளில் வாதிட முடியும்.

முதலில், அபிவிருத்திக் கொள்கை உருவாக்க கட்டத்தின்போது, ஒருங் கிணைந்த கருப்பொருள் அணுகுமுறை, நீண்ட காலமாக தீர்த்து வைக்கப்படா திருக்கும் அபிவிருத்தி தொடர்பான கொள்கைத் தடுமாற்றங்களை தீர்த்து வைப்பதில ஆக்கபூர்வமான ஒரு பங்கினை வகிக்க முடியும். வெளியீட்டு வளர்ச்சியின் அளவுரீதியான குறிக்கோள் களுக்கும் சமூக சேமநல நோக்குக்கும் இடையிலான முரண்பாடு நீண்ட காலமாக கொள்கை கர்த்தாக்களினதும் அபிவிருத்திச் சிந்தனையாளர்களினதும் கவனத்தைப் பெற்று வந்துள்ளது. ஐ-நா.வின் முதலாவது அபிவிருத்தித் தசாப்தத்தின் ஏமாற்றமளிக்கும் அனுபவங்களின் பின்னர், 1970களில் ஆரம்பமாகிய "பகிர்வுடன் கூடிய வளர்ச்சி" குறித்த கலந்துரையாடல், இந்த பிரிவுகளுக்கிடையில் ஒரு சமநிலையைக் கண்டறிவதற்கான ஒரு முயற்சியாக இருந்தது. மானிட மூலவள அபிவிருத்தி குறித்த ஒருங்கிணைந்த அணுகுமுறை.அது குறித்த மேற்போந்த பகுப்பாய்வு எடுத்துக் காட்டுவது போல, இந்தக் கலந்துரையாடலின் உடலாகவும் ஆன்மாவாகவும் இருந்து வருகின்றது. மேலும், "பகிர்வுக்கூடாக வளர்ச்சியை" எடுத்துவரக்கூடிய சாத்தியப்பாடு களையும் அது எடுத்துக்காட்டுகின்றது. தர ரீதியிலான குறிக்கோள்களில் நீண்ட காலமாக நிலவி வரும் ஒரு முரண் பாட்டைத் தீர்த்து வைப்பதிலும் இது முக்கிய பங்கினை வகிக்கின்றது. இது பொருளாதார வளர்ச்சிக்கும் சமூக நீதிக்கும் (அல்லது பகிர்வு சமத்து வத்துக்கும்) இடையிலான முரண் பாடாகும். இந்தப் பின்னணியில் இலக்குக்குழு உத்தி, சமத்துவம், சமூகநிதி, நியாயமான பகிர்வு என்பவற்றுக்கான செயற்பாட்டு

வழிமுறையை வழங்கி வருகின்றது என்று கருதப்படக்கூடாது; அது மானிட மூலவள அபிவிருத்தியில் பொதுவாக தமக்குச் சேர வேண்டிய பங்குகளை பெற்றுக் கொள்ளாதிருக்கும் ஒடுக்கப்பட்ட மக்களின் அந்தஸ்தினை உயர்த்துவதன் மூலம் வாய்ப்புக்களின் சமமான பகிர்வு குறித்த அக்கறைகளை, தனிநபரின் அபிவிருத்திக்கான உள்ளார்ந்த ஆற்றலின் உச்சமட்ட நிறைவேற்றத்துடன் ஒரு சமநிலைக்கு கொண்டு வருகின்றது. இங்கு மிக முக்கியமாக குறிப்பிட வேண்டியது என்னவென்றால், இந்த உத்தி, உச்ச மட்ட மூலவளப் பாவனை, உயர் அளவிலான சமூக ஆதாயங்கள், ஊழியத்திறன் மேம்பாடு, பன்முகப்பட்ட தாக்கங்களின் உருவாக்கம் என்பவற்றின் மூலம் உற்பத்தித் திறன் அதிகரிப்புக்கும் வளர்ச்சிக்கும் பங்களிப்புச் செய்து வரும் அதே நேரத்தில், சமூக நீதியையும், பகிர்வு நீதியையும்மேம்படுத்தி வருகின்றது என்பதாகும். கருப்பொருள் அணுகு முறை மேற்சொன்ன முரண்பாடுகளை தீர்த்து வைக்க முயன்று வருகின்றது; மேலும் "ஒன்றில் இரண்டு" என்ற மானிட மூலவள அபிவிருத்தியின் ஐக்கியப்பட்ட குறிக்கோளை முன் வைப்பதன் மூலம் "வெளியீட்டு வளர்ச்சி எதிர் தொழில்வாய்ப்பு" என்ற விடயத்தில் நிலவி வரும் முரண்பாட்டைத் தீர்க்கவும் அது முயல்கின்றது. தேசிய அபிவிருத்திக்கான கொள்கை உருவாக்கம் மற்றும் திட்டமிடல் என்பவற்றில் காணப்படும் மையமான பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் அது வகித்து வரும் முக்கியமான பங்குக்கு உரிய இடம் அளிக்கப்படுதல் வேண்டும்.

இரண்டாவதாக, அபிவிருத்திக் குறிக்கோள் தொடர்பாக அது அறிமுகப் படுத்தியுள்ள புதிய கருதுகோளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுதல் வேண்டும். பொருளாதார அபிவிருத்திச் சிந்தனையின் வரலாற்றில் அது ஒரு மைல் கல்லாகும். மேலைத்தேச வரலாற்று ரீதியான அபிவிருத்தி மாதிரியைப் பின்பற்றி, அபிவிருத்தி என்பது கைத்தொழில் துறையின் வளர்ச்சிக்கு இணையானது எனக் கருதுவதுடன் இணைந்த வகையில், சுமார் அரை நூற்றாண்டுக்கு முன்னர் பொருளாதார அபிவிருத்தி குறித்த சிந்தனை தோன்றியது. பின்னர் 1950 களிலும் 1960களிலும் இடம்பெற்ற குடித்தொகையின் பேரளவிலான பெருக்கத்தின்போது, அனைத்துப் பொருட்களிலும் சேவைகளிலும் பற்றாக்குறை நிலவிவந்த ஒரு சூழ்நிலையில், அபிவிருத்தி என்பது, (ஒரு துறையின் மட்டுமன்றி) பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளினதும் (மொதேஉ) வெளியீட்டு வளர்ச்சிக்கு இணையானதாக கருதப்படத் தொடங்கியது. இதனையடுத்து, ஐ.நா.வின் முதலாவது அபிவிருத்தி தசாப்தத்தின் பெறுபேறுகள் ஏமாற்றமளிப்பவையாக இருந்த ஒரு சூழ்நிலையில், அபிவிருத்தி என்ற பதத்துக்கான வரைவிலக்கணம் மீண்டும் ஒரு முறை மாற்றியமைக்கப்பட்டது; சமூக முன்னேற்றத்தை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை அபிவிருத்தி செய்வதற்கு சிலர் மேற்கொண்டிருந்த முயற்சிகளும் இதற்கு பங்களிப்புச் செய்திருந்தன. எனவே, இந்தப் பின் புலத்தில், "அபிவிருத்தி பொருளாதார வளர்ச்சி சமூக அபிவிருத்தி" என்ற வரைவிலக்கணம் தோன்றியது. ஒருங்கிணைந்த கருப்பொருள் அணுகுமுறை, வளர்ச்சியிலும் அபிவிருத்தியிலும் சமூக அபிவிருத்தி ஒரு மேலதிக பங்கினை அன்றி, ஒருங்கிணைந்த பங்கினை வகித்து வரச் செய்வதன் மூலம், பொருளாதார அபிவிருத்திச் சிந்தனையை இந்த மூன்றாவது கட்டத்துக்கும் அப்பால் எடுத்துச் செல்கின்றது. பொருளாதார அபிவிருத்திச் சிந்தனையின் நான்காவது கட்ட பரிணாம வளர்ச்சி என இதனைக் குறிப்பிடலாம். இந்தக் கட்டத்தில், மானிடக் காரணி அபிவிருத்தியின் குறிக்கோள், மனிதர்களின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்தி, பரஸ்பரம் ஆதரவளித்துக் கொள்ளக்கூடிய விதத்தில் சிறந்த உற்பத்திசார் முகவர்களாக அவர்களை உருவாக்குவதாகும். இது புதிய மானிட மூலவள அபிவிருத்தி அணுகுமுறையை ஒட்டுமொத்த அபிவிருத்திக்கான ஒரு பிரதான அணுகுமுறையாக மாற்றியமைக்கின்றது.

மூன்றாவதாக, கருப்பொருள் அணுகுமுறை அபிவிருத்திப் பிரச்சினைகள் அனைத்தையும் மிக விரிவான முறையில் உள்ளடக்கியுள்ளது; ஆனால், அதற்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். சமூக அபிவிருத்தி தொடர்பான அனைத்துப் பிரச்சினைகளையும் அது உள்ளடக்கிக் கொள்ளும் அதே வேளையில், மூன்று தலைப்புக்களின் கீழ் வரும் பொருளாதார அபிவிருத்தி மற்றும் வளர்ச்சி என்பன தொடர்பான பரந்த வீச்சிலான பல பிரச்சினைகளை அது நேரடியாக உள்ளடக்குகின்றது. மேலும், அது, பரவச் செய்யும் விளைவுகள் மற்றும் பெருக்கல் விளைவுகள் என்பவற்றுக் கூடாக, மறைமுகமாக, ஒட்டுமொத்த அபிவிருத்தியின் பல பரிமாணங்களை உள்ளடக்கியிருப்பதனை காண முடிகிறது. எனவே, அதன் மிக விரிவான உள்ளடக்கத்தைக் கொண்டே ஒட்டுமொத்த பொருளாதார அபிவிருத்திக்கான ஓர் அணுகுமுறையாக அது உரிமை கோர முடியும்.

நான்காவதாக, வளர்ச்சி நோக்கிலான கூட்டு மொத்த உற்பத்திக் கருமத்தின் கண்ணோட்டத்தில், ஒருங்கிணைந்த கருப்பொருள் அணுகு முறையை மதிப்பீடு செய்யமுடியும். வெளியீட்டு (மொஉஉ) வளர்ச்சியை நிர்ணயிக்கும் அதன் ஐந்து மாறிகளில், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் என்ற மாறி பெருமளவுக்கு செயல்முனைப்பு மிகுந்த மாறியொன்றாக கருதப்படுகின்றது. அது மூன்று கருப்பொருள்களில் ஒன்றினை உள்ளடக்கியிருப்பதனால், அதன் பிரச்சினைகளில் பல, ஒருங்கிணைந்த கருப்பொருள் அணுகுமுறையின் நேரடி மற்றும் ஆழமான அக்கறைக்குரியவையாக இருந்து வருகின்றன. அதேபோல, கூட்டுமொத்த உற்பத்திக் கருமத்தின் மானிட மூலவள மாறியின் பிரச்சினைகள் அனைத்தும் ஒருங்கிணைந்த கருப் பொருள் அணுகுமுறையின் மைய அக்கறைக்குரிய விடயங்களாக இருந்து வருகின்றன. ஒழுங்கமைப்பு, நிறுவனங்கள் மற்றும் சமூக கலாச்சார காரணிகள் என்பன பிறிதொரு மாறியாக இருந்து வருகின்றது. ஆனால், இதன் பிரச்சினைகள், மிக அரிதாகவே அபிவிருத்தித் திட்டங்களில் தனியாக எடுத்து நோக்கப்படுகின்றன. எனினும், ஜகார்த்தா திட்டம் அதற்கு மிக முக்கியமான உபாய ரீதியிலான பங்குகளை குறித்தொதுக்குகின்றது. ஒருங்கிணைந்த கருப்பொருள் நிகழ்வுப் போக்குகளில் பெரும்பாலானவை நிறுவனங்களினால் தூண்டப்படுபவையாக இருந்து வருகின்றன. வாழ்க்கைத் தரத்தின் அடிப்படையில் சுற்றுச்சூழல் தொடர்பாக இந்த

## அபிவிருத்தி வாய்பாடுகள் 1960–90

| | முதனிலை வாய்பாடுகள் | முக்கிய இடையூறுகள் | உத்தேசிக்கப்பட்ட உத்தி | மாற்று வாய்பாடுகள் |
|---|---|---|---|---|
| 1960 – 70 | வளர்ச்சியை உச்சப்படுத்தல் | உறிஞ்சும் ஆற்றல்<br>குறைந்த சேமிப்புக்கள் | உதவி<br>வெளிநாட்டு முதலீடு<br>மானிட மூலதன உருவாக்கம் | வளர்ச்சிக் கட்டங்கள்<br>சோஷலிஸ பொருட்குவிப்பு |
| 1970 – 80 | அமைப்புவாதம் | அமைப்பு ரீதியான இறுக்கம்<br>சந்தை குறைபாடுகள்<br>உரித்துடைமை மாதிரிகள்<br>உள்நாட்டு அரசியல் | வளர்ச்சியுடன் கூடிய மீள்பகிர்வு<br>அடிப்படைத் தேவைகள்<br>வேலைவாய்ப்பு உருவாக்கம் | அரச சோஷலிஸம்<br>தங்கியிருத்தலும்<br>நவ மார்க்சிசமும் |
| 1980 – 90 | நவ தாராளவாதம் | சென்மதி நிலுவை சமனின்மை<br>சந்தை இடையூறுகள்<br>அரசு ஒதுக்கப்படல்<br>வாடகை கோரல் | தாராளமயமாக்கப்பட்ட சந்தைகளும் விலைகளும்<br>அரசின் குறைக்கப்பட்ட பங்கேற்பு | திருத்தியமைக்கப்பட்ட அமைப்புவாதம்<br>மனித முகத்துடன் கூடிய சீராக்கம் |
| 1990 | மானிட அபிவிருத்தி<br>வறுமை ஒழிப்பு | பொருளாதார மந்தம்<br>தேக்கம்<br>வறுமை பரவுதல் | மானிட அபிவிருத்திக்காக அடிப்படைச் சேவைகளில் முதலீடு<br>ஊழியச் செறிவு<br>பாதுகாப்பு வலைகள் | நவ-தாராள வாதம் |

அணுகுமுறை பெருளவுக்கு கரிசனை காட்டி வருகின்றது. இதற்கூடாக, இயற்கை மூலவளங்கள் என்ற மாறியின் மீது ஒரு முக்கியமான தாக்கத்தினைக் கொண்டிருக்க முடியும். கருப்பொருள் சார்ந்தஅணுகுமுறை செயற்படுத்தப்படு மிடத்து, எஞ்சியிருக்கும் மாறியான மூலவளத்தின்மீது பலப்படுத்தும் ஒரு தாக்கத்தினை எடுத்து வரக்கூடியதாக அது இருந்து வரும் பல்வேறு உப உத்திகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றின் கீழ், மூலதனத்தின் ஒத்துழைப்புக் காரணியான ஊழியத்தின் செயல்திறன் உயர் வடைவதனால், மூலதனத்தின் பயன்பாட்டு மட்டமும் உற்பத்தித் திறனும் அதிகரிக்கின்றன.

ஐந்தாவதாக, ஒருங்கிணைந்த கருப்பொருள் அணுகுமுறையின் நிகழ்ச் சித்திட்டங்கள், பொருளாதார அபிவிருத்தி நிகழ்வுப்போக்கு மற்றும் திட்டமிடல் நடைமுறைகள் என்பவற்றில் முக்கியமான தாக்கங்களை எடுத்துவரக் கூடியவையாக இருந்து வருகின்றன.

உறுதியான நியதிகள், மூலதன-ஊழிய விகிதங்கள், மூலதன வெளியீட்டு விகிதங்கள், சேமிப்பு விகிதம், முதலீட்டு மாதிரி மற்றும் முன்னுரிமைகள், செய்திட்ட மதிப்பீடு போன்றவற்றில் இந்த தாக்கங்கள் இடம்பெறும். பேரண்ட பொருளியல் மாறிகள் இவற்றால் நிர்ணயிக்கப்பட்டு வருவதனால் ஒருங்கிணைந்த கருப்பொருள் அணுகுமுறை, இந்த மாறிகளின் நடத்தையில் மறைமுகமாக செல்வாக்குச் செலுத்தும் ஆற்றலைப் பெற்றுக் கொள்கின்றது.

### ஒருங்கிணைந்த கருப்பொருள் அணுகுமுறையை பின்பற்றுவதில் காணப்படும் இடையூறுகள்

இந்த வகையைச் சேர்ந்த தீவிரமான கருத்துக்களைக் கொண்ட ஓர் அணுகுமுறையைப் பின்பற்றுவதற்கு மிக உறுதியான ஓர் அரசியல் அர்ப்பணிப்புணர்வு அவசியமாகும். இங்கு ஒரு பிரச்சினை உள்ளது; அதாவது, இறுதியில் இதன் பயனாளிகளாக இருக்கக்கூடிய மக்கள் பிரிவினரால் மானிட மூலவள அபிவிருத்திக்கான உறுதியான ஒரு கேள்வியை எடுத்துவர முடிவதில்லை; இதன் சார்பில் ஓர் அரசியல் செல்வாக்கினைச் செலுத்தும் ஆற்றலும் அவர்களிடமில்லை. வளர்ச்சிக் குறிக் கோளை ஆதரித்துப் பேசுவதற்காக முதலாளித்துவவாதிகளும் முதலீட்டாளர் களும் இருந்து வருகின்றனர். எளிமையான சமூக நலனோம்புகை மற்றும் மீள் பகிர்வு நிகழ்ச்சித் திட்டங்களுக்காக, அரசியல் கட்சி களிலிருந்து-முக்கியமாக எதிர்க் கட்சியில் இருக்கும் அரசியல் கட்சிகளிலிருந்து-உடனடியாக கிளர்ச்சிகள் நடத்தப்படும். ஒருங்கிணைந்த கருப் பொருள் அணுகுமுறை ஏற்பினைப் பெற்றுக் கொள்வதற்காக புத்திஜீவிகள், தொழில்சார் நிபுணர்கள், ஆன்மீக மற்றும் கலாச்சார தலைவர்கள், சமூகத்தின் கருத்துத் தலைவர்கள் போன்றோரின் சிந்தனைகளைக் கவனத்தில் எடுக்க

வேண்டும். கலந்துரையாடலை துவக்கி வைத்து, தொடர்ந்து கலந்தாராய்வினை மேற்கொண்டு, ஆராய்ச்சி மற்றும் பரீட்சார்த்தம் என்பவற்றுக்கூடாக விவாதத்தை மெருகூட்டும் பொறுப்பு அவர்களைச் சார்ந்துள்ளது. இந்தச் செய்தியையும் அவர்களே தாங்கிச் செல்ல வேண்டியவர்களாக உள்ளார்கள்.

மானிட மூலவள அபிவிருத்தி தொடர்பான ஒருங்கிணைந்த அணுகு முறை பெரும்பாலான தற்கால அபிவிருத்தி மாதிரிகளுடன் பொருத்திச் செல்லக்கூடியதாக இருந்தபோதிலும், முக்கியமான திட்டமிடல் கருதுகோள் ஒன்றாக இதனைப் பின்பற்றுவதற்கு சில இடையூறுகள் இருந்து வருகின்றன. தேசிய அபிவிருத்திக் கண்ணோட்டத்தில் நோக்கும் பொழுது, மானிட மூலவள அபிவிருத்திக்கும் தேசிய அபிவிருத்திப் பிரச்சினைகளுக்கும் இடையிலான கரும அடிப்படையிலான உறவுகளைப் பிரிப்பது அவசியமாகும். மானிட மூலவள அபிவிருத்தியை நடுமையமாக கொண்ட திட்டமிடல் நடைமுறையொன்றுக்கு அவசியமாக திட்டமிடல் உபகரணங்கள் இன்னமும் வகுக்கப்படவில்லை. அதுவரையில், தேசிய அபிவிருத்தி முயற்சியில் மானிட மூலவள அபிவிருத்தி மைய ஸ்தானத்தைப் பெறமுடியாது.

மானிட மூலவள அபிவிருத்தி மீதான முதலீடுகளின் நீண்டகால, மறைமுக பொருளாதார, சமூக ஆதாயங்களை அளவிடுவதற்கு நன்கு வளர்ச்சியடைந்த பொறிமுறைகள் காணப்படவில்லை. ஒருங்கிணைந்த கருப்பொருள் அணுகுமுறை, முக்கியமான திட்டமிடல் கருதுகோள் ஒன்றாக உயர்த்தப்படுவதற்கு இது இடையூறாக இருந்து வருகின்றது. எனினும், தீவிரமான சிந்தனைக்கான ஒரு தயார் நிலையும், அபிவிருத்தி மாற்று வழிகளுக்கான இடையறாத தேடலும் இடம்பெற்று வந்தால், ஒருங்கிணைந்த மானிட மூலவள அணுகுமுறையின் சாராம்சத்தினையும், முக்கியமான அம்சங்களையும் அபிவிருத்தித் திட்டங்களில் ஒருங்கிணைத்துக் கொள்ள முடியும். இந்திய திட்டமிடல்ஆணைக்குழு தயாரித்துள்ள "சமூக நிலைமாற்றத்தை நோக்கி - எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கான (1990-1995) அணுகுமுறை" என்ற தலைப்பிலான மிக முக்கியமான கொள்கை ஆவணத்தை இங்கு விஷேசமாக குறிப்பிட முடியும்.

மற்றொரு தடங்கல், பொதுவாக மானிட மூலவள அபிவிருத்தி மீதான முதலீடுகள் நீண்டகாலத்தன்மை வாய்ந்தவையாகவும், மிக நீண்ட கருக்கட்டல் காலப் பிரிவுகளைக் கொண்டவையாகவும் இருந்து வருவதாகும்; பெரும்பாலான நாடுகளில் குறுங்கால அல்லது நடுத்தரகால அடிப்படையிலேயே திட்டமிடல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆனால், அண்மையில் பங்களாதேஷில் இடம் பெற்றது போல, நீண்ட காலத் திட்டமிடல் முறைக்கு மாறிச்செல்லும் போது மானிட மூலவள அபிவிருத்திக்கு, மத்திய திட்டமிடல் கருதுகோள் ஒன்றாக ஒருங்கிணைந்த கருப்பொருள் அணுகு முறையைப் பின்பற்றுவது சாத்தியமாகும். இந்த வகையில், பங்களாதேஷின் இருபதாண்டு கால திட்டத்தின் முதல் கட்டமான நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் (1990-1995) கர்த்தாக்கள், ஜகார்த்தா நடவடிக்கைத் திட்டத்துடன் பெருமளவுக்கு ஒத்துப் போகக்கூடிய ஒரு திட்டத்தை (ஜகார்த்தா திட்டத்தை நன்கு அறிந்து கொள்ளாத நிலையிலேயே) தயாரித்துள்ளனர். நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தி மாற்று வழிகளுக்கான தேடலில், ஒருங்கிணைந்த கருப்பொருள் அணுகுமுறை ஒரு தடைக்கல்லாக இருந்து வரவில்லை என்பதனை இது காட்டுகின்றது.

**புதிய மாமூஅ கருதுகோளின் தத்துவ மற்றும் சித்தாந்த ரீதியான உள்ளடக்கங்கள்**

அபிவிருத்தி குறித்து பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன; ஆனால், இத்தகைய பெரும்பாலான அண்மைக்கால அனுபவங்களில் மானிட பொருத்தப்பாடு வரையறுக்கப்பட்டதாக இருந்து வந்ததுடன், (பொருள்சார்ந்த விழுமியங்கள் மற்றும் தனிநபர்வாத அணுகுமுறை போன்ற) குறுகிய அபிவிருத்திக் குறிக்கோள்களே பின்பற்றப்பட்டு வந்துள்ளன. இவற்றுடன் இணைந்த வகையில், சமூகத்தின் குறிப்பிட்ட சில பிரிவினர் புறமொதுக்கப்பட்டு வந்திருப்பதுடன், பேரளவிலான வறுமையும் விடாப்பிடியாக நிலைத்து வந்துள்ளது. இதனை தற்போதைய அபிவிருத்திக் கொள்கையின் நோய்க்குறியாக இனங் கண்டுள்ள ஜகார்த்தா நடவடிக்கைத் திட்டம், "மனித முகத்துடன் கூடிய அபிவிருத்தி" என்ற புதிய கண்ணோட்டத்துடன், மானிடக் காரணியை அபிவிருத்தி நிகழ்வுப்போக்கின் மைய ஸ்தானத்துக்கு எடுத்து வருவதற்கான ஒரு புதிய முயற்சியை துவக்கி வைத்துள்ளது.

எனவே, மானிட மூலவள அபிவிருத்தி குறித்த புதிய கருது கோளினை மனிதாபிமான தத்துவத்தின் அடிப்படையில் மதிப்பிடுவது அவசியமாகும். பொருளாதார முறைமையின் அபிவிருத்தி, மனிதனுக்கு எது சிறந்தது என்ற கேள்வியின் அடிப்படையில் இப்பொழுது மேற்கொள்ளப்பட்டு வரவில்லை என்றும், முறைமையின் வளர்சிக்கு எது உகந்தது என்ற அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றும் புதிய மனிதாபிமானத்தின் தீவிர ஆதரவாளர்களில் ஒருவரான எரிக் ப்ரொம் கருதுகின்றார். சமூக குணாம்சம் மனிதாபிமானமற்ற முறையில் மாற்றியமைக்கப்பட்டுள்ள தற்கும் புதிய கைத்தொழில் சமயத்தின் எழுச்சிக்கும் இங்கு எதிர்ப்புத் தெரிவிக்கப் படுகின்றது; அத்துடன் பொருட்களை மையமாகக் கொண்டன்றி,மனிதர்களை மையமாகக் கொண்ட ஒரு சமூகம் உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் முன் வைக்கப்படுகின்றது. மாமூஅ குறித்த ஒருங்கிணைந்த அணுகுமுறையும் இதே நோய்க்குறியை அடையாளம் காட்டுவதுடன், இதே விதமான எதிர்ப்பைத் தெரிவித்து, இதே மாதிரியான கோரிக்கையையும் முன் வைத்துள்ளது. நிவாரண நடவடிக்கைகள் தொடர்பாகவும் கூட இந்த இரு சிந்தனைகளுக்கும் இடையில் சில பொதுவான கருத்துக்கள் காணப் படுகின்றன. மானிதாபிமான கருததுகோளின் ஆதரவாளர்களில் ஒருவரான லூவிஸ் மம்போர்ட், பொருளாதாரத்தையும் சமூகத்தையும் நிர்வகிப்பதற்கு பன்முகப்படுத்தலையும், நிறுவன ரீதியான ஏற்பாடுகளையும் ஆதரித்துப் பேசுகின்றார். ஏற்கனவே சுட்டிக் காட்டப்பட்டது போல, ஒருங்கிணைந்த கருப்பொருள் அணுகுமுறையின் கீழ், மானிட மூலவள அபிவிருத்தி

( 21 பக்கம் பார்க்க)

# இலங்கையில் மனித மூலவளங்களின் அபிவிருத்தி - ஒரு நோக்கு

சுதத்த ரணசிங்க

(முத்த விரிவுரையாளர், மேலாண்மை பட்டப் படிப்பு நிறுவனம், ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகம்)

(டிசம். 1993/ ஜன. 1994 இதழ் தொடர்ச்சி)

இவ் அட்டவணையின் பிரகாரம், அனுமதிக்குத் தகைமை பெற்றுள்ள மாணவர்களில், சராசரியாக 20 சதவீதத்தினர் கலை, வர்த்தகம், முகாமைத்துவம் போன்ற கற்கைகளுக்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். இரண்டு விஞ்ஞானக் கற்கை நெறிகளைப் பொறுத்தவரையில், 1986ம் ஆண்டு தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளுள் ஏறக்குறைய 60 சதவீதத்தினர் பௌதீக விஞ்ஞான நெறிக்கும், 25 சதவீதத்தினருக்கும் சற்று அதிகமான தொகையினர் உயிரியல் விஞ்ஞான நெறிக்கும் அனுமதி பெற்றனர். இதன்படி, பல்கலைக்கழக அனுமதி பெற முடியாத பிரச்சினை, கலைத் துறைக்குத் தகைமை பெற்ற பெரும்பாலோரையே முக்கியமாகப் பாதித்துள்ளது போல் தோன்றுகின்றது. ஏற்கனவே அவதானிக்கப் பட்டுள்ளதைப் போன்று, இவர்களில் பெரும்பாலோர் கிராமப் பகுதிகளில் குறைந்த வருமானங்களைப் பெறுகின்ற குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர். தகைமை பெற்றும், பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத குறிப்பிட்ட தொகை மாணவர்கள், பல்கலைக்கழகத்தின் குறிப்பிட்ட சில கற்கை நெறிகளுக்கு வெளிவாரி மாணவர்களாக அனுமதியைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆயினும், கடந்த சில வருடங்களாக வெளிவாரி மாணவர்களின் செயலாற்றத்தினை அவதானிக்கும்போது, மிகவும் குறைவான தொகையினரே இப்பரீட்சைகளில் சித்தியடைகின்றனர் என்பதை அறியக் கூடியதாகவுள்ளது. உதாரணமாக, 1985/86ல் சட்டமாணிக் கற்கை நெறிக்கு வெளிவாரி மாணவர்களாக பதிவு செய்திருந்த 2261 பரீட்சார்த்திகளில், 337 பேர் மட்டுமே பரீட்சைக்குத் தோற்றி, அதிலும் 71 பேர் மட்டுமே அப்பரீட்சையில் சித்தி அடைந்திருக்கின்றனர்.

கலைமாணிக் கற்கைகளைப் பொறுத்தவரையில், 1984-87ல் வெளிவாரி மாணவர்களாகப் பதிவு செய்வோரின் தொகை சராசரியாக ஆண்டொன்றுக்கு 5000ஆக இருந்தது. இத் தொகையில் ஏறக்குறைய அரைவாசிப் பேர் மட்டுமே பரீட்சைக்குத் தோற்றி, அதிலும் சராசரியாக 1000ற்கும் குறைவானோரே பரீட்சைகளில் சித்தி பெற்றனர்.

உயர் கல்வியில் தற்போதுள்ள மட்டுப்பாடுகள் எவ்வாறு இருந்த போதிலும், பலதரப்பட்ட உயர்தொழில் துறைகளில் உயர்கல்விக்கான வசதிகளை இப் பல்கலைக்கழகங்கள் வழங்கக் கூடியதாக இருக்கின்றன. 3-5ஆண்டுகள் கால அளவினைக் கொண்ட பட்டப்படிப்புகளில் ஏறக்குறைய 18,000 மாணவர்களுக்கு இலங்கையின் 8 பல்கலைக்கழகங்களும் கல்வி, உயர் தொழில் கல்வி போன்றவற்றை வழங்குகின்றன. 1980களின் பிற்பகுதியில், பல்கலைக் கழகத்தின் எல்லாக் கற்கை நெறிகளுக்கும் அனுமதிக்கப் பட்டவர்களின் தொகை வருடாந்தம் ஏறக்குறைய 6000ஆக இருந்தது. இத்தொகையினரில் பட்டப்படிப்பினை பூர்த்தியாக்கியவர்களின் தொகை சராசரியாக 5000ஆகவிருந்தது.

வெவ்வேறு கற்கை நெறிகளிலும் சித்தியடைகின்ற மாணவர்களின் தொகை பற்றிய தரவுகளின்படி, 1985லும் 1986லும் சித்தியடைந்த பட்டதாரிகளுள், கலைப்பட்டதாரிகள் முறையே 40 சதவீதமாகவும், 45 சதவீதமாகவும் இருந்துள்ளனர். இவர்களுள் பெண்களே பெரும்பான்மையினராக இருந்தனர். அடுத்தபடியாக அதிகளவிலான பட்டதாரிகள் விஞ்ஞானப் பிரிவில் இருந்தனர். அதே சமயம் வர்த்தக, முகாமைத்துவக் கற்கைகளில் சித்தியெய்திய பட்டதாரிகளின் தொகை 1985ம் ஆண்டிலும், 1986ம் ஆண்டிலும் முறையே 16 சதவீதமாகவும், 14 சதவீதமாகவும் இருந்தது. 1985ல் சித்தியடைந்த பட்டதாரிகளுள் மருத்துவப் பட்டதாரிகளும், பொறியியல் பட்டதாரிகளும் முறையே 8.5 சதவீதமாகவும், 5.5 சதவீதமாகவும் இருந்தனர்.

இந்த 8 பல்கலைக்கழகங்களையும் தவிர, இலங்கை திறந்த பல்கலைக் கழகம் கூட தொலைக்கல்வி, தபால் மூலம் கல்வி போன்ற முறைகளுடாக உயர்கல்வி வாய்ப்புக்களை மாணவர்களுக்கு வழங்குகின்றது. திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப் படுகின்ற கற்கை நெறிகள், உயர் தொழிற்கல்வியையும், விஞ்ஞானம், புடவைத் தொழில்நுட்பம், பொறியியல், சட்டம், முகாமைத்துவம், கல்வி, ஆங்கிலம், தொழில் முயற்சியாளர் பயிற்சி ஆகிய கற்கைகளில் பட்டப் படிப்பு, டிப்ளோமா, தராதரப் பத்திரம் போன்றவற்றினை வழங்குகின்ற கல்வியையும் உள்ளடக்கியிருக்கின்றன. 1987/88 கல்வியாண்டில் மொத்தமாக 15,802 மாணவர்கள் திறந்த பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படுகின்ற பல்வேறு கற்கை நெறிகளிலும் தங்களைப் பதிவு செய்திருக்கின்றனர். 1980ல் ஆரம்பிக்கப் பட்டதிலிருந்து திறந்த பல்கலைக் கழகத்தில் சேருகின்ற மாணவர் தொகை அதிகரிப்பானது, பட்டப் படிப்பு, டிப்ளோமாத் தராதரப் பத்திரம் போன்றவற்றினை வழங்குகின்ற உயர்கல்வித் தேவையினைப் பெரிதும் பிரதிபலிக்கிறது. இலங்கையில் பல்கலைக்கழக முறைமைக்கு அப்

பாலும், பல்வேறு நிறுவனங்கள், உயர்தொழில் தகைமைகளை வழங்கு கின்ற உயர் மட்ட ரீதியிலான மனித மூலவளங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களளைச் செயற்படுத்தி வருகின்றன. வர்த்தகமும், வியாபாரக் கற்கை நெறிகளும், பொறியியல், இலத்திரனியல் போன்ற பாடவிதானங்களில் தொழில்நுட்பக் கல்லூரிகளினால் நடாத்தப்பட்டுகின்ற தேசிய உயர் டிப்ளோமாக் கற்கை நெறிகள், பட்டயக் கணக்காளர் நிறுவனம், பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனம் ஆகியவற்றினால் கணக்கியல் தொடர்பாக நடாத்தப் படுகின்ற உயர்தொழிற் பரீட்சைகள், இலங்கைச் சட்டக்கல்லூரியினால் நடாத்தப்படுகின்ற சட்டத்தரணிகள் பரீட்சை, தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்தினால் நடாத்தப்படுகின்ற கணணித் தொழில்நுட்ப டிப்ளோமாக் கற்கை, நில அளவைகள் பட அமைப்பு நிறுவகத்தினால் நடாத்தப்படுகின்ற நில அளவை பற்றிய உயர் தொழில் பயிற்சி ஆகியன இவற்றுள் அடங்குகின்றன.

உயர்மட்ட ரீதியிலான மனிதவலுத் தேவையினைப் பூர்த்தியாக்கக்கூடிய வகையில், தொழில்நுட்பக் கல்லூரிகள் தவிர்ந்த ஏனைய நிறுவனங்கள் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட பங்கினையே வகிக்கின்றன. இதற்குக் காரணம், இத்தகைய நிறுவகங்களினால் நடாத்தப்படுகின்ற கற்கை நெறிகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்கின்ற தொகை மட்டுப்படுத்தப்பட்டு இருப்ப தேயாகும். உயர்மட்ட ரீதியிலும், நடுத்தரமட்ட ரீதியிலும் உயர்தொழில் பயிற்சிக்கான கேள்வியினை இலங்கைப் பல்கலைக்கழகங்கள் பூர்த்தி செய்ய வில்லையாதலால், தொழிற்கல்வி முறைமையினை விரிவுபடுத்துவதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. தற்போது, 24 தொழில்நுட்பக் கல்லூரிகளும் அவற்றோடு இணைக்கப்பட்டுள்ள பிரிவுகளும் பல்வேறு உயர்மட்ட மனித மூலவளங்களும் பல்வேறு உயர்மட்ட, நடுத்தரமட்ட மனித மூலவளங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி வருகின்றன. எவ்வாறாயினும், இத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களில், செயல்முறைப் பயிற்சியினை விட போதனைக் கல்விப் பயிற்சி முறைக்கே முக்கியத்துவம் வழங்கப்படுகிறது.

**நடுத்தர மட்ட ரீதியிலான மனிதமூலவளங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்**

டிப்ளோமா அல்லது அதற்குச் சமானமான மட்டத்தில் தராதரப் பத்திரங்களை வழங்குகின்ற பல்வேறு நடுத்தரமட்ட ரீதியிலான மனித மூலவளங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் தொழில்நுட்பக் கல்லூரி களினாலும், அரசாங்க நிறுவகங்களி னாலும், அரச சார்பற்ற பல்வேறு நிறுவனங்களினாலும் நடாத்தப்பட்டு வருகின்றன. தொழில்நுட்பக் கல்லூரிகளினால் நடாத்தப்படுகின்ற பொறியியல், கைத்திறன் பயிற்சி நெறிகள்,விவசாயக் கல்லூரியால் நடாத்தப்படுகின்ற விவசாய டிப்ளோமாப் பயிற்சி நெறி, அரசாங்க தாதிமார் கல்லூரி, சுகாதார, விஞ்ஞான தேசியக் கல்வி நிறுவகம் என்பவற்றால் நடாத்தப் படுகின்ற தாதிமார் பயிற்சிநெறி, சௌக்கிய உதவியாளர்களுக்கான பயிற்சிநெறி, மருத்துவத் தொழில்நுட்பப் பயிற்சிநெறி போன்ற கற்கை நெறிகள் ஆகியன பொதுத் துறை நிறுவகங்க ளினால் நடாத்தப்படுகின்ற நடுத்தர மட்ட ரீதியிலான மனிதமூலவளங்கள் அபிவிருத்தி திட்டங்களுக்கு உதாரணங் களாகத் தெரிவிக்கலாம். இளவயதி லேயே பாடசாலையை விட்டுச் செல்கின்றவர்களுக்கு உதவும் வகையில் இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பக் கல்லூரி போன்ற நிறுவகங்களினால் பொறியியல் கற்கை நெறிகள் கூட நடாத்தப்படுகின்றன. இத்தகைய நடுத்தரமட்ட கற்கை நெறிகளின் கால அளவு, ஒரு வருடத்திற்கும், 3 வருடத் திற்கும் இடைப்பட்டதாக இருக்கின்றது.

அட்டவணை 9

**பல்கலைக்கழகங்களுக்கான மாணவர் அனுமதி**

| கல்விப் பிரிவு | | 1984 1985 / 86 தகைமை பெற்றோர் | அனுமதிக் * கப்பட்டோர் | சதவீதம் திரம் $\frac{(4)}{(3)} \times 100$ | 1985 1986 / 87 தகைமை பெற்றோர் | அனுமதிக் * கப்பட்டோர் | சதவீதம் திரம் $\frac{(7)}{(6)} \times 100$ | 1986 1987 / 88 தகைமை பெற்றோர் | அனுமதிக் கப்பட்டோர் | சதவீதம் திரம் $\frac{(10)}{(9)} \times 100$ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| கலை, | மொத்தம் | 7003 | 2081 | 29.72 | 6709 | 2044 | 30.74 | 9737 | 1972 | 20.25 |
| | பெண் | 4448 | 1073 | 24.12 | 4347 | 1051 | 24.18 | 6360 | 981 | 15.42 |
| வர்த்தகம், முகா மைத்துவக்கல்வி | மொத்தம் | 3977 | 938 | 23.59 | 5722 | 1012 | 17.69 | 5521 | 1018 | 18.33 |
| | பெண் | 2028 | 392 | 19.33 | 3123 | 433 | 13.86 | 3099 | 474 | 15.30 |
| பௌதீக விஞ்ஞானம் | மொத்தம் | 1291 | 1061 | 82.18 | 1046 | 1008 | 96.37 | 2594 | 1584 | 61.06 |
| | பெண் | 278 | 208 | 74.82 | 175 | 127 | 72.57 | 579 | 298 | 51.47 |
| உயிரியல் விஞ்ஞானம் | மொத்தம் | 3770 | 1346 | 35.70 | 3432 | 1517 | 44.20 | 6122 | 1634 | 26.69 |
| | பெண் | 2106 | 653 | 31.02 | 1850 | 690 | 37.30 | 3508 | 828 | 23.60 |
| மொத்தம் | மொத்தம் | 16041 | 5426 | 33.83 | 16946 | 5581 | 32.93 | 24004 | 6208 | 25.86 |
| | பெண் | 8560 | 2326 | 26.23 | 9495 | 2301 | 24.23 | 13546 | 2581 | 19.05 |

குறிப்புகள்:

1. அனுமதிக்கான குறைந்த பட்ச தகுதியைப் பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கை

2. நிரல்கள் 4,7,10 என்பவற்றில் பல்கலைக்கழக மா.ஆ குழுவினால்அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை முதலாவது ஆண்டில்உண்மையாக பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கையிலும் பார்க்க வித்தியாசமானதாகும். அனுமதிக்கப்பட்டோரில் ஒரு சிலர் தம்மைப் பதிவு செய்து கொள்ளாமல் அல்லது பல்கலைக்கழகத்தில் சேராமல் இருந்திருக்கலாம்.

* விசேஷ ஏற்பாட்டின் கீழ் பௌதீக விஞ்ஞானத் துறைக்கு அனுமதிக்கப்பட்ட 473 மாணவர்களை உள்ளடக்கவில்லை

ஆதாரம்: புள்ளி புத்தகங்கள், பரீட்சைத் திணைக்களம், அனுமதிப்பட்டியல்கள், பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு

அவை தொழிலுக்கு உதவக்கூடியவாறு டிப்ளோமா அல்லது தராதரப்பத்திரங்களை வழங்குவதால் அது, இலங்கை நாட்டினைச் சேர்ந்தவரைப் பொறுத்தவரையில் பெறுமதி வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இவ்வாறான நடுத்தரமட்ட கற்கை நெறிகளில் அநேகமானவை, தொழில் சார்ந்த பயிற்சியாக இருந்தமையால், இக்கற்கை நெறிகளுக்கு அதிக கேள்வியை ஏற்படுத்தியுள்ளது. அநேகமாக இக் கற்கை நெறிகளுக்கான கேள்வியினை முற்றாகப் பூர்த்தி செய்ய முடியாது.

**குறைந்த மட்ட ரீதியிலான மனித மூலவளங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்**

இலங்கையில் பல்வேறு அரச நிறுவகங்களினாலும், அரச சார்பற்ற நிறுவகங்களினாலும், தனியார் துறை நிறுவகங்களினாலும் முறைசார், முறைசாரா மனித மூலவளங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் குறைந்த மட்ட ரீதியிலான மனித மூலவளங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களைக் கொண்டுள்ள வகுப்பின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை தொழில்நுட்பம், தொழில் முன்னிலை என்பவற்றோடு சார்ந்துள்ளவையாகவுள்ளன. இந்நிகழ்ச்சித்திட்டங்களில் அநேகமானவை குறுங்கால அளவைக் கொண்டவையாகும் (3 மாதங்களில் இருந்து 1 வருடம் வரை). சில ஆண்டுகள் கல்வி பயின்ற பின்பு, பாடசாலையினை விட்டு அகல்கின்ற இளவயதினருக்காகவென இத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இயந்திரம் பொருத்துதல், தன்னியக்க மெக்கானிக்குகள், மின்னிணைப்பு வேலைகள் போன்றவற்றினை உள்ளடக்கிய கைத்திறன் பயிற்சிகளும், சுயதொழில் வாய்ப்பினை நோக்கமாகக் கொண்டு தொழில்நுட்பக் கல்லூரிகளினால் நடாத்தப்படுகின்ற குறுங்காலப் பயிற்சி நெறிகளும் கூட இந்த வகுப்பின் கீழேயே குறிப்பிடப்படுகின்றன. அத்தோடு, கட்டடப் பயிற்சி அபிவிருத்தி நிறுவகத்தினால் வழங்கப்படுகின்ற தொழில் முன்னிலைப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுங்கூட இந்த வகுப்பின் கீழேயே குறிப்பிடப்பட்டுள்ளன.

பொதுத் துறையினால் நடாத்தப்படுகின்ற முக்கியமான முறைசாரா பயிற்சித் திட்டங்களுள், தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் அமுல் நடாத்தப்படுகின்ற பயிலுனர் பயிற்சித் திட்டமும் ஒன்றாகும். இத்திட்டத்தின் படி, ஆண்டுதோறும் ஏறக்குறைய பத்தாயிரம் இளைஞர்களுக்கு பல்வேறு திறன்களில் பயிற்சிகளை வழங்குவதற்காக பொதுத் துறை நிறுவகங்களிலும் தனியார் துறை நிறுவகங்களிலும் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இத்திட்டத்தின்கீழ் தம்மை பதிவு செய்துள்ள இளைஞர்களுக்கு வேண்டிய பயிற்சியை வழங்குவதற்காக தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை நாடுபூராவும் ஏறக்குறைய 2,000 நிறுவகங்களைப் பதிவு செய்துள்ளது. இப்பயிலுனர் பயிற்சியில் சித்தியடையும் இளைஞர்கள் அநேகமாக அவர்கள் பயிற்சிபெற்ற நிறுவகங்களிலேயே தொழிலுக்குச் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

பாடசாலையை முன்னதாகவே விட்டகலும் மாணவர்களுக்கென தொழில் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற தொழில் முன்னிலைப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமானது குறைந்தமட்ட ரீதியிலான மனிதமூலவளங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாகும். இப் பயிற்சித் திட்டம் நாட்டின் வெவ்றேு பகுதிகளிலும் அமைந்துள்ள தொழில் திணைக்களத்தின் தொழில் முன்னிலைப் பயிற்சி நிலையங்களில் அமுல் நடத்தப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ், மேசன் பயிற்சி, தச்சுத்தொழில், மோட்டார் இயந்திரப் பயிற்சி, குழாய் ஒட்டுதல் பயிற்சி, தகரவேலைப் பயிற்சி போன்ற பல்வேறு குறுகியகாலப் பயிற்சி நெறிகள் வழங்கப்படுகின்றன.

இலங்கையில் நடுத்தர மட்டத்திலும், கீழ் மட்டத்திலும் மனித மூலவளங்களை விருத்தி செய்வதில் அரச சார்பற்ற பல்வேறு ஸ்தாபனங்களும் தனியார் துறையின் பல்வேறு நிறுவனங்களும் மிகவும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன. அரச சார்பற்ற ஸ்தாபனங்களினால் இவ்வாறு மேற்கொள்ளப்படுகின்ற தொழில் முன்னிலைப் பயிற்சிகளினதும், தொழில்நுட்பப் பயிற்சிகளினதும் நோக்கம் யாதெனில், வறிய குடும்பங்களில் உள்ள வேலையற்ற இளைஞர்கள் தொழில் வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளும் முகமாக அவர்களுக்கு தொழில்நுட்ப, தொழில் முன்னிலைத் திறன்களைப் பயிற்றுவிப்பதேயாகும். லங்கா ஜாதிக சர்வோதய சிரமதான இயக்கம், ரேடியோ இலக்ரோனிக்ஸ் ஆய்வுகூடம், டியாகல சிறுவர் நிலையம், யஹபத் எந்தர பண்ணை, லங்கா மஹிலா சமித்தி, சிறி ஜினரத்தின தொழில் முன்னிலைப் பயிற்சி நிலையம் போன்ற பல அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் இத்தகைய மனித மூலவளங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களைக் கிரமமாக வழங்குகின்றன.

தொழில் முன்னிலை, தொழில்நுட்பக் கல்வித்திட்டத்தினை ஒழுங்குபடுத்தி, விருத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள மூன்றாம் நிலை தொழில் முன்னிலை கல்வி ஆணைக்குழுவின் அறிக்கையின்படி, ஏறக்குறைய 1200 பதிவு செய்யப்பட்ட முகவர் நிலையங்களும், ஏறக்குறைய 1000 பதிவு செய்யப்படாத முகவர் நிலையங்களும் தற்போது தொழில்நுட்ப, தொழில் முன்னிலைப் பயிற்சிகளை வழங்குகின்றன. இம் முகவர் நிலையங்களுள் தனியார் துறை நிறுவகங்கள் சந்தைக் கேள்வியினைப் பொறுத்துக் கட்டணம் அளவிட்டு, பல்வேறு பயிற்சி நெறிகளை அளிக்கின்றன.

**மனித மூலவளங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய மதிப்பாய்வு**

இலங்கையிலுள்ள மனித மூலவளங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை அவதானிக்கையில், அரசாங்க, தனியார், அரச சார்பற்ற ஸ்தாபனங்களிலுள்ள வெவ்வேறு முகவர் நிலையங்களாலும் நடாத்தப்படுகின்ற பலதரப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களைக் கொண்டவையாக அவை காணப்படுகின்றன. அவற்றுக்கிடையே மிகக் குறைந்த அளவிலான ஒருங்கிணைப்பே நிலவி வருகின்றது. ஆகவே இத் திட்டங்களின் தரங்களைப் பேணுவதிலும், குறிக்கப்பட்டுள்ள குழுவினரின் தேவைகளுக்கமைய நிகழ்ச்சித் திட்டங்களைச் சீராக்குவதிலும் பல கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கலாம். அத்தோடு, இப்பயிற்சி நெறிகளை வழங்குகின்ற இம் முகவர் நிலையங்களினால் எத்தகைய ஆய்வு நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

கல்வி முறைமையில் அடிப்படை மாற்றங்கள் ஏற்படாதவரை, உயர்மட்ட, நடுத்தரமட்ட மனித மூலவளங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் தவிர்க்க முடியாதவையாகவுள்ள பொதுவான குறைபாடு யாதெனில், இந்நிகழ்ச்சித்திட்டங்கள் யாவும் பரீட்சையினை அடிப்படையாகக் கொண்டு, தராதரப்பத்திரத்தினை பெற்றுக் கொள்ளுகின்ற நோக்கத்தினைக் கொண்டிருந்தமையாகும். அத்துடன் நன்கு வரையறுக்கப்பட்ட மனிதவலு, தொழில் வாய்ப்புக் கொள்கை இல்லாததன் காரணமாக இந்நாட்டில் மனித மூலவள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமற்ற வகையில் வளர்ச்சி அடைந்தன. மனித மூலவளங்கள்

அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைப்பதற்கும், அவை தொடர்பான கொள்கை விடயங்களில் வேண்டிய ஆலோசனையினை வழங்குவதற்குமாக அரசாங்கத்தினால் மனித மூலவளங்கள் அபிவிருத்திச் சபையொன்று அமைக்கப்பட்ட போதிலும், பல்வேறு மனித மூலவளங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக் கிடையே எதிர்பார்க்கப்பட்ட ஒருங்கிணைப்பு ஏற்பட்டதில்லை.

தொழில்நுட்பக்கல்வி, தொழில் முன்னிலைக்கல்வி என்பவற்றுக்கான கேள்வி அதிகரித்துக் கொண்டு வந்த போதிலும், இவற்றைக் கற்பதில் தற்போது கிடைக்கக் கூடியதாகவுள்ள வசதிகள் சிறந்த முறையில் பயன் படுத்தப்படவில்லையென தெரிய வந்திருக்கின்றது. பொதுத்துறை நிறுவகங்கள் அதிகளவு தொகையைக் கொண்ட பயிலுனர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான ஆற்றலைக் கொண்டிருந்த போதிலும், அநேகமான சந்தர்ப்பங்களில் இவ்வசதிகள் மிகவும் குறைந்தளவிலேயே பயன்படுத்தப் பட்டுள்ளனவென அவதானிக்கப் பட்டுள்ளது. மேசன் பயிற்சி, தச்சுத் தொழில் போன்ற அடிப்படைத் திறன்களைக் கொண்டுள்ள வகுப்புக ளுக்கே இக்கூற்று பெரும்பாலும் பொருந்தக் கூடியதாக இருக்கிறது.

குறைந்த அளவிலான பயன் பாட்டிற்கு வழி கோலிய காரணங்கள் யாவை என்பது தெளிவாக இன்னும் நிரூபிக்கப்படவில்லை. திருப்தியற்ற முகாமைத்துவம் தவிர, அதிகளவு பயிற்சிக்காலம், பயிற்சியின் போது பயிலுனர்களுக்கு வழங்கப்படுகின்ற குறைந்த வருமானம், பயிலுனர்களின் வதிவிடங்களுக்கு அருகில் பயிற்சி வசதிகள் இல்லாமை, பயிற்சி முடிவுற்றதன் பின்னர், தொழில்களைப் பெற்றுக் கொள்வதில் உறுதியற்ற தன்மை கிடைக்கக் கூடியதாகவுள்ள பயிற்சி நெறிகள் பற்றி போதிய அறிவின்மை, உடல் உழைப்பின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற தொழில் களுக்குச் சாதகமற்றதொரு மனப்பாங்கு போன்ற காரணிகளும் இப்பயிற்சி வசதிகள் குறைவாகப் பயன்படுத்தப் படுவதற்கு காரணமாக அமைந்திருக்க லாம்

தற்போது நடைமுறையிலுள்ள மனித மூலவளங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் இலக்கு சனத்தொகையி னரின் தேவைகளைப் பூர்த்தியாக்கக் கூடியனவா என்றுகூட ஒருவர் வினா எழுப்ப முடியும். இங்கு குறிக்கப்பட்ட சனத்தொகையினருள், பாடசாலையை முன்னராகவே விட்டகன்றவர்களும், பாடசாலையில் இருந்து விடுபட்டவர் களும் கணிசமானளவில் உள்ளனரென ஒருவர் கருதுவாராயின், தொழில் நுட்பக் கல்வி, தொழில் முன்னிலைக் கல்வி ஆகியவற்றில் உள்ள இடங்களின் தொகை, குறிக்கப்பட்ட சனத்தொகை யினரின் அளவினை விட மிகவும் குறைவாக இருப்பதாகவே அறியப்படு கிறது.

இலக்கு சனத்தொகையினரின் அளவையும், கிடைக்கக் கூடியதாகவுள்ள பயிற்சி ஸ்தானங்களையும் ஒப்பிடு மிடத்து, ஊவா, வடமத்திய, சபரகமுவ போன்ற விருத்தி குன்றிய மாகாணங் களில், இலக்கு சனத்தொகையினரின் அளவானது, கிடைக்கக் கூடியதாக வுள்ள பயிற்சி ஸ்தானங்களின் தொகையை விட அதிகமானதாகக் காணப்படுகிறது.

தரவுகளின்படி, 1987ம் ஆண்டில் பொதுத்துறை நிறுவகங்களிலும், தனியார் துறை நிறுவகங்களிலும் கிடைக்கக் கூடியதாக இருந்த பயிற்சி ஸ்தானங்களின் தொகை 117,352 ஆக இருக்கையில், பாடசாலையிலிருந்து விடுபட்டவர்களினதும் பாடசாலையை முன்னராகவே விட்டகன்றவர்களினதும் தொகை 227,296 ஆக இருந்துள்ளது. க.பொ.த.(சா.த) வில் சித்தி அடைந்தவர்களையும், வேறு உயர் கல்வித் தகைமைனைக் கொண்டிருப்ப வர்களையும் இந்த இலக்குச் சனத்தொ கையுடன் சேர்ப்பின், பயிற்சி ஸ்தானங்களின் பற்றாக்குறை இன்னும் அதிகமாக இருக்கும்.

தற்போதுள்ள மனித மூலவளங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றி மனித மூலவளங்கள் அபிவிருத்திக் குழுவின் செயற்குழு 1987 செப்டெம்பர் மாத அறிக்கையில் பின்வரும் அவதானிப்புகளை முன்வைத்துள்ளது:

"அரசாங்க முகவர் நிலையங்கள் ஏறத்தாழ 80,000 பேர்களுக்க மட்டுமே பயிற்சிகளை அளிக்கின்றன. இது மொத்த இலக்குத் தொகையின் மிகவும் சிறிய தொகையாகும். மாகாண ரீதியிலும், தேவைப்படுகின்ற கேள்விக்கேற்ப பயிற்சி வசதிகள் விகிதாசார முறையில் பரந்திருக்க வில்லை. மேல் மாகாணத்தின் பங்களிப்பினைத் தவிர தனியார் துறை யினரின் பங்களிப்பு கூட மிகவும் குறைவாகவே இருக்கிறது".

பயிற்சித் தேவைகள் பற்றி முறைமையான ஆய்வுகள் இல்லாத வரை, கிடைக்கக் கூடியதாக உள்ள பயிற்சி வசதிகள், அபிவிருத்தி முன்னுரிமைகளோடு அல்லது தொழில் சார் தேவைகளோடு ஒருங்கிசைந்து இருக்கின்றனவென்பதை உறுதியாகச் சொல்லமுடியாது என்பதை இக்குழு அவதானித்துள்ளது. பாடசாலைக ளிலிருந்து விடுபட்டவர்கள், பாடசாலைகளை முன்னதாகவே விட்டுச் சென்றவர்கள் ஆகியோரைப் பொறுத்தவரையில், தனது விருப்புக் கேற்ப ஒரு பயிற்சியில் ஒருவர் சேர்ந்து கொள்வதற்கு, குறித்த அப்பயிற்சியில் சேர்வதற்கான கல்வித் தகைமையும் ஒரு தடையாக அமைந்திருந்தது. பொதுத்துறை நிறுவகங்களினால் நடாத்தப்படுகின்ற முறைசார் பயிற்சித் திட்டங்களுக்கே இது பெரும்பாலும் பொருந்துவதாகக் காணப்படுகிறது.

இதன்படி, தொழிற் சந்தையில் காணப்படுகின்ற சம நிலையின்மையைக் குறைப்பதிலும், சமூகத்தில் மிகவும் தாழ் நிலையிலுள்ள குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதிலும் தற்போதைய மனித வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதிலும் தற்போதுள்ள மனித மூலவளங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்படுத்தக்கூடிய தாக்கமானது, எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தினைவிட மிகவும் குறைவாக இருக்கும் என்றே தோன்றுகிறது. மாற்றமடைகின்ற ஒரு பொருளாதாரப் பின்னணியில், மனித மூலவளங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொழிற்சந்தையின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியது மிக முக்கியமானதாகும். உதாரணமாக, பல்கலைக்கழகக் கல்வி, பெருகி வரும் தனியார் துறையினரின் மனிதவலுத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதா என்பது வினவப்படவேண்டிய ஒரு விடயமாகும். அத்துடன் குறுகிய காலத்தில் தொழில்சார் திறன்களை அளிக்கும் வகையில் தொழில் முன்னிலை, தொழில்நுட்பக் கல்வி முறைமை, வறுமையொழிப்புக் கொள்கை போன்ற பிரதான பொதுக் கொள்கைகளுக்கிடையே ஒரு தொடர்பு இருக்க வேண்டியது அவசியமாக உள்ளது. தற்போது நிறுவக ரீதியிலான மனித மூலவளங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் வறுமை ஒழிப்புக் கொள்கைக்கும் இடையே எவ்வித தொடர்பும் இல்லை.

### முடிவுரை

கடந்த சில தசாப்தங்களாக பொருளாதாரத்தின் பிரதான துறை களில் காணப்பட்ட மிக மந்தமான தொழில் வாய்ப்பு அதிகரிப்பு,

( 32 பக்கம் பார்க்க)

# மானிட மூளவள அபிவிருத்தி குறித்த ஜகார்த்தா திட்டம்

1. இலங்கையையும் உள்ளடக்கிய ஆசிய-பசுபிக் நாடுகள், 1988ல் ஆசிய – பசுபிக் பிராந்தியத்திற்கான ஐ.நா.வுக்கான சமூக, பொருளாதார ஆணைக்குழுவில் கூடி, இப்பொழுது, "மானிட மூலவள அபிவிருத்தி தொடர்பான ஜகார்த்தா திட்டம்" என அழைக்கப்படும் திட்டத்தை ஒருமனதாக ஏற்றுக் கொண்டன. நடவடிக்கைக்கான ஜகார்த்தா திட்டத்தின் மானிட மூலவள அபிவிருத்தி தொடர்பான கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றின் உருவாக்கத்திற்கும் அமுலாக்கலுக்கும் இலங்கையின் இணக்கமும் பெற்றுக் கொள்ளப்பட்டிருப்பதினால், இந்த ஜகார்தா நடவடிக்கைத்திட்டத்தின் பின்னணியிலுள்ள சித்தாந்தத்தையும் அதன் வீச்சினையும் இலங்கை மக்களும் கொள்கை வகுப்போரும் முழு அளவில் அறிந்து வைத்திருப்பது அவசியமாகும்.

2. நடவடிக்கைக்கான ஜகார்த்தா திட்டம், மானிட மூலவளங்களின் அபிவிருத்தியானது, சமூக அபிவிருத்தி மற்றும் பொருளாதார அபிவிருத்தி ஆகிய இரண்டுக்குமான ஒரு அத்தியாவசியமான கூறாக இருந்து வருகின்றது என்ற கருத்தினைக் கொண்டுள்ளது. வாழ்க்கைத் தரத்தை நிர்ணயம் செய்யும் இயற்பண்புகள், மனித மூலதனத்தை நிர்ணயம் செய்யும் இயற்பண்புகளை பெருமளவிற்கு ஒத்திருக்கின்றன என்று கருதப்பட்டு வருகின்றது. எனவே, ஜகார்த்தா நடவடிக்கைத் திட்டத்தை பொறுத்தவரையில் வளர்முக நாடுகளில் சமூக அபிவிருத்தி என்று பொதுவாக கருதப்பட்டுவரும் விடயங்கள், உள்ளார்ந்த ரீதியில் நேரடியாக உற்பத்தி ஆற்றல் கொண்ட நடவடிக்கைகளாக இருந்து வருகின்றன.

3. பேரண்ட மட்டத்திலான மானிட மூலவள அபிவிருத்திக் கொள்கைத் திட்டமிடல் மற்றும் நிகழ்ச்சித்திட்டமிடல் என்பவற்றிற்காக ஜகார்த்தா திட்டத்தினால் ஆதரித்துப் பேசப்பட்டுவரும் குறிப்பிட்ட உத்திகளின் பின்னணியிலுள்ள அணுகுமுறையை நுண்மட்டத்திலான மானிட மூலவள அபிவிருத்தி நடத்தையின் ஒரு பகுப்பாய்வில் கண்டுகொள்ள முடியும். மானிட மூலவள அபிவிருத்தி குறித்த ஜகார்தா திட்ட கருதுகோளின் கோட்பாட்டு ரீதியான அத்திவாரங்கள் தனிநபர், குடும்ப மற்றும் வீட்டு தீர்மானம் எடுக்கும் மட்டத்தில் காணப்படுகின்றன.

4. அது ஒரு ஒருங்கிணைந்த கருதுகோளாக இருந்து வருகின்றது: மானிட மூலதன கோட்பாட்டில் தெளிவாக காணப்படும் மானிட மூலவளங்களின் உற்பத்திசார் பங்கினை அது மானிட மூலவளங்களின் நுகர்வுப் பங்குடன் இணைக்கின்றது. பொருளாதார நடவடிக்கையிலான வெகுமதியுடனான பங்கேற்புக்கு ஊடாக இது மேற்கொள்ளப்படுகின்றது. ஜகார்த்தா திட்டம், மக்களின் பங்கேற்பை, நுகர்வுக்கான தமது விருப்பினால் தூண்டப்பட்டுள்ள உற்பத்தியிலான மனித மூலதனமாக நோக்குகின்றது. தனிநபர்களும் குடும்பங்களும் உற்பத்தியை அதிகரிப்பதற்கு விருப்பம் தெரிவிக்கின்றார்கள். அத்தகைய முதலீடுகளிலிருந்து வரக்கூடிய ஆதாயங்களினாலேயே அவர்கள் தூண்டப்படுகின்றார்கள். இது சமூக ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட, பொருளாதார ரீதியில் வெகுமதியளிக்கக்கூடிய பொருளாதார நடவடிக்கை மீதான பங்கேற்பிலிருந்து தோன்றுகின்றது.

5. மானிட மூலதனத்தின் மீதான இத்தகைய முதலீடுகள் உற்பத்தியை பெருக்குவதற்கான மிக முக்கியமான ஒரு மூலமாக மட்டும் இருந்து வரவில்லை; சுகாதாரம் மற்றும் கல்வி போன்றவற்றின்மீதான மிக முக்கியமான மனித மூலவள முதலீடுகள் வளர்முக நாடுகளில் சமகாலத்தில் உயர் பெறுமதி வாய்ந்த நுகர்வு விடயங்களாகவும் இருந்து வருகின்றன. மேலும், இவை வாழ்க்கைத் தரத்தை நிர்ணயம் செய்யும் முக்கிய காரணிகளாகவும் உள்ளன. எனவே, நுகர்வு நோக்கிலான குணாம்சங்கள் தனிநபரின் வாழ்க்கைத் தரத்தினை பிரதிபலிக்கின்றன. அதேவேளையில், தனிநபரின் மனித மூலவளத்தின் தரம் உற்பத்திக் கண்ணோட்டத்தில் நோக்கப்படுகின்றது. பொருளாதார நடவடிக்கையில் வெகுமதியுடன் கூடிய பங்கேற்பு – அது கூலிபெறும் தொழிலாளர் நிலையிலான பங்கேற்பாயினும் சரி, தொழில் வாய்ப்பு மூலமான பங்கேற்பாக இருந்தாலும் சரி– ஜகார்த்தா திட்ட மாதிரியின் அடிப்படையை விளக்கும் ஒரு அம்சமாக உள்ளது.

6. தனிப்பட்ட மட்டத்தில் மனித மூலதனதின் தரத்திற்கும் வாழ்க்கைத் தரத்திற்கும் இடையிலான பொதுவான ஒத்திசைவு, முழுப் பொருளாதாரத்திற்குமான ஒருங்கிணைக்கப்பட்ட, சமநிலையுடன் கூடிய மனித மூலவள அபிவிருத்தி உத்தியொன்றிற்கான அடிப்படையை வழங்குகின்றது. எனவே, ஜகார்த்தா திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அபிவிருத்திக்கான மனித மூலவள மேம்பாட்டு உத்தி, சமூக முன்னேற்றமொன்றினை எடுத்து வரக்கூடிய, அதற்கு உசிதமான பொருளாதார வளர்ச்சி முறை ஒன்றினையே விரும்புகின்றது. அதேபோல, பொருளாதார வளர்ச்சியுடன் ஒத்துப் போகக்கூடிய மற்றும் அதற்கு பங்களிப்பு செய்யக்கூடிய ஒரு வகையான சமூக அபிவிருத்தியை எடுத்து வரவே அது விரும்புகின்றது.

7. பேரண்ட மட்டத்தில் மானிட மூலவள அபிவிருத்தி உபாயத்தை செயற்படுத்துவதில் வேலைவாய்ப்புக் கொள்கை முக்கியமான ஒரு பங்கினை பெற்றிருப்பதற்கு ஜகார்த்தா திட்டம் இரண்டு காரணங்களை எடுத்துக் காட்டுகின்றது. தொழில் வாய்ப்பு, வெளியீட்டினையும் பொருளாதார வளர்ச்சியையும் உருவாக்கும் மிக முக்கிய வழிமுறையாக இருந்து வருகின்றது: மேலும், அது பெற்றுக் கொடுக்கும் வருமானங்களுக்கு ஊடாக நேரடியாகவும், சுயமரியாதை மற்றும் தனிப்பட்ட அடையாளம் என்பவற்றிற்கு ஊடாக மறைமுகமாகவும் ஒரு தனிநபர் நல்ல வாழ்க்கைத் தரமொன்றை எட்டுவதற்கான பிரதான கருவியாக செயற்பட்டு வருகின்றது.

8. உற்பத்தியில், மானிட மூலவளங்களை மிகவும் திறமையான முறையில் பயன்படுத்திக் கொள்ளாதிருந்தால், வாழ்க்கைத் தரத்தினை

உருவாக்கும் முயற்சி இறுதியில் மூலவள இடையூறுகளை எதிர்கொள்ள முடியும் என்பதை ஜகார்த்தா திட்டம் ஏற்றுக் கொண்டுள்ளது. மாறாக, உற்பத்தியில் மானிட மூலவளங்களின் பங்கேற்பு வாழ்க்கைத் தரத்தின் மீதான போதியளவிலான விருத்தியுடன் இணைந்து வரவில்லை என்றால், மோசமான பெறுபேறுகளையே அது தரும். ஏனெனில், உயர்தரமான மனித மூலதனத்தின் மீது முதலீடுகளை மேற்கொள்வதற்கான ஊக்குவிப்பு குறைந்த அளவிலேயே இருக்க முடியும்.

9. எனவே, ஒருங்கிணைந்த மனித மூலவள அபிவிருத்தி உத்தியொன்று அத்தியாவசியமானது என்பதனை இது வலியுறுத்துகின்றது. உற்பத்திப் பக்கத்தைப் பொறுத்தவரையில், மனித மூலதன முதலீடுகள் உற்பத்தியில் மிகவும் தாக்கமான முறையில் பயன்படுத்தப் பட்டு வருகின்றன என்பதனையும், பொருத்தமான மனித மூலதன உருவாக்கத்தின் மூலம் உற்பத்தி நடவடிக்கை குறைநிரப்பு செய்யப்பட்டு வருகின்றது என்பதையும் இந்த உத்தி உறுதிப்படுத்த வேண்டி உள்ளது. மறுபுறத்தில் நுகர்வுப் பக்கத்தை பொறுத்தவரையில் மானிட மூலதன உரிமையாளர்கள் போதிய பொருளாதார ஆதாயங்களை பெறுவதிலும், இந்த ஆதாயங்கள் உயர்ந்த வாழ்க்கைத் தரமொன்றுக்கு பங்களிப்புச் செய்வதுடன், மனித மூலதன உருவாக்கம் மேலும் அதிக அளவில் இடம் பெறுவதற்கு சிறந்த ஒரு ஊக்குவிப்பினை வழங்குவதனையும் உறுதி செய்ய வேண்டி உள்ளது.

10. ஜகார்த்தா திட்டம் வெற்றிகரமான மனித மூலவள அபிவிருத்தித் திட்டத்திற்கும் அவற்றின் தாக்கமான செயற்பாட்டிற்குமென உத்திகளை இனங்கண்டு கொள்வதில் தேசிய அபிவிருத்தி உத்திக்கு கூடிய முக்கியத்துவத்தை அளிக்கின்றது. பேரண்ட மட்டத்திலான அபிவிருத்திக் கொள்கை உருவாக்கத்திற்கான ஒருங்கிணைந்த ஒரு அணுகுமுறையையும், திட்டமிடல் மற்றும் நிகழ்ச்சித்திட்டமிடல் என்பவற்றின் தாக்கமான ஒருங்கிணைப்பினையும் அது வலியுறுத்துகின்றது.

11. மனித மூலதன முதலீடுகள் தனிநபர்களுக்கும் குடும்பங்களுக்கும்

## மானிட மூலவளங்கள் அபிவிருத்திப் பேரவை

இலங்கையின் மானிட மூலவளங்கள் அபிவிருத்திப் பேரவை கல்வி மற்றும் மனிதவலு கொள்கைகள் தொடர்பான ஒட்டுமொத்த ஒருங்கிணைப்பு மற்றும் நாட்டில் மானிட மூலவள திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை அபிவிருத்தி செய்தல் ஆகிய பணிகளுக்கு, அமைச்சரவைக்கு உதவும் ஓர் ஆலோசனை அமைப்பு என்ற வகையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இந்த பேரவையின் முக்கிய கருமங்கள் பின்வருமாறு:

(அ) கல்வி மற்றும் மனிதவலு கொள்கைகளை விவேகபூர்வமான முறையில் உருவாக்குதல் மற்றும் ஒருங்கிணைத்தல் என்பவற்றை உள்ளடக்கிய மானிட மூலவள அபிவிருத்தி குறித்த தேசிய கொள்கை தொடர்பாக அரசாங்கத்திற்கு மதியுரை வழங்குதல்;

(ஆ) தேசிய கொள்கைக்கு இணங்கிய விதத்தில், மானிட மூலவள அபிவிருத்திக்கான திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் அரசாங்கத்திற்கு சமர்ப்பித்தல்;

(இ) அரசாங்கத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மானிட மூலவள அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றின் அமுலாக்கத்தினை கண்காணித்தல்;

(ஈ) தேசிய குறிக்கோள் தொடர்பாக, சம்பந்தப்பட்ட அரச முகவரகங்களினால் தயாரிக்கப்படும் கல்வித் திட்டங்களையம் நிகழ்ச்சித்திட்டங்களையும் மதிப்பிட்டு, மீளாய்வு செய்தல்;

(உ) கல்வி மற்றும் பயிற்சி முறையை மதிப்பிட்டு மீளாய்வு செய்வதும், அது குறித்து அறிக்கை இடுவதும்; மற்றும்,

(ஊ) இலங்கையில் மானிட மூலவள அபிவிருத்தி குறித்த ஓர் ஆண்டறிக்கையை வெளியிடுதல்; அது தற்போதைய வழிமுறைகளின் ஒரு மீளாய்வினையும், மானிட மூலவளங்களின் அபிவிருத்திக்கு அவசியப்படும் மற்றும் தேவைகளையும் மேலதிக வழிமுறைகளையும் உள்ளடக்கியதாக இருக்கும்.

இந்தப் பேரவைக்கு அரசாங்கத்தினால் உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்கள் பின்வருமாறு:

(அ) பிரிவு அமைச்சுக்கள், அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்டசபைகள் மற்றும் அரசாங்க முகவரகங்கள் தனியார் துறை நிறுவனங்கள் என்பவற்றிலிருந்து புள்ளி விபரங்கள் மற்றும்மனித வலு என்பவற்றை உள்ளடக்கிய பேரவை அவசியமானவை என்று கருதும் தகவல்களை கோருவதற்கான அதிகாரம்.

(ஆ) தனது சொந்த விருப்பில் அல்லது அரசின் அழைப்பின் பேரில் அரசாங்கத்திற்கு அறிக்கைகளை சமர்ப்பிக்கும் அதிகாரம்.

(இ) அரசாங்கத்தினால், அதனிடம் கோரப்படும் விடயங்கள் தொடர்பாக அரசாங்கதத்திற்கு மதியுரை வழங்குவது அல்லது தனது சுய விருப்பின் பேரில் அரசாங்கதத்திற்கு மதியுரை வழங்குதல்.

தொழில் வாய்ப்புக்கள் மற்றும் வருமானங்கள் அதேபோல சிறந்த வாழ்க்கைத் தரம் என்பவற்றை பெற்றுக்கொடுப்பதற்கு வழிகோலுவதை உறுதிப்படுத்துவதற்கு மேற்கூறியவை முன்நிபந்தனைகளாக இருந்து வருகின்றன. ஜகார்த்தா திட்டம், குறிப்பாக, ஒருபுறத்தில் கல்விக்கும் பயிற்சி வசதிகளுக்கும் இடையிலான ஒருங்கிணைப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி வரும் அதேவேளையில், கல்வி பெற்ற பயிற்றப்பட்ட மனிதவலு திறமையான முறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்காக, மறுபுறத்தில், வேலை வாய்ப்புக் கொள்கைக்கும் தேசிய அபிவிருத்தி உபாயத்திற்கும் இடையில் ஓர் ஒருங்கிணைப்பு இருக்க வேண்டும் என்பதனையும் வலியுறுத்துகின்றது.

12. ஜகார்த்தா நடவடிக்கைத் திட்டம், கேள்விப் பக்கத்தையும் போதிய அளவிலான நுண்மட்டத்திலான ஊக்குவிப்புக்களை கிடைக்கச் செய்வதற்கூடாக மானிட மூலவள அபிவிருத்தி நிலைமைகளுக்கான சாதகமான கேள்வி நிலைமைகளை உருவாக்க வேண்டிய தேவைகளையும் வலியுறுத்துகின்றது. மானிட மூலவள அபிவிருத்தியில் முடிவுகளை எடுப்பதில் தனிநபர்கள் மற்றும் குடும்பங்கள் வகித்து வரும் முக்கியமான பங்கினை அங்கீகரிக்கும் இத்திட்டம், கொள்கை வகுப்போரும் திட்டமிடுவோரும் பேரண்ட மட்டத்திலான கொள்கைகளையும் திட்டங்களையும் உருவாக்கும் பொழுது, குடும்பங்களுக்குள் செயற்பட்டு வரும் நுண்மட்ட மானிட மூலவள அபிவிருத்தியின் இயல்பினை கவனத்தில் எடுக்க வேண்டுமென குறிப்பிடுகின்றது.

13. பல ஆசிய-பசுபிக் நாடுகளின் அனுபவத்தின் அடிப்படையில், உள்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி, சேவைகள் மற்றும் வசதிகள் என்பவற்றின் விநியோகப் பக்கத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டமையினால், குறிப்பாக சுகாதார, மற்றும் கல்வி போன்ற துறைகளின் பயன்பாட்டு மட்டங்கள் மிகவும் குறைந்த அளவில் இருந்து வந்துள்ளதனை காணமுடிகிறது. சாத்தியமான நுகர்வோர் மீது கவனம் செலுத்தும் கேள்வி உருவாக்கல் உத்திகளை ஜகார்த்தா திட்டம் அதரித்து பேசுகின்றது. அது கொள்கை வகுப்போரும் நிகழ்ச்சித்திட்டங்களை தயாரிப்போரும் சமூக மற்றும் பண வகைகள் அல்லாத செலவினங்கள்மீது அதிக அளவுக்கு கவனம் செலுத்த வேண்டும் என கேட்டுக் கொள்கின்றது. பிள்ளைகளின் சுகாதாரம் மற்றும் கல்வி என்பன தொடர்பாக மிக முக்கியமான மானிட மூலவள அபிவிருத்தி தொடர்பான தீர்மானங்கள் பெற்றோரினாலேயே எடுக்கப்பட்டு வருகின்றன என்பதனை அனுபவம் காட்டுகின்றது. இதற்கான பெரும்பாலான செலவுகளை அவர்களே பொறுப்பேற்க வேண்டி உள்ளது. ஆனால், அதற்கு ஈடுசெய்யக் கூடிய வித்திலான அனுகூலங்களை அவர்கள் பெறுவதில்லை.

14. மானிட மூலவள அபிவிருத்தி தொடர்பான கொள்கைகளும் நிகழ்ச்சித் திட்டங்களும், குறிப்பாக, பிரதிகூலமான நிலையில் இருந்து வரும் சமூக பிரிவினரை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட வேண்டும் என ஜகார்த்தா நடவடிக்கைத் திட்டம் வலியுறுத்துகின்றது. இது மிகவும் பலவீனமாக ஊக்குவிப்புக்களையும் மானிட மூலவள அபி விருத்திக்கான மிகக் கடுமையான ஊக்குவிப்பு இன்மைகளையும் எதிர்நோக்கி வருகின்றது. இத்தகைய பிரிவினருக்கு உதவ முடியாத திட்டங்கள் பயனற்றவையாகும்.

15. இலக்கு நிர்ணயித்தல், மானிட மூலவள அபிவிருத்தி உத்திகளின் திறமையை விருத்தி அடையச் செய்கின்றது. அனுகூலமற்ற நிலையில் இருந்து வரும் வயது வந்தவர்களைக் கொண்ட மானிட மூலதனம் அதன் குறைந்த தரம் காரணமாக உற்பத்தியில் முழு அளவில் பயன்படுத்தப்பட்டு வருவதில்லை. இது இக்குடும்பங்களின் குறிப்பாக பிள்ளைகளின் வாழ்க்கைத் தரம் மோசமடைவதற்கு வழிகோலுகின்றது. இவ்வகையில், அனுகூலமற்ற நிலை, ஒரு விஷச் சுழலில் பெற்றோரிடமிருந்து பிள்ளைகளுக்கு கையளிக்கப்பட்டு வருகின்றது. இத்தகைய ஒரு பின்னணியில், மானிட மூலவள அபிவிருத்தியை இலக்கு நிர்ணயித்து மேற்கொள்வது சாத்தியமான உயர் அளவிலான ஆதாயங்களை பெற்றுக் கொடுக்கின்றது.

16. அதேபோல ஆசிரியர்கள், ஏனைய கல்வியாளர்கள் சுகாதார ஆளணியினர் மற்றும் விரிவாக்கப் பணியாளர் போன்ற குறிப்பிட்ட சில வகைகளைச் சேர்ந்த மானிட மூலவளங்களின் அபிவிருத்தி, அவற்றின் மனித மூலதனத்தை பொறுத்தவரையில் முதலீடுகளுக்கு ஆகக்கூடிய சமூக ஆதாயங்களை பெற்றுத்தருகின்றது. எனவே, இத்தகைய குழுவினரை மானிட மூலவள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் இலக்குக் குழுவினராக கொள்ள வேண்டுமென ஜகார்த்தா திட்டம் குறிப்பிடுகின்றது.

17. கொள்கை உருவாக்கம், திட்டமிடல் மற்றும் நிகழ்ச்சித்திட்டத் தயாரிப்பு என்பவற்றில் வெகுஜனங்களின் பங்கேற்பினை மிக முக்கியமான மானிட அபிவிருத்தி உத்தியொன்றாக ஜகார்த்தா திட்டம் ஆதரித்துப் பேசுகின்றது. நேரடியாக சம்பந்தப்பட்டிருப்பவர்கள் சரியான முழு நிறைவான தகவல்களை பெற்றுக் கொள்வதன் காரணமாக, வெகுஜன பங்கேற்பு மிகவும் தாக்கமான கொள்கைகள், திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வழிகோலுகின்றது. தெரிவு மற்றும் ஊக்கத்துடன் கூடிய பங்கேற்பு என்பவற்றை உள்ளடக்கிய அமுலாக்கல் வழிமுறைகளையும் ஜகார்த்தா திட்டம் ஆதரித்து வருகின்றது. முடிவுகளை எடுக்கும் நடைமுறையில் பயனாளிகள் நேரடியாக சம்பந்தப்படும் பொழுது அது அவர்களுக்கு ஒரு வகையான தனிப்பட்ட பொறுப்புணர்ச்சியை அளிக்கின்றது. இது ஆக்கத் திறனும் புதுமைப்புனைவும் புதிய அறிவின் கண்டுபிடிப்பும் மலர்வதற்கு வகை செய்கின்றது.

*( 14 பக்கத் தொடர்ச்சி)*

நிகழ்வுப்போக்குகள் (அவற்றுக்கூடாக பொருளாதாரத்தின் அபிவிருத்தியும்) பெருமளவுக்கு நிறுவனங்களாலேயே துண்டப்பட்டு வரும். மார்க்சியத்துக்கு பிற்பட்ட தீவிர மனிதாபிமான ஆதரவாளர்கள், புதிய பொருளாதார மற்றும் சமூக ஒழுங்கொன்றினைக் கட்டியெழுப்புவதற்காக ஐந்து பிரதான கருத்துக்களை முன் வைத்துள்ளார்கள். ஒருங்கிணைந்த கருப்பொருள் அணுகுமுறை இவற்றில் இரண்டு கருத்துக்களுடன் இசைவுத் தன்மையைக் கொண்டுள்ளது. தனிநபர், சமூக வாழ்க்கையின் ஒரு சுறுசுறுப்புமிக்க பங்காளியாக

*( 32 பக்கம் பார்க்க)*

# மனித மூலவள மேலாண்மை- சில கண்ணோட்டங்கள்

மல்லிகா மனுரத்ன
(முத்த மேலாளர், பயிற்சிப் பரிவு,
ஹட்டன் நஷனல் வங்கி)

இன்றைய உலகம் துரித வேகத்தில் 2,000 ஆவது ஆண்டை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. 1970 களிலும் 1980 களிலும பொருத்தமானவை என்றும் சகஜமானவை என்றும் கருதப்பட்டு வந்த பல விடயங்கள் இப்பொழுது துரித கதியில் காலாவதியாகிக் கொண்டு வருகின்றன. புதிய நடைமுறைகள் அநேகமாக ஓர் இரவுக்குள்ளேயே திடீரென்று முளைத்துக் கொண்டிருக்கின்றன. இந்தச் சூழலில் இவற்றுடன் அனுசரித்துச் செல்ல முடியாத நிலையில் இருப்பவர்கள் செயல் இழந்தவர்களாக ஆகி விடுகின்றனர். சுருக்கமாகச் சொல்வதானால், 2000 ஆவது ஆண்டையும் அதற்கு அப்பாலும் நோக்கி நாம் செல்ல வேண்டிய பயணத்தின் போது, மாற்றம் மற்றும் மாற்றத்தின் வேகம் என்பன மிக முக்கியமான புள்ளிகளாக இருந்து வருகின்றன.

உலகெங்கிலும் அமைந்துள்ள நிறுவனங்கள் மிகவும் வேகமான இந்த மாற்றப் போக்கிற்கு எத்தகைய வகையில் எதிர்விளைவு காட்டி வருகின்றன? இந்த நிறுவனங்கள் அனைத்தும் மாற்றங்களை மிகவும் தாக்கமான முறையில் எதிர்கொள்ளும் பொருட்டு, அந்தந்த நிறுவனங்களின் திசைவழியை, மீள வரையறை செய்து வருவதுடன், உள்ளக அதிகார கட்டுக்கோப்புக்களை மீளமைப்புச் செய்தும் வருகின்றன. குறிப்பாக, ஐக்கிய அமெரிக்காவில் முக்கியமாக கம்பியூட்டர் மற்றும் தொடர்புசாதன துறைகளில் ஏற்பட்டு வந்துள்ள முன்னேற்றங்கள் காரணமாக பல சுவாரஸ்யமான மாற்றங்கள் ஏற்கெனவே இடம்பெற்றுள்ளன. இந்த நிகழ்வுப்போக்கில், பெரும்பாலான நவீன நிறுவனங்கள் பாரம்பரியமாக அறியப்பட்டு வந்த "ஆளணி முகாமை" என்ற முறையிலிருந்து மாறி "மனித வள முகாமை" என்று அழைக்கப்படும் புதிய அணுகுமுறை ஒன்றை நோக்கி இப்பொழுது நகர்ந்து சென்றுள்ளன.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தின் போது ஊழியர் படை 'தலைகள்' என்று பொதுவாக அழைக்கப்பட்டு வந்தது. இந்த நூற்றாண்டின நடுப்பகுதியில் எல்டன் மாயோ மற்றும் ஹோர்தோன் போன்றவர்கள் முன்னோடியாக மேற்கொண்ட பரீட்சார்த்தங்களையும், அதன் பின்னர் மனித உறவுகள் சித்தாந்தப்பள்ளியின் அபிவிருத்தியினையும் அடுத்து, 'ஊழியர் படை', 'ஆளணி' என்று அழைக்கப்படத் தொடங்கியது. ஊழியர் படையை தூண்டிவிட வேண்டியதன் முக்கியத்துவத்தையும், தொழிலாளர்கள் என்ற முறையில் அல்லது சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் உறுப்பினர்கள் என்ற முறையில் அவர்களுடைய உரிமைகளையும் இந்த மாற்றம் கவனத்தில் எடுத்தது.

மானிட மூலவள முகாமை என்பது, அதனை அடுத்து, அண்மைய வருடங்களின் போது நிறுவனங்களில் ஏற்பட்ட ஒரு அபிவிருத்தி ஆகும். அது ஆளணிப் பணியென்று அழைக்கப்பட்டாலும் சரியே, மானிட மூலவள முகாமைப் பணியென்று அழைக்கப்பட்டாலும் சரியே, நிறுவனங்கள் ஆட்களை வேலைக்குச் சேர்த்து, பதவிகளில் அமர்த்தி, இடமாற்றம் செய்து, பதவி உயர்வு அளித்து, பயிற்சி அளித்து, ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து செயற்பட்டு வருகின்றன. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், அடிப்படையான கருமங்களில் பாரிய அளவிலான மாற்றங்கள் எவையும் ஏற்பட்டிருக்கவில்லை. எனவே, "மானிட மூலவளங்கள் முகாமை" என்ற பதத்தில் காணப்படும் நவீன அம்சம் எது?

ஆளணி முகாமைக்கும் மானிட மூலவள முகாமைக்கும் இடையிலான அடிப்படை வித்தியாசம் அவற்றின் கருமங்களில் அதிகளவில் காணப்படவில்லை; ஆனால், சம்பந்தப்பட்ட நிறுவனம் ஊழியர் படையை அணுகும் சிந்தனைப் போக்கிலேயே இந்த வித்தியாசம் தங்கி உள்ளது. மானிட மூலவள முகாமையின் குணாம்சங்களை சற்று விரிவாக எடுத்து விளக்கினால் இது குறித்த ஒரு புரிந்துணர்வினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

மானிட மூலவள முகாமை, மனிதர்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமான ஒரு கூறாக இருந்து வருகின்றது என்ற தத்துவத்தை அடிப்படையாக கொண்டதாகும். எனவே, இந்த மூலவளங்களை மிகவும் கவனமான முறையில் முகாமை செய்துவர வேண்டும் என்றும் அது கருதி வருகின்றது. தாம் தொழில் செய்யும் சூழல் சிறந்த முறையில் வேலை செய்வதற்கு தமக்குத தூண்டுதல் அளிக்கக்கூடியதாக இருந்து வரும் பொழுது, மனிதர்கள் மிகச்சிறந்த முறையில் எதிர்விளைவுகளை காட்டுகின்றார்கள். இந்தத்தத்துவ சிந்தனையின் போக்கை கைத்தொழில் உலகில் இடம்பெற்று வந்துள்ள சில முக்கியமான நிகழ்வுகளில் காண முடியும். ஜப்பானிய கம்பனிகள் மேலைத்தேச சந்தைகளில் ஆக்கிரமிப்புச் செய்தமை, வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்தக்கூடிய தரமான பொருட்களை வழங்கும் அவர்களுடைய ஆற்றல் என்பன இவற்றில் மிகவும் தெளிவாக தெரியும் விடயங்களாகும்.

மேலைத்தேச கைத்தொழில் அதிபர்கள்தமது பொருட்கள் மற்றும் சேவைகள் என்பவற்றில் தரத்தினை விருத்தி செய்து கொள்வதற்கான வழி முறைகளை கண்டறிவதற்கு இதன் மூலம் நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

மேலைய உலகில் இயங்கி வந்த பல தலைசிறந்த கம்பனிகள், தமது ஊழியர் படை குறித்து போதிய அளவில் கவனம் செலுத்தி, மிகச் சிறந்த செயல்திறனை பெற்றுக்கொள்வதற்கு உசிதமான ஒரு வேலைச் சூழலை உத்தரவாதம் செய்து வந்துள்ளன என்பதும் மற்றொரு முக்கிய விடயமாக இருந்தது. மிகவும் கடுமையான போட்டி நிலவும் சந்தைகளை எதிர்கொண்டதன் விளைவாக, நிறுவனங்கள், உற்பத்தியில் இருந்து, சந்தைத் தேவைகளை நோக்கி தமது கவனத்தை திசை திருப்ப வேண்டிய அவசியத்தை உணர்ந்து கொண்டிருந்தன. நிறுவனங்கள் பெருமளவுக்கு வாடிக்கையாளர்களை நோக்கி வழிப் படுத்தப்பட்டமையை அடுத்து, வாடிக்கையாளர்களின் கேள்வியை நிறைவு செய்வதற்காக தரத்தை விருத்தி செய்வது அத்தியாவசியமானது என்பதை அவை நன்கு உணர்ந்து கொண்டிருந்தன. தரத்தின் மீது கூடியளவுக்கு அழுத்தம் காட்டப்படும் போது, நிறுவனங்கள் தம்மிடம் வேலை செய்து வரும் ஆட்கள் குறித்து விசேஷ அக்கறை செலுத்துவது இயற்கையானதாகும். பல ஐக்கிய அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நிறுவனங்கள் மாற்றங்களை கொண்ட நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தி வந்தன. ஆட்கள் தொடர்பான அவற்றின் அணுகுமுறையில் ஏற்பட்டிருந்த மாற்றமே இதன் வெற்றிக் காரணியாக இருந்தது.

### மானி மூலவள முகாமையின் குறிக்கோள்கள்.

மானிட மூலவள முகாமையின் நான்கு மிக முக்கியமான குறிக்கோள்களை இங்கு கவனத்தில் எடுக்க முடியும்.

1. தொழிலாளர்களிடையே அர்ப்பணிப்புணர்வினை உருவாக்குதல்.

2. திறமை வாய்ந்த ஊழியர் படையொன்றை அபிவிருத்தி செய்தல்.

3. குறிக்கோள்களுக்கு இசைவாக ஒழுகுவதனை உறுதிப்படுத்துதல்.

4. செலவுத் தாக்கத்தை உத்தரவாதம் செய்தல்.

ஆளணி முகாமையானது, இதற்கு மாறாக, செயல் திறமையை அபிவிருத்தி செய்வது குறித்தும், செலவுத் தாக்கத்தை உத்தரவாதம் செய்வது குறித்தும், அதிக அளவுக்கு அக்கறை செலுத்தி வந்தது. அர்ப்பணிப்புணர்வு தலைமைத்துவத்தின் ஒரு கருமமாக கருதப்பட்டு வந்துள்ளது. ஆளணித் திணைக்களம் இது குறித்து அவ்வளவாக சிந்திக்கவில்லை. ஊழியர்கள் அனைவரும் இந்த முயற்சியை புரிந்து கொண்டு, நிறுவனத்தின் குறிக்கோள்களை உணர்ந்து, அவற்றை சாதித்துக் கொள்ளும் பொருட்டு அதற்காக உழைப்பதற்கு விருப்பம் தெரிவிப்பதனை குறிக்கோளுக்கு இசைவாக ஒழுகுதல் உத்தரவாதப்படுத்த வேண்டி இருந்தது. மானிட மூலவள கொள்கை, அர்ப்பணிப் புணர்வு, செயல் திறன், குறிக்கோளுக்கு இசைவாக ஒழுகுதல் மற்றும் செலவுத் தாக்கம என்பவற்றை உறுதி செய்ய வேண்டும் என மானிட மூலவள முகாமை அணுகுமுறை ஆதரித்துப் பேசுகின்றது.

### மானிட மூலவள முகாமையாளரின் பணி

மானிட மூலவள முகாமையாளர், ஆளணி முகாமையாளர் ஒருவரின் பாரம்பரிய கருமங்கள் அனைத்தையும் நிறைவேற்றி வர வேண்டும். இது தவிர, ஆட்கள் அர்ப்பணிப்புணர்வு கொண்டவர்களாக இருந்து வருகின்றார்கள் என்பதனையும், நிறுவனத்தின் குறிக்கோள்களை புரிந்து கொள்கின்றார்கள் என்பதனையும் உறுதி செய்து கொள்ள வேண்டியவர்களாகவும் அவர்கள் இருந்து வருகின்றார்கள்.

மக்கள், நிறுவனங்களின் குறிக்கோள்களை சாதித்துக் கொள்வதற்காக உழைப்பதற்கு ஊடாக, தமது சொந்தக் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக நிறுவனங்களில் சேர்ந்து கொள்கின்றார்கள். தமது தொழில் சம்பந்தப்பட்ட குறிக்கோள்களை வென்றெடுப்பதற்கு அந்த நிறுவனம் பொருத்தமான இடம் என்பதனை எந்த அளவுக்கு உணர்ந்து கொள்கின்றார்களோ, அந்த அளவுக்கு அந்த நிறுவனத்திற்காக உழைப்பதற்கு அவர்கள் விரும்புவார்கள். எனவே, அர்ப்பணிப்பு என்பது, செயல்திறனுக்கு ஊடாக தொழில் முன்னேற்றத்திற்கான வாய்ப்பின் ஒரு எதிர்பார்ப்பாகவே இருந்து வருகின்றது.

தாம் பணிபுரியும் நிறுவனங்கள், நியாயமான மதிப்பீடு, பயிற்சி மற்றும் அபிவிருத்தி என்பவற்றுக்கான வாய்ப்பினை அளிப்பதற்கூடாக முன்னேற்றத்திற்கான ஒரு மாற்றத்தை பெற்றுத் தருகின்றன என ஊழியர்கள் கருதி வரக்கூடிய ஒரு நிலையை உறுதி செய்வது மானிட வள முகாமையாளரின் ஒரு வேலையாகும். பெரும்பாலான நவீன நிறுவனங்கள் ஊழியர் செயல் திறனை மதிப்பிடும் வழிமுறைகளை பலமுறை மாற்றி அமைத்துக் கொண்டுள்ளன. இந்த நிறுவனங்கள் வேலைக்கு சமூகமளித்தல், நேரம் தவறாமை மற்றும் விசுவாசம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஓர் ஊழியரை மதிப்பீடு செய்யும் பாரம்பரிய முறையை இப்பொழுது மாற்றிக் கொண்டுள்ளன. மேலும், குறிக்கோள்களின் அடிப் படையிலான முகாமை என்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட வெளியீட்டு மட்டததில் மட்டும் செயல்திறனை மதிப்பிடும் மிகச் சமீபத்திய அணுகு முறையிலிருந்தும் இப்பொழுது அவை நகர்ந்து சென்றுள்ளன. புதிய செயல்திறன் மதிப்பீட்டு முறைகள் உள்ளீட்டு மட்டத்திலும் அதே போல வெளியீட்டு மட்டத்திலும் ஆர்வம் காட்டி வருகின்றன. ஆனால், அதே நேரத்தில், அவை நிறுவனத்தின் குறிக்கோள்கள் தொடர்பான ஊழயர்களின் மனப்பாங்கு, நிறுவனத்தின் வேலை விழுமியங்களை உறுதியாக நிலைபெறச் செய்வது தொடர்பான ஊழியர்களின் அர்ப்பணிப்பு மற்றும் ஊழியர்களின் குறைபாடுகள் என்பவற்றிலும் ஆர்வம் காட்டி வருகின்றன.

மானிட மூலவள முகாமை அணுகுமுறை ஊழியர் ஒருவரை ஒரு முழு மனிதப் பிறவியாக நோக்குகின்றது. அதாவது, அவரை அவர் வகித்து வரும் ஏனைய பங்குகளிலிருந்து – குறிப்பாக, ஒரு குடும்ப உறுப்பினர் என்ற முறையில் இருந்து – பிரித்தெடுத்து நோக்க முடியாதென அது கருதுகின்றது. எனவே, ஊழியர்கள் போதிய அளவில்

( 35 பக்கம் பார்க்க)

# நீர்ப்பாசன முகாமை – விவசாய அமைப்புகளின் பொறுப்புக்கள்

அமரசேன கமாதிகே
(சர்வதேச நீர்ப்பாசன மேலாண்மை நிறுவனம்)

நீர்ப்பான முகாமை குறித்த எழுத்தாக்கங்களில் "நீர்ப்பாசன முகாமை கையளிப்பு", "நீர்ப்பாசன முகாமை மாற்றல்", "பங்கேற்பு முகாமை" மற்றும் "தனியார்மயமாக்கல்" என்ற பதங்கள் இப்பொழுது பரவலாக பயன் படுத்தப்பட்டு வருகின்றன. இந்த பதங்களின் பொதுவான கருத்து, நீரினைப் பகிர்ந்தளித்தல் மற்றும் ஒழுங்கு முறையிலான பராமரிப்பு நடவடிக்கைகள் போன்ற சில நீர்ப்பாசன முகாமை பொறுப்புக்களை அரசாங்க முகவரகமொன்றிலிருந்து, விவசாயிகள் அமைப்புக்களுக்கு அல்லது அரசு சாரா முகவரகங்களுக்கு கையளிப்பதாகும். நீர்ப்பாசன கால்வாய்கள், கட்டமைப்புக்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் என்பவற்றின் உரித்தினை விவசாயிகள் அமைப்புக்களுக்கு கைமாற்றம் செய்வது தனியார் மயமாக்கல் என்று அழைக்கப்படுகிறது. நீர்ப்பாசன முகாமையை மாற்றல் செய்வதன் பிரதான விளைவுகளில் ஒன்று, அரசாங்கத்தின் பங்கு சுருங்குவதும், பயனாளிகளின் பங்கு விரிவடைவதும் ஆகும் (வேர்மில்லியன், 1991). (1) முகாமைப் பொறுப்புக்களை மாற்றல் செய்வதற்கு பயன்படுத்தப்படும் முறைகள், மற்றும், (2) நீர்ப்பாசன முறையின் பல்வேறு கட்டங்களிலும் விவசாயிகள் அமைப்புக்களுக்கு கையளிக்கப்படும் நீர்ப்பாசன முகாமைப் பணிகளின் வகைகள் என்பவற்றின் அடிப்படையில் நீர்ப்பாசன முகாமைக் கையளிப்பில் கணிசமான அளவில் வேறுபாடுகள் உள்ளன.

பல வளர்முக நாடுகளில் நீர்ப்பாசன முறைகளின் செயல்திறனை விருத்தி செயவதற்காக பல்வேறு அணுகுமுறைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. பௌதீக புனருத்தாரணம், நீர்ப்பாசன அலுவலர்களை பயிற்றுவதில், முடிவுகளை எடுப்பதில் விவசாயிகளை அதிகளவில் சம்பந்தப்படுத்திக் கொள்ளல், மற்றும் மூலதன ஒன்று திரட்டல் போன்றன இந்த அணுகு முறைகளாக இருந்து வருகின்றன0 இலங்கையில் நீர்ப்பாசன அமைப்புக்களின்முகாமைப் பொறுப்பு, அவற்றை இயக்குவதற்கான நிதிப்படுத்தல் மற்றும் பிரதான நீர்ப்பாசனத் திட்டங்களின் பராமரிப்பு என்பன எப்பொழுதும் அரசாங்கத்தின் பொறுப்பாகவே இருந்து வந்துள்ளன. இலங்கை அரசாங்கம், 1989ல் பங்கேற்பு நீர்ப்பாசன முகாமைக் கொள்கையொன்றைத் துவக்கி வைப்பதற்கு முடிவு செய்தது. இந்த முறைக்கூடாக, பிரதான நீர்ப்பான அமைப்புக்களின் கீழ் வரும் விவசாயிகள், அரசாங்கத்துக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்புக் கட்டணங்களைச் செலுத்துவதற்குப் பதிலாக, தமது உழைப்பினை வழங்குவதன் மூலம் நீர் விநியோக கால்வாய் பகுதிகளை இயக்கி, பராமரிப்பதனை முகாமை செய்வதற்கு ஊக்குவிக்கப்பட்டனர்.

## இலங்கையில் கைமாற்றிக் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள்

சுமார் 485,900 ஏக்கர் பரப்பளைவக் கொண்டுள்ள 35 பிரதான நீர்ப்பாசனத் திட்டங்களில், நீர் விநியோக கால்வாய் மட்டத்திலான இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பொறுப்புக்களை விவசாயிகள் அமைப்புக்களுக்கு கைமாற்றிக் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டம் காணி, காணிகள் அபிவிருத்தி அமைச்சின் நீர்ப்பாசன முகாமைப் பிரிவினால்அமுல் செய்யப்பட்டது. "பிரதான நீர்ப்பாசன குடியேற்றத் திட்டங்களின் ஒருங்கிணைந்த முகாமை" என இந்த நிகழ்ச்சித்திட்டம் அழைக்கப்பட்டு வருகின்றது. மொத்தம் 1,349 நீர் விநியோக கால்வாய் பகுதிகளில் 731 பகுதிகள், 1992ன் முடிவின் போது, விவசாயிகள்அமைப்புக்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தன. நீர்ப்பாசனம் பெறும் காணியின் பரப்பளவு 2,000 ஏக்கர்களுக்கு குறைவாகவும், 200 ஏக்கர்களுக்கு கூடுதலாகவும் இருந்து வரும் சுமார் 175 நடுத்தர நீர்ப்பாசன முறைமைகளில் விவசாயிகளின் அமைப்புக்களுக்கு நீர்ப்பாசன முகாமையைக் கையளிக்கும் இதே மாதிரியான ஒரு நிகழ்ச்சித்திட்டம் 1987ல் நீர்ப்பாசனத் திணைக்களத்தால் துவக்கி வைக்கப்பட்டது. இது "நீர்ப்பாசன முறைமைகளின் முகாமை"என அழைக்கப்படுகின்றது. ஒரு சில நீர்ப்பாசன முறைமைகளில் மட்டுமே இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பொறுப்புக்களை கையளிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், பெரும்பாலான நீர்ப்பாசன முறைமைகளில் விவசாயிகள் அமைப்புக்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. தேசிய நீர்ப்பாசன புனருத்தாரண செய்திட்டம் 1991ல் ஆரம்பிக்கப்பட்டது. பெருந்தொகையான நடுத்தர மற்றும் சிறிய நீர்ப்பாசன அமைப்புக்களை புனருத்தாரணம் செய்து, எதிர்காலத்தில் அவற்றின் இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பொறுப்புக்களை விவசாயிகள் அமைப்புக்களிடம் கையளிப்பதற்கு அது கருதியுள்ளது. மகாவலி பொருளாதார முகவரகம், மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ்வரும் நீர் விநியோக கால்வாய் பகுதிகளின் இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பொறுப்புக்களை விவசாயிகள் அமைப்புப்பளுக்கு கையளிப்பதற்கான அனைத்துமடங்கிய நிகழ்ச்சித்திட்டமொன்றினை உருவாக்கியுள்ளது. இந்த மூன்று நிகழ்ச்சித்திட்டங்களும், பங்கேற்பு முகாமையினைச் சாதித்துக் கொள்வதற்காக நீர்ப்பாசன முகாமைக் கைமாற்றத்தினை செயற்படுத்தி வருகின்றன.

குறிப்பாக, பிரதான நீர்ப்பாசனக் குடியேற்றத்திட்டங்களின் ஒருங்கிணைந்த

( 33 பக்கம் பார்க்க)

# 1993–நெல் அறுவடையில் சாதனை ஆண்டு

ஏ.ஜே. சதரசிங்க
(புள்ளி விவரவியலாளர், தொகை மதிப்பு, புள்ளி விவரவியல் திணைக்களம்)

இலங்கையில், 1985ன் பின்னர், ஆகக் கூடிய நெல் உற்பத்தி 1993ம் ஆண்டிலேயே பதிவு செய்யப்பட்டிருந்தது. 1993ன் நெல் உற்பத்தி 2,567,000 மெட்ரிக் தொன் என மதிப்பிடப்பட்டிருந்தது (1992–93 மகா பருவம்: மெ.தொ.1,692,000; 1993 யால பருவம் : மெ.தொ.875,000). இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு நோக்கும்பொழுது 9 சதவிகித அதிகரிப்பை பிரதிபலிக்கின்றது. நெல் உற்பத்தியில் இதுவரையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆக உச்சமட்டம் 1985ன் 2,661,000 மெ.தொன்களாகும். அதனையடுத்து, தொடர்ச்சியாக ஒரு வீழ்ச்சிப் போக்கு இடம் பெற்று வந்தது. இது ஒரு நீண்ட காலத்தன்மை வாய்ந்த போக்காக நிலவி வரக்கூடும் என்ற வகையில் அச்ச உணர்வுகளும் தெரிவிக்கப்பட்டிருந்தன. இக்காலப் பிரிவின் போது வடக்கு, கிழக்கில் மட்டுமன்றி நாட்டின் ஏனைய பகுதிகளிலும் கலவர நிலைமைகள் தோன்றி இருந்தன. இந்தக் கலவர நிலைமைகள் காரணமாக பண்படுத்தப்பட்ட நிலங்களில் சாகுபடியை முழு அளவில் மேற்கொள்ள முடியாதிருந்தது. இக்காலத்தில் உரத்துக்கு வழங்கப்பட்டு வந்த மானியமும் வாபஸ் பெறப்பட்டது. சாதகமற்ற காலநிலை நிலைமைகள் – குறிப்பாக 1991ன் வறட்சி – உற்பத்தி வீழ்ச்சிக்குப் பங்களிப்புச் செய்திருந்தன. 1993ல் ஏற்பட்ட மாற்றம், உற்பத்தி இப்பொழுது 1985க்கு முன்னர் இருந்தது போல அதிகரித்துக் கொண்டு வருகின்றது என்பதனை சுட்டிக்காட்டுகின்றது.

1952 தொடக்கம், சுமார் நான்கு தசாப்த காலப் பிரிவுக்குள் வருடாந்த நெல் உற்பத்தி ஏறத்தாழ மூன்று மடங்கினால் அதிகரித்து வந்துள்ளது; இக்காலப் பிரிவின்போது உற்பத்தியில் 296 சதவிகித அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. விருத்தியாக்கப்பட்ட நீர்ப்பாசன வசதிகள் மற்றும் தாக்கமான விவசாய விஸ்தரிப்பு சேவைகள் என்பவற்றின் விளைவாகவே இந்த உற்பத்திப் பெருக்கம் சாத்தியமாயிற்று. உதாரணமாக, மகாவலி அபிவிருத்திச் செய்திட்டம், உலர் வலயத்தில் அமைந்துள்ள பல ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலப்பரப்புக்களுக்கு மகா போகத்திலும் யால போகத்திலும் சாகுபடிக்காக நீரினை இப்பொழுது வழங்கி வருகின்றது. தேசிய உற்பத்திக்கு மகாவலி 'B','C', 'G' மற்றும் 'H' வலயங்களும் உடவளவே பகுதியும் 1992–93 மகா பருவத்திலும் 1993 யால பருவத்திலும் வழங்கிய பங்களிப்பு முறையே 18 சதவிகிதமாகவும், 16 சதவிகிதமாகவும் இருந்து வந்துள்ளது. நெற்சாகுபடிக்கு உழவு இயந்திரங்களைக் கொண்டு நிலத்தைப் பண்படுத்தும் முறை ஏனைய அனைத்து சாகுபடி முறைகளையும் பார்க்க இப்பொழுது முக்கியத்துவம் பெற்றுள்ளது. ஒவ்வொரு பருவத்தின் போதும் சாகுபடி நிலப்பரப்பின் சுமார் 40 சதவிகிதம் இவ்விதம் பண்படுத்தப்பட்டு வருகின்றது. புதிய விருத்தியாக்கப்பட்ட விதை இனங்கள் மிகவும் விரிவான முறையில் இப்பொழுது பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சாகுபடி செய்யப்படும் நிலப் பரப்பில் சுமார் 90 சதவிகித நிலங்களில் இந்த விதை இனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஏனைய பயிரிடும் முறைகளிலும் பார்க்க உயர் விளைச்சல்களை தரக்கூடியது என்று கருதப்படும் நாற்று நடுகை இப்பொழுது படிப்படியாக ஜனரஞ்சகம் பெற்று வருகின்றது. வேறு சில முன்னேற்றமடைந்த நடைமுறைகளும் உற்பத்திப் பெருக்கத்துக்கு பெருமளவில் பங்களிப்புச் செய்து வந்துள்ளன.

உள்நாட்டு அரிசி உற்பத்தியில் முன் எப்பொழுதும் இருந்திராத வகையில் தொடர்ச்சியாக ஏற்பட்டு வந்த அதிகரிப்புடன் இணைந்த விதத்தில், 1980களின் தொடக்கப்பகுதி வரையில் அரிசி இறக்குமதிகள் செங்குத்தாக வீழ்ச்சியடைந்து கொண்டு வந்தன. 1981ல் ஆரம்பமாகிய ஐந்துவருட காலத்தின் போது (அதற்கு பின்னைய ஐந்து வருட காலப்பிரிவுடன் ஒப்பிடும் போது) இந்த வீழ்ச்சியை மிகவும் தெளிவாக அவதானிக்கக் கூடியதாக இருந்தது. 1986–90 காலப் பிரிவின் போது உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக, அரிசி இறக்குமதிகள் (முன்னைய ஐந்து வருட கால சராசரிஇறக்குமதிகளுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது) 19.4 சதவிகிதமாக அதிகரித்துக் காணப்பட்டது.


மொத்தமாக கிடைக்கக்கூடியதாக இருக்கும் அரிசியில் உள்நாட்டு உற்பத்தியின் பங்கு என வரைவிலக்கணம் செய்யப்படும் சுயதேவைப் பூர்த்தி விகிதம், குறிப்பிட்ட ஒரு உணவுப் பண்டம் தொடர்பான சாதித்துக் கொள்ளப்பட்டிருக்கும் சுய தேவைப்பூர்த்தியினை விளக்குவதற்காக பொதுவாகப் பயன்படுத்தப்பட்டு வரும் ஒரு குறிகாட்டியாகும். அரிசி தொடர்பான சுய தேவைப்பூர்த்தி விகிதம் கடந்த தசாப்தத்தின் போது 85 சதவிகிதத்துக்கும் 93 சதவிகிதத்துக்கும் இடையில் வேறுபட்ட அளவுகளில் நிலவி வந்துள்ளது. அதற்கு முன்னைய மூன்று தசாப்தங்களுடனும் ஒப்பிட்டு நோக்கும் பொழுது கடந்த தசாப்தத்தின் செயற்பாடு பாராட்டத்தக்கதாகவே இருந்து வந்துள்ளது. எனினும் அரிசி இறக்குமதிகளில் இடம் பெற்று வரும் வீழ்ச்சிகளுடன் இணைந்த வகையில், கோதுமை மா இறக்குமதிகள் மெதுவாக அதிகரித்துக் கொண்டு வருகின்றன என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. ஆளொருவருக்குக் கிடைக்கும் அரிசியின்அளவு, ஆண்டொன்றுக்கு 100 கி.கி.மட்டம் என்ற அளவில் சார்பு ரீதியில் தொடர்ந்தும் நிலையாக இருந்து வந்துள்ளது. அரிசிக்கான முக்கிய பதிலீட்டுப் பொருளாக கருதப்பட்டுவரும் கோதுமை மாவின் ஆளொருவருக்கான கிடைக்கும் தன்மை 1971ல் ஆண்டொன்றுக்கு 21 கி.கி. என்ற அளவில் இருந்து, 1978ல் 45 கி.கி. என அதிகரித்துக் காணப்பட்டது. அதன் பின்னர், 1980

அளவில் இது ஆளொருவருக்கு ஆண்டொன்றுக்கு 23 கி.கி. என வீழ்ச்சி கண்டிருந்தது. ஆனால், அதன் பின்னர் அது மெதுவாக அதிகரித்துக் கொண்டு வந்துள்ளது. 1991ல் அந்த அளவு ஆண்டொன்றுக்கு 34 கி.கி. எனக் காணப்பட்டது.


கோதுமை மாவினை அடிப்படையாகக் கொண்ட உணவுப் பொருட்கள் மக்களிடையே பெருமளவுக்கு அபிமானம் பெற்று வருகின்றன என்பதனைக் காட்டும் ஒரு குறிகாட்டியாக இது உள்ளது. நகர்ப்புறங்களில் திடீர் உணவு வழங்கும் கடைகள் காளான்கள் போல பெருகி வருகின்றன. மேலும், மக்கள் முன்னரை விட இப்பொழுது அதிக அளவுக்கு உணவுக் கட்டுப்பாட்டில் அக்கறை செலுத்தி வருகின்றனர். தொழில் செய்யும் பெரும்பாலானவர்களிடையே, வசதியான, உடனடி உணவு வகைகள் என்ற விடயம் இப்பொழுது அதிகளவுக்குக் கலந்துரையாடப்பட்டு வருகின்றது. இவை அனைத்தும் குறைந்தது நகர்ப்புறங்களில் மட்டுமேனும் அரிசிக்கான கேள்விகளில் ஒரு மெதுவான வீழ்ச்சி ஏற்படுவதற்கு வழிகோல முடியும்.

சுயதேவைப் பூர்த்தி விகிதத்தை தற்போதைய மட்டத்தில் பேணி, மிகுதி தேவையை இறக்குமதிகளுக்கூடாக பூர்த்தி செய்வதா அல்லது சுயதேவைப்பூர்த்தி குறித்த குறிக்கோள் முழு அளவில் எட்டப்படும் வரையில் உற்பத்தியைப் பெருக்குவதற்காக அதிகளவு மூலவளங்களையும் முயற்சிகளையும் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருவதா என்ற தீர்மானத்தை திட்டமிடுவோரே மேற்கொள்ள வேண்டியுள்ளது. வேறு பயிர்களில் போலவே நெல் உற்பத்தியிலும் விளைச்சலை அதிகரிப்பதன் மூலம் உற்பத்தியை மேலும் பெருக்க முடியும். ஒன்றில் ஓர் அலகுக்கான விளைச்சல் அதிகரிக்கப்படுதல் வேண்டும்; அல்லது பெருமளவு நிலப் பரப்புகளை நெற் செய்கையின் கீழ் எடுத்து வருதல் வேண்டும்; அல்லது இந்த இரண்டு அணுகுமுறைகளையும் பின்பற்ற முடியும்.

சாகுபடிக்கு பண்படுத்தப்பட்ட நிலப்பரப்பின் அளவு 1952 தொடக்கம் 44 சதவிகிதமாக அதிகரித்து வந்துள்ளது.



அரிசியில் தன்னிறைவு
1950 – 1990



நெல் உற்பத்தி- மகா, யால பருவங்கள் அடிப்படையில்
1952 – 1993

1992-93 பயிர்ச்செய்கை வருடத்தின்போது 737,004 ஹெக்டயார் பரப்பளவில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. சராசரி பயிர்ச்செய்கைச் செறிவு, மகா மற்றும் யால போகங்களின் போது, சாகுபடி செய்யப்பட்ட நிலப் பரப்பின் அறுவடை செய்யப்பட்ட சதவிகிதமாக வரைவிலக்கணம் செய்யப்படுகின்றது. கடந்த தசாப்தத்தின்போது சராசரி பயிர்ச் செய்கைச் செறிவு (இரு போகங்களிலும்) சுமார் 125 சதவிகிதமாக இருந்து வந்துள்ளது. இது சாத்தியமான உச்சமட்ட அளவான 200 சதவிகிதத்தில் சுமார் 75 சதவிகித நிலப்பரப்பு ஒவ்வோர் ஆண்டிலும் வெறுமனே விடப்பட்டுள்ளது என்பதனையே காட்டுகின்றது.

யால பருவத்தின் போது சாகுபடி செய்யப்பட்ட நிலப்பரப்பில் சுமார் 50 சதவிகிதமே அறுவடை செய்யப்பட்டு வந்துள்ளது. மகா பருவத்தின்போது,

சாகுபடி செய்யப்படும் நிலப்பரப்பில் சராசரியாக 14 தொடக்கம் 36 சதவீதம் வரையிலான பரப்பளவும், யால பருவங்களின் போது 45 தொடக்கம் 65 சதவிகிதமான நிலப்பரப்புக்களும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாது கைவிடப்பட்டு வருகின்றன. முக்கியமாக இவ்விதம் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாத நிலங்களில் பெரும்பகுதி உலர் வலயத்திலேயே இருந்து வருகின்றது. நெற்செய்கை பெருமளவுக்கு நீரிலேயே தங்கியுள்ளது. உலர் வலயத்தில் தென்மேற்கு பருவப் பெயர்ச்சிக் காற்று மழை வீழ்ச்சி போதியளவில் கிடைக்காமல்இருப்பதும், நீர்ப்பாசன வசதிகளின் பற்றாக்குறையும் யால பருவததின் போது பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாதிருப்பதற்கான முக்கிய காரணங்களாக இருந்து வருகின்றன.

நீர்ப்பாசன வசதிகளை வழங்குவதிலும் காணி அபிவிருத்தியிலும் ஏற்கனவே பெருமளவுக்குச் சாதனைகள் நிகழ்த்தப்பட்டு வந்துள்ளன. பிரதான நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் வரும் விவசாய காணியின் பரப்பளவு 1952 தொடக்கம் 1983 வரையில் சுமார் 188,000 ஹெக்டயார்களினால் (355 சதவிகிதமாக) அதிகரித்து வந்துள்ளது. யால பருவத்தில் பயிரிடப்படும் காணியின் பரப்பளவு 139,000 ஹெக்டயார்களினால் (298 சதவிகிதம்) அதிகரித்திருந்தது. விஸ்தரிக்கப்பட்ட நீர்ப்பாசன வசதிகளினால் சிறிய நீர்ப்பாசன திட்டங்களின் கீழ் வரும் காணிகளின் பரப்பளவு அதிகரிக்கப்பட்டது. சிறிய நீர்ப்பாசன வசதிகளின் கீழ் பயிர்ச்செய்கை பண்ணக்கூடிய நிலப்பரப்பின் அளவு (மகா போகம்) 1950 தொடக்கம் 88,318 ஹெக்டயார்களாலும், யால பருவத்திற்கான பரப்பளவு 60,606 ஹெக்டயார்களினாலும் அதி கரித்திருந்தது. இவற்றில் முறையே 155 சதவிகிதம், 230 சதவிகிதம் என அதிகரிப்புக்கள் ஏற்பட்டிருந்தன.

நாட்டின் உலர் வலயம், விவசாயத்துக்குப் பண்படுத்தப்படும் நிலப் பரப்பின் சுமார் 77 சதவிகிதத்தைக் கொண்டுள்ளது. தேசிய உற்பத்தியில் 75 சதவிகிதத்தினை இவ்வலயம் வழங்கி வருகின்றது. எனவே, அரிசியில் சுயதேவைப்பூர்த்தி குறித்த குறிக் கோளினை நிறைவேற்றும் பொருட்டு உலர் வலயத்தில் நிலவிவரும் நீர்ப்பற்றாக்குறை பிரச்சினையின் மீது மேலும் அதிகளவில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகின்றது. நீர் கிடைக்கும் தன்மையே, சாகுபடி செய்யப்படும் நிலத்தின் பரப்பளவு மற்றும் அறுவடை செய்யப்படும் நிலத்தின் பரப்பளவு என்பவற்றை தீர்மானிக்கும் மிக முக்கிய நிர்ணய காரணியாக இருந்து வருகின்றது. மேலும், அறுவடை செய்யப்பட்ட விகிதம், பீடைகளின் தாக்குதல், கிருமிகள் மற்றும் வெள்ளப் பெருக்குகள் போன்ற பயிர் அழிவுகளிலும் அது பெருமளவுக்குத் தங்கி யுள்ளது. எவ்வாறிருந்தபோதிலும் கடந்த சில வருடங்களில் அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு 72 சத விகிதத்துக்கும் 98 சதவிகிதத்துக்கும் இடையில் காணப்பட்டது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், மிகவும் பாரதூரமான பரிமாணங்களிலான முழு அளவிலான பயிர்நாசம் ஒரு பொது நிகழ்வாக எமது நாட்டில் இடம் பெற்றிருக்கவில்லை.

இதுவரையில் மேற்கொள்ளப் பட்டு வந்துள்ள விவசாய ஆராய்ச்சி மற்றும் விஸ்தரிப்புத் திட்டங்கள் சராசரி விளைச்சலினை கணிசமான அளவில் உயர்த்திக் கொள்வதனை சாத்திய மாக்கியுள்ளன. அதாவது, 1951க்கும் 1992க்கும் இடைப்பட்ட கால கட்டத்தின் போது மகா மற்றும் யால போகங்களின் சராசரி விளைச்சல் முறையே 128 சதவிகிதமாகவும், 93 சதவிகிதமாகவும் அதிகரித்து வந்துள்ளது. கடந்த பத்தாண்டுகளின் போது இரு போகங்களிலும் ஹெக்டயார் ஒன்றுக்கான விளைச்சல் 3,000 கிலோ கிராம் அளவினைவிடவும் வீழ்ச்சியடைய வில்லை என்பதனை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். நீர் கிடைத்தல், விருத்தி செய்யப்பட்ட விதை ரகங்களின் பாவனை, நாற்று நடுகை, களை பிடுங்குதல், பீடைக்கட்டுப்பாடு போன்ற முன்னேற்ற மடைந்த பயிர்ச்செய்கை நடைமுறை என்பன இதற்கு பெருமளமவுக்குப் பங்களிப்பு நல்கி வந்துள்ளன. உற்பத்தித் திறனை அதிகரித்து, அதன்மூலம் உற்பத்தியை மேலும் பெருக்குவதற்கு ஆராய்ச்சியையும், ஏனைய விவசாய விஸ்தரிப்பு நிகழ்ச்சித்திட்டங்களையும் தீவிரமான முறையில் மேற்கொண்டு வருதல் அவசியமாகும்.

குறுப்பிட்ட சில விருத்தி செய்யப் பட்ட விதை ரகங்களின் செயல் திறன் பெருமளவுக்கு. இரசாயன உர வகைகளிலேயே தங்கியுள்ளது. பொதுவாக, உர வகைகள் இறக்குமதி செய்யப்பட்டு வருவதனால், இது தவிர்க்கமுடியாத வகையில் செலவு அதிகரிப்புக்கு வழிகோலும். மறுபுறத்தில், இந்த இரசாயன உர வகைகளின் ஏற்று மதியாளர்களான ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகள், இப்பொழுது, இவற்றின் சுற்றுச்சூழல் தூய்மைக்கேடு மற்றும் ஏனைய பக்க விளைவுகள் என்பவற்றை நன்கு உணர்ந்து கொண்ட நிலையில், நிலைத்து நிற்கக்கூடிய வேளாண்மை முறையின் மீது கவனம் செலுத்தி வருவதுடன், இயற்கை உர வகைகளின் பாவனையை மேம்படுத்துமாறு விவசாயிகளைத் துண்டி வருகின்றனர். எனவே, வேளாண்மைத் துறையைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், உற்பத்தியை பெருக்குவதற்கான தமது முயற்சிகளின் போது இந்த விடயத்தையும் கவனத்தில் எடுக்க வேண்டியுள்ளது.

இப்பொழுது நாங்கள் கவனத்தில் எடுக்க வேண்டியிருக்கும் பிரச்சினை, அரிசிக்கான தேவையை முழு அளவில் நிறைவு செய்வதற்காக, உற்பத்தியை உயர்த்துவதற்கு செறிவான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமா அல்லது நிறைவு செய்யப்படாத சுமார் 10 சதவிகித தேவையை நாங்கள் இறக்குமதி செய்து கொள்ள வேண்டுமா என்பதாகும். முன்னைய தெரிவுக்காக, ஒன்றில், நாங்கள் விளைதிறனை அதிகரித்துக் கொள்ள வேண்டும்; அல்லது அதிகளவு நிலப்பரப்புக்களை பயிர்ச்செய்கையின்கீழ் கொண்டுவர வேண்டும். இந்த இரு வழிமுறைகளுக்கும் அதிகளவில் நீர்ப்பாசன வசதிகள் அவசியமாகும். நீர் கிடைக்கும் தன்மை மற்றும் அதன் பகிர்வு என்பன குறித்த ஒரு கவனமான பரிசீலனை இதற்கான ஒரு முன் நிபந்தனையாகவுள்ளது. சுயதேவைப் பூர்த்தியினை நிறைவு செய்து கொள்ள வேண்டுமானால், தற்போதைய நீர்ப் பாசனத்திட்டங்களை பராமரித்து, புனருத்தாரணம் செய்வது ஒரு முன்னுரிமை யாகவுள்ளது.

# இலங்கைக்கும் கிழக்காசியாவின் புதிதாக கைத்தொழில்மயமாகியுள்ள நாடுகளுக்குமிடையேயான வர்த்தக மாதிரிகள்

பீ.எம்.எஸ். தந்திரிகம
(மூத்த விரிவுரையாளர்,
பொருளியல் திணைக்களம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கைலக்கழகம்)

*புதிதாக கைத்தொழில்மயமாகியுள்ள கிழக்காசிய நாடுகள்(NICs) என்று அழைக்கப்பட்டு வரும் தென்கொரியா, சிங்கப்பூர், ஹொங்கொங் மற்றும் தாய்வான் ஆகிய நாடுகளுடனான இலங்கையின் வர்த்தக மாதிரியை பகுப்பாய்வு செய்வதற்கு இங்கு ஒரு முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. இலங்கைக்கும் ஒட்டுமொத்தமான இந்த நாடுகளுக்கும் இடையிலான பண்ட அடிப்படையிலான வர்த்தகப் பாய்ச்சல்களும். இலங்கைக்கும் தனிப்பட்ட 'NIC' நாடுகளுக்குமிடையிலான வர்த்தகப் பாய்ச்சல்களும் இங்கு பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. மேலும், இந்த பண்ட வர்த்தகத்தின் தேறிய ஆதாயம் அல்லது நட்டம் மற்றும் போக்குகள் என்பவற்றையும் அது கவனத்தில் எடுக்கின்றது.*

*இந்த நாடுகளுக்கான இலங்கையின் ஏற்றுமதிகள் அதிகரித்துச் செல்வதிலும் பார்க்க கூடிய வேகத்தில். இந்நாடுகளிலிருந்து இலங்கைக்குள் வரும் இறக்குமதிகள் அதிகரித்துச் செல்வது கண்டறியப்பட்டுள்ளது. இதன்விளைவாக, வர்த்தகப் பற்றாக்குறை வரவர உயர்ந்து வருகின்றது. இலங்கையின் வர்த்தகம் ஆசியப் பிராந்தியத்தை நோக்கி திசை திருப்பப்பட்டு வருவதுடன், குறிப்பாக அண்மைய வருடங்களில் எமது இறக்குமதிச்சந்தையில் புதிதாக கைத்தொழில் மயமாகியுள்ள நாடுகளின் பங்கு அதிகரித்து வந்துள்ளது. இலங்கையின் வர்த்தகத்துறை ஊழியச் செறிவு மிகுந்த உற்பத்தியை நோக்கி தீவிரமான முறையில் பன்முகப்படுத்தப்பட்டு வரும் அதே வேளையில், 'NIC' நாடுகள் பெருமளவுக்கு மூலதனச் செறிவு மிகுந்த பொருட்களின் ஏற்றுமதி நாடுகளாக உருவாகி வந்துள்ளன. மேலும், இந்நாடுகள் தமது உற்பத்திகளான புடவைகள், சிந்தெடிக் பொருட்கள், கட்டடப் பொருட்கள் மற்றும் போக்குவரத்து உபகரணங்கள் போன்றவற்றுக்கான இலங்கையின் சந்தையில் பெரும்பாகத்தைக் கைப்பற்றியுள்ளன.*

## பின்னணி

1950களின் தொடக்கத்தின் போது, இலங்கையும் கொரியக் குடியரசு, சிங்கப்பூர், ஹொங்கொங், தாய்வான் மற்றும் சீனா ஆகிய நாடுகளும் அநேகமாக ஒரே மாதிரியான தலைக்குரிய வருமானங்கள் மற்றும் வெளிநாட்டு வர்த்தக கட்டமைப்புக்கள் என்பவற்றைக் கொண்டிருந்தன. அவை அனைத்தும் வேளாண்மைத்துறை சார்ந்த நாடுகளாக இருந்து வந்ததுடன், தமது பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காக அந்த வகையைச் சேர்ந்த அபிவிருத்தி உபாயங்களை பின்பற்றி வந்தன. இந்த கிழக்காசிய நாடுகள் அனைத்தும் 1950களின் தொடக்கத்தில் ஒரே மாதிரியான பின்னணிகளைக் கொண்டிருந்த போதிலும், ஒருமித்த தன்மையைக் கொண்ட அபிவிருத்தி உத்திகளைப் பின்பற்றியதன் பின்னர், 1980களின் முடிவின்போது (இலங்கை தவிர்ந்த) இந்த நாடுகள் அனைத்தும் தமது அபிவிருத்தி முயற்சிகளில் பெருமளவுக்கு வெற்றியீட்டியிருந்தன. முக்கியமாக, அவை தமது தலைக்குரிய வருமானங்களை கணிசமான அளவில் உயர்த்திக் கொள்ளக் கூடியதாக இருந்ததுடன், வர்த்தகப் பற்றாக் குறைகளை படிப்படியாக மாற்றிக் கொள்வதிலும் வெற்றி கண்டன. இது, இந்நாடுகள் வர்த்தகம் செய்து வந்த நாடுகளின் வர்த்தக நிலுவைகளை சாதகமற்ற முறையில் மாற்றியமைத்தது. மேலும்,1980 கள் தொடக்கம் வெளிநாட்டுச் சந்தைகளில்–குறிப்பாக ஐரோப்பிய மற்றும் ஆசிய சந்தைகளில் –கணிசமான பகுதியை அவை கைப்பற்றிக் கொள்ளக் கூடிய நிலையில் இருந்தன. தற்பொழுது இந் நாடுகளின்– மூலதன மிகை எந்த அளவுக்கு இருந்து வருகின்றது என்றால், அவை இப்பொழுது சர்வதேச சந்தையில் மூலதனம் கடன்கொடுக்கும் நாடுகளா இருந்து வருகின்றன. கைத்தொழில்

வளர்ச்சியடைந்த ஏனைய நாடுகளுக்கும் இந்நாடுகள் ஒரு சவாலாக இருந்து வருவதாக இப்பொழுது வாதிக்கப்பட்டு வருகிறது. இவை ஆசியாவின் "நான்கு பூதங்கள்" என்றும், "நால்வர் குழு" என்றும் அல்லது "புதிதாக கைத் தொழில்மயமாகியுள்ள நாடுகள்" என்றும் அழைக்கப்பட்டு வருகின்றன.

இந்நாடுகள் தமது இலக்குகளை சாதித்துக் கொள்வதில் பெருமளவுக்கு வெற்றி கண்டு வந்துள்ளன. அதே வேளையில், இலங்கையினால், ஆரம்பித்த இடத்திலிருந்து வெகுதூரம் முன்னேறிச் செல்ல முடியாது போய்விட்டது. தலைக்குரிய வருமானத்தின் அடிப் படையிலோ அல்லது வெளிநாட்டு வர்த்தகத்தின் வளர்ச்சி அடிப்படையிலோ இலங்கையினால் கணிசமான அளவு முன்னேற்றங்களைப் பெற முடிய வில்லை. இலங்கையின் மொ.உ.உ. 1980 களின் போது ஆண்டொன்றுக்கு சராசரியாக 4 சதவிகிதம் வளர்ச்சி கண்டு வந்துள்ளது. அதேவேளையில் 'NIC' நாடுகளில் இது 8 சதவிகிதமாக இருந்து வந்தது. மேலும் இலங்கை மிகவும் கடுமையான சென்மதி நிலுவை தொடர்பான பிரச்சினைகளையும் எதிர்நோக்கி வந்தது. 'NIC' நாடுகள் சாதகமான சென்மதி நிலுவை நிலைமைகளை அனுபவித்து வந்தன.

கடந்த இரண்டு தசாப்த காலத்தின்போது இலங்கையின் வர்த்தகப் போக்கில் அவதானிக்கப்பட்ட முக்கிய மான ஒரு சிறப்பம்சம், வர்த்தகத்தின் திசைவழி ஆசியாவை நோக்கி கணிசமான அளவுக்கு மாற்றமடைந்து வந்துள்ளது என்பதாகும். எமது ஏற்றுமதிகளிலும் அதேபோல இறக்குமதிகளிலும், வளர்ச்சியடைந்த கைத்தொழில் நாடுகளின் ஆதிக்கம் 1970களில் மேலோங்கி இருந்தது. ஆனால், 1990 அளவில் இந் நிலையில் குறிப்பிட்டுக் கூறக்கூடி யளவுக்கு ஒரு வீழ்ச்சி தோன்றியிருந்தது. எமது ஏற்றுமதி, இறக்குமதி வர்த்த கத்தில்இதுவரை காலமும் கைத்தொழில் நாடுகள் பெற்றிருந்த இடத்தினை இந்தியா, ஜப்பான், மற்றும் புதிதாக கைத்தொழில்மயமாகியுள்ள 'NIC' நாடுகள் என்பவற்றை உள்ளடக்கிய ஆசிய நாடுகள் பிடித்துக் கொண்டன. 1990ல் இலங்கையின் மொத்த இறக்குமதிகளில் NIC நாடுகளின் பங்கு மட்டும் 25.3

அட்டவணை 1

| அடிப்படை பொருளாதார குறிகாட்டிகள் | | | |
|---|---|---|---|
| நாடு | குடித்தொகை பத்து இலட்சங்களில் | ஆயிரம் சதுர கி.மீ. பரப்பளவு | தலைக்குரிய மொதேஉ 1987 அ.டொலர் |
| இலங்கை | 17.4 | 66 | 400 |
| கொரியா | 42.1 | 98 | 2690 |
| தாய்வான் | 19.0 | - | 3160 |
| ஹொங்கொங் | 5.6 | 2 | 8070 |
| சிங்கப்பூர் | 2.6 | 1 | 7940 |

ஆதாரம்: உலக அபிவிருத்தி அறிக்கை 1990

அட்டவணை 2

ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் என்பவற்றின் சராசரி வருடாந்த வளர்ச்சி விகிதங்கள்

| | ஏற்றுமதிகள் | | இறக்குமதிகள் | |
|---|---|---|---|---|
| | 1974-1982 | 1983-1990 | 1974-1982 | 1983-1990 |
| கொரியக் குடியரசு | 75.40 | 3.40 | 53.90 | 57.90 |
| ஹொங்கொங் | -1.28 | 25.70 | 72.88 | 39.00 |
| சிங்கப்பூர் | 17.13 | 17.60 | 36.90 | - 5.60 |
| தாய்வான் | | 18.00 (85-90) | | 40.70 (85-90) |

ஆதாரம்: ஐ.நா.வின் வர்த்தக புள்ளி விவரங்களிலிருந்து கணக்கிடப்பட்டது.

சதவீதமாக இருந்து வந்தது. எனவே இந்த நாடுகள் மேலைய உலகில், மட்டுமன்றி ஏனைய மேல் நாடுகளிலும் தமது ஏற்றுமதிச் சந்தை களை விரிவுபடுத்திக் கொள்வதில் வெற்றிகண்டு வந்துள்ளன என்பதனை காண முடிகின்றது.

இலங்கைக்கும் 'NIC' நாடுகளுக்கு மிடையிலான வர்த்தக உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்கள் என்ப வற்றை இனங்கண்டு கொள்வதும், அந்த வர்த்தக கூட்டாளி நாடுகளுடன் வியாபாரம் செய்வதன் மூலம் இலங்கைக்கு கிட்டும் தேறிய ஆதாயம் அல்லது நட்டங்கள் என்பவற்றை விரிவாகப் பகுப்பாய்வு செய்வதுமே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும். மேலும், 1970 – 1990 காலப்பிரிவின் போது இலங்கைக்கும் 'NIC' நாடுகளுக்கு மிடையிலான பண்ட வர்த்தகத்தில் ஏற்பட்டு வந்துள்ள மாற்றப் போக்குகளை பகுப்பாய்வு செய்வதற்கும் அது முயல் கின்றது.

இரு தனிப்பட்ட தரப்பினரின் வியாபார, மற்றும் கொடுப்பனவு நடவடிக்கைகளை கண்டறிவதற்கான ஒரு முயற்சியில், இந்த இரு தரப்பினரதும் விரிவான சென்மதி நிலுவைக் கணக் கொன்று தயாரிக்கப்படுதல் வேண்டும். சம்பந்தப்பட்ட மூலங்களிலிருந்து தேவைப்படும் தரவுகளைத் திரட்டுவதன் மூலமும் தனிப்பட்ட நாடுகள் தொடர்பாக விரிவான வர்த்தகக் கணக்குகளைத் தயாரிப்பதன் மூலமும் இந்த ஆய்வில் இது மேற்கொள்ளப்படுகின்றது. எனினும், ஏனைய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான தரவுகள் போதியளவில் கிடைக்காதிருப்பதன் காரணமாக, இந்த ஆய்வு, வர்த்தகக் கணக்கு தொடர்பான சென்மதி நிலுவைக் கொடுக்கல் வாங்கல்களை மட்டுமே உள்ளடக்குகின்றது.

இந்த ஆய்வு 1970 தொடக்கம் 1990 வரையிலான காலப்பகுதியை கவனத்தில் எடுக்கின்றது. இக்காலப் பிரிவின் போது, இந்நாடுகள் அனைத்திலும் பல்வேறு வகைகளைச் சேர்ந்த பொருளாதாரச் சீர்திருத்த வழிமுறைகளும் அரசியல் கட்டுப்பாடுகளும் பின்பற்றப்பட்டு

வந்துள்ளன. குறிப்பாக, இலங்கை மத்திய வங்கியின் அறிக்கைகள், இலங்கை சுங்கப் பகுதியின் அறிக்கைகள், சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஐ.நா.அமைப்பு போன்றவற்றின் அறிக்கைகள் போன்ற இரண்டாந்தர மூலங்களிலிருந்தே தரவுகள் அனைத்தும் பெற்றுக் கொள்ளப் பட்டன.

## இலங்கையினதும் 'NIC' நாடுகளினதும் அடிப்படைப் பொருளாதார குணாம்சங்கள்

இலங்கை தென்கிழக்காசிய பிராந்தியத்தில் அமைந்துள்ள ஒரு சிறிய வளர்முக நாடாக இருந்து வருகின்றது. அதன் பரப்பளவு சுமார் 66,600 சதுர கிலோமீட்டர்களாகும். மேலும், அது 1 கோடியே 70 இலட்சம் குடித் தொகையைக் கொண்ட நாடாகவும்இருந்து வருகின்றது. குறிப்பாக, விவசாய உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதிகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்றுவரும் ஓர் ஏற்றுமதிப் பொருளாதாரமாக அது வகைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஏற்று மதிகளுக்குப் பதிலாக, இலங்கை, ஏனைய நாடுகளிலிருந்து நுகர்வுப் பொருட் களையும், மூலதனப் பொருட்களையும், தயாரிக்கப்பட்ட பொருட்களையும், நடுத்தரப் பொருட்களையும் பெற்று வருகின்றது. இலங்கையைப் பொறுத்த வரையில், தங்கியிருக்கும் அளவு சார்பு ரீதியில் மிக உயர்வாகக் காணப்படு கின்றது. இலங்கையின் தற்போதைய வர்த்தக தங்கியிருப்பு சுமார் 56.8 சதவிகிமாக இருந்து வருகின்றது. வெளிச் சந்தைகளில்இடம் பெறக்கூடிய தளம்பல்களினால் பொருளாதாரம் மிக எளிதில் ஊறுபடத்தக்கதாக இருந்து வருகின்றது என்பதையே இது சுட்டிக் காட்டுகின்றது.

கொரியக் குடியரசு, தாய்வான், சிங்கப்பூர் மற்றும் ஹொங்கொங் என்பன ஆசியாவின் புதிதாக கைத்தொழில் மயமாகியுள்ள நாடுகள் 'NIC' என அழைக்கப்படுகின்றன. சமீப காலத்தில், உலகின் வேறு எந்த வளர்முக நாடுகளின் குழுவிலும் பார்க்க, உயர் விகிதங்களிலான பொருளாதார வளர்ச்சியையும் ஏற்றுமதி விஸ்தரிப்பினையும் அடைந்துள்ள நாடு களாக இவை இருந்து வருகின்றன. கொரியக் குடியரசு (தென்கொரியா) இந்தக் குழுவிலுள்ள மிகப் பெரிய நாடாகும் (பரப்பளவு 98,000 சதுர கி.மீ.: 1987 குடித்தொகை 4 கோடியே 21 இலட்சம்). குழுவில் ஆகக்கூடிய குடித்தொகையைக் கொண்ட நாடாகவும் இது இருந்து வருகின்றது. இரண்டாவது மிகப் பெரிய நாடு தாய்வான் ஆகும் (பரப்பளவு 10,000 சதுர கி.மீ.: குடித் தொகை சுமார் 1 கோடியே 90 இலட்சம்).

கொரியா மற்றும் தாய்வான் ஆகிய நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது சிங்கப்பூரும் ஹொங்கொங்கும் சிறிய நாடுகளாக இருந்து வருகின்றன. சிங்கப்பூரின் பரப்பளவு 1,000 சதுர கி.மீ.: ஹொங்கொங் சிங்கப்பூர் அளவிலும் பார்க்க இரண்டு மடங்கு பெரிய நாடாக இருந்து வருகின்றது. சிங்கப்பூரின் குடித்தொகை சுமார் 26 இலட்சமாகும்: ஹொங்கொங் 56 இலட்சம் மக்களைக் கொண்ட நாடாக இருந்து வருகின்றது. இந்த இரு நாடுகளும் நகர அரசுகளாக இருந்து வருகின்றன. பாங்பொங் என்பவர், இந்த அரசுகளை வர்ணிப்பதற்கு "இரட்டையர்கள்" என்ற பதத்தை பிரயோகிக்கின்றார். நகர அரசுகள் என்ற முறையில், இந்த இரு அரசுகளும் இயற்கை மூலவளங்கள் அற்ற நாடுகளாக இருந்து வருகின்றன.

தலைக்குரிய வருமானத்தின் அடிப்படையிலான நிலை எதிர் மாறானதாக உள்ளது. ஹொங்கொங் 8,070 அமெரிக்க டொலர் தலைக்குரிய வருமானத்தைப் பெற்று முதல் ஸ்தானத்தில் இருந்து வருவதுடன், 7,940 அ.டொலர் தலைக்குரிய வருமானத்தைக் கொண்ட சிங்கப்பூர் இரண்டாவது ஸ்தானத்தைப் பிடித்துக் கொள்கின்றது. தாய்வானின் தலைக்குரிய வருமானம் (1984) 3,160 அ.டொலர்களாக இருந்து வருவதுடன், கொரியாவின் தலைக்குரிய வருமானம் (1987) 2,690 அ.டொலர்களாக இருந்து வருகின்றது.

## வர்த்தக கணக்குத் தொடர்பான சென்மதி நிலுவை.

1970களின் போது இலங்கையின் ஏற்றுமதிச் சந்தைகளிலும் இறக்குமதிச் சந்தைகளிலும் பிரதானமாக வளர்ச்சி யடைந்த கைத்தொழில் நாடுகளின் ஆதிக்கம் நிலவி வந்தது. தற்பொழுது புதிதாக கைத்தொழில்மயமாகியுள்ள நாடுகள் இலங்கைக்கு ஒரு சிறிய சந்தையை அளித்து வந்த போதிலும் 1970களின்போது, இலங்கையின் பழைய வர்த்தகக் கூட்டாளி நாடுகளான ஹொங்கொங்கும் சிங்கப்பூரும் எமது ஏற்றுமதிகளில் ஒரு சதவிகிதத்துக்கும் இறக்குமதிகளில் 1.9 சதவிகிதத்துக்கும் பொறுப்பாக இருந்தன. இக்காலப் பிரிவின்போது, கொரியா மற்றும் தாய்வான் ஆகிய நாடுகளுடன் குறிப்பிட்டுக் கூறக்கூடிய வர்த்தக உறவுகள் நிலவி வரவில்லை. 1980களின் பின்னர், கொரியக் குடியரசு மற்றும் தாய்வான் ஆகிய நாடுகளுடனான வர்த்தக உறவுகள் விரிவடைந்தன. கொரியா வுக்கான மொத்த ஏற்றுமதி வர்த்தகம் 1974ல் 0.1 மில்லியன் அ.டொலர் களிலிருந்து 1990ல் 49 இலட்சம் அ.டொலர்களாக அதிகரித்திருந்தது. ஆனால் 'NIC' நாடுகள் தொடர்பாக ஏற்றுமதிகளின் வேகத்திலும் பார்க்க இறக்குமதிகள் அதிகரித்துக் கொண்டு சென்றன. இதன் விளைவாக, இக்கால கட்டம் முழுவதிலும் இலங்கை இந்நாடுகள் தொடர்பான அதன் வர்த்தக நிலுவை களில் சாதகமற்ற நிலைமைகளை எதிர் நோக்கி வந்தது.

கடந்த சில தசாப்தங்களின் போது 'NIC' நாடுகள் தொடர்பானஇலங்கையின் வர்த்தகத்தில் முக்கியமான சில மாற்றங் கள் ஏற்பட்டு வந்துள்ளன. ஹொங்கொங் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகள் 1970 களின் போது ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் தொடர்பான எமது பழைய வர்த்தகக் கூட்டாளி நாடுகளாக இருந்து வந்துள்ளன. இவ்விரு நாடுகளும் 1970ல் எமது ஏற்றுமதிகளில் 3.48 விகிதப் பங்கினை பெற்று வந்தன. இது 1982ல் 4.55 சதவிகிதமாக அதிகரித்துக் காணப்பட்டதுடன், 1990ல் 3.24 சத விகிதமாக வீழ்ச்சியடைந்திருக்கின்றது. அக்காலப் பிரிவின்போது ஹொங்கொங் கின் பங்கில் ஒரு சிறிதளவான வீழ்ச்சி ஏற்பட்டிருந்தமையே இதற்கான காரண மாகும். 1974ல் 1.27 சத விகிதமாக இருந்த அந்நாட்டின் பங்கு 1990ல் .89 சதவிகிதமாக வீழ்ச்சி அடைந்திருந்தது. இப்பொழுது 'NIC' நாடுகள் அனைத்தும் ஒரு குழு என்ற முறையில், எமது மிகப் பெரிய ஏற்றுமதிச் சந்தையாக இருந்து வருகின்றது.

இறக்குமதிச் சந்தையைப் பொறுத்தவரையில், இக்கால கட்டத்தின் போது தென்கொரியா மற்றும் தாய்வான் ஆகிய நாடுகளின் பங்கில் ஏற்பட்டு வந்த கணிசமான அளவிலான

முன்னேற்றம் இங்கு குறிப்பிட வேண்டிய ஒரு அம்ச மாகும். இலங்கை 1974ல் கொரியாவின் ஏற்றுமதிகளில் 0.416 சதவிகிதத்தினை மட்டுமே கொள்வனவு செய்துவந்தது; இது 1990ல் 4.85 சத விகிதமாக அதிகரித் திருந்தது. அட்டவணை 3 அக்கால கட்டத்தின்போது 'NIC' நாடுகளிலிருந்து வந்த இறக்குமதிகளின் பங்கில் ஏற்பட்டு வந்துள்ள அதிகரிப்பினை எடுத்துக் காட்டுகின்றது. இந்நாடுகள் அனைத்தும் 1980ல் எமது இறக்குமதிகளில் 8.28 சதவிகிதத்தினை வழங்கி வந்ததுடன், 1990ல் இது 18.9 சதவிகிதமாக உயர்ந்திருந்தது.

## ஏற்றுமதிச்சந்தை

1970களின்தொடக்கத்தின்போது இலங்கை 'NIC' நாடுகளுக்கு ஒரு சில பொருட்களை மட்டுமே ஏற்றுமதி செய்து வந்தது. இப் பொருட்கள் முக்கியமாக விவசாயப் பொருட்கள், மூலப் பொருட்கள், உணவு, பானங்கள் மற்றும் கனிப்பொருள் உற்பத்திகள் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன. விவசாயப் பொருட்கள் – தேயிலை, இறப்பர், தென்னை என்பவற்றையும் ஏலம், கறுவா, மிளகு, கோப்பி போன்ற சிறு விவசாயப் பொருட்களையும் உள்ளடக்கி இருந்தன. இரத்தினக் கற்கள் மற்றும் ஆபரணங்கள் போன்ற பாரம்பரியமற்ற கைத்தொழில் ஏற்றுமதிகளும்* மேற் கொள்ளப்பட்டு வந்தன. தேயிலை ஹொங்கொங்குக்கு ஏற்றுமதி செய்யப் பட்ட மிக முக்கியமான ஏற்றுமதிப் பண்டமாக இருந்து வந்தது.

1970களின்போது சிங்கப்பூர், கொரியா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பிரதான ஏற்றுமதிப் பண்டம் கனிப் பொருட்களாகும். இந்த வகையில், காரீயம் பிரதான இடத்தைப் பெற்றிருந்தது. தேயிலை, கோப்பி, இறப்பர் மற்றும் பானங்கள் என்பவை 1970 களின் போது சிங்கப்பூருக்கும் கொரியாவுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்ட முக்கிய விவசாய ஏற்றுமதிப் பொருட்களாக இருந்தன. 'NIC' நாடுகள் தொடர்பான இலங்கையின் ஏற்றுமதிச் சந்தையின் மிக முக்கியமான குணாம்சங் களில் ஒன்று 1980 களின் பின்னர் இடம் பெற்ற பண்டங்கள் பன்முகப்படுத்தப் பட்ட நிலையாகும். மீன் மற்றும் இறைச்சி தயாரிப்புக்கள், வெட்டப்பட்ட பூக்கள், பானங்கள் போன்ற புதிய உற்பத்திகள் 1980 களின் போது புதிய ஏற்றுமதிப் பொருட்களாக சேர்ந்து கொண்டன.

அடுத்த மிக முக்கியமான சிறப்பம்சம், இலங்கை ஒரு வளர்முக நாடு என்ற முறையில், 1977ன் பின்னர் ஹொங்கொங் மற்றும் கொரியா போன்ற நாடுகளுக்கான புடவை ஏற்றுமதிகளில் ஒரு முன்னணிப்பங்கினை வகித்து வந்திருப்பதாகும்.

## இறக்குமதிச்சந்தை

'NIC' நாடுகள் தொடர்பான இலங்கையின் இறக்குமதிச்சந்தையில் கணிசமான அளவில் மாற்றங்கள் இடம்பெற்று வந்துள்ளன. 1970 களின் போது 'NIC' நாடுகளிலிருந்து வந்த இறக்குமதிகள் உணவு உற்பத்திகள், கனிப்பொருட்கள், நடுத்தரப் பொருட்கள் மற்றும் ஏனைய இயந்திர உபகரணங்கள் என்பவற்றை உள்ளடக்கி இருந்தன.

ஹொங்கொங் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளைப் பொறுத்தவரையில், 1970களில் புடவை ஒரு முக்கிய இறக்குமதிப் பொருளாக இருந்து வந்தது. அக்காலப்பிரிவின்போது உணவு மற்றும் விவசாயப் பொருட்களின் சார்புரீதியான பங்கு மிகச் சிறு அளவிலேயே காணப்பட்டது. 1977ல் 'NIC' நாடுகளி லிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மொத்தப் பொருட்களில் மீன் மற்றும் இறைச்சி உற்பத்திகள் என்பன 2.7 சதவிகிதமாக மட்டுமே இருந்து வந்தன. ஹொங்கொங்கிலிருந்து மேற்கொள்ளப் பட்ட மொத்த இறக்குமதிகளில் புடவைகள் 48.9 சதவிகிதத்தை கொண்டிருந்தன.

1980களில் இறக்குமதிச் சந்தைகளில் காணப்பட்ட குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஒரு சிறப்பம்சம் இயந்திரம், மற்றும் போக்குவரத்து உபகரணங்கள் என்பவற்றின் சார்புரீதியான பங்கு அதிகரித்துக் காணப்பட்டமையாகும். 1974ல் 1.78 சதவிகிதமாக இருந்த மின்சார மற்றும் மின்சாரமல்லாத இயந்திரங்களின் பங்கு, 1990ல் 5.3 சதவிகிதமாக அதிகரித்திருந்தது. மறுபுறத்தில், தாய்வானிலிருந்து இறக்குமதி செய்யப் பட்ட தயாரிக்கப்பட்ட உற்பத்திகளின் சார்புரீதியான பங்கு துரிதமாக அதிகரித்திருந்தது. இன்று புடவைகள் மற்றும் இயந்திரங்கள் என்பன தாய்வானி லிருந்து வரும் முக்கிய இறக்குமதிப் பொருட்களாகக் காணப்படுகின்றன.

## முடிவுரை

கடந்த இரண்டு தசாப்த காலத்தின்போது இலங்கைக்கும் புதிதாக கைத்தொழில்மயமாகியுள்ள நாடுகளுக்கு மிடையிலான வர்த்தக மாதிரிகளில் கணிசமான அளவிலான மாற்றங்கள் இடம் பெற்று வந்துள்ளன என்பதனை தெளிவாக காணமுடிகின்றது. 'NIC' நாடுகளிலிருந்து இலங்கை பெருமளவுக்குப் பொருட்களை இறக்குமதி செய்து வந்த அதே வேளையில், அந்நாடுகளுக்கான இலங்கையின் ஏற்றுமதிகள் இதே அளவில்அதிகரித்துச் செல்லவில்லை. கிழக்காசியாவின் புதிதாக கைத்தொழில் மயமான நாடுகளுடனான எமது வர்த்தகத்தில் நாங்கள் எதிர்மறையான ஆதாயங்களையே பெற்று வந்துள்ளோம். இக்கால கட்டம் முழுவதிலும் எமது வர்த்தக நிலுவையில் ஒரு பற்றாக்குறை நிலவி வந்துள்ளது என்பதனையே இது பிரதிபலித்துக் காட்டுகின்றது.

1970களின் தொடக்கத்தின்போது நாங்கள் பிரதானமாக விவசாயப் பொருட்களையே இந்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வந்தோம். இரத்தினக் கற்கள் மட்டுமே கைத்தொழில் பொருள் வகையைச் சேர்ந்ததாக இருந்து வந்தது. ஆனால், இந்த ஏற்றுமதிப் பண்டங்களின் உள்ளடக்கத்தில் கணிசமான அளவிலான பல மாற்றங்கள் இடம்பெற்று வந்துள்ளன என்பதனை இங்கு சுட்டிக் காட்டுதல் அவசியமாகும். புதிய பல உற்பத்திப் பொருட்கள் எமது ஏற்றுமதி கூடைக்குள் சேர்த்துக் கொள்ளப்பட் டுள்ளன. புடவை மற்றும் ஆடை ஏற்றுமதி மிக முக்கியமான பாரம்பரிய கைத்தொழில் ஏற்றுமதியாக இருந்து வருகின்றது.

இறக்குமதி சந்தையைப் பொறுத்த வரையில், இலங்கை 'NIC' நாடுகளி லிருந்து இறக்குமதி செய்யும் பொருட்களில் 75 சதவீதத்துக்கு மேற்பட்டவை தயாரிக்கப்பட்ட பொருட் களாக இருந்தன. குறிப்பாக, புடவை வகைகள் மொத்த இறக்குமதிகளின் 50 சதவிகிதத்தைப் பெற்றிருந்தன. இந்த

வகையில் 'NIC' நாடுகள் புடவை வகைகளுக்கான எமது பிரதான இறக்குமதிச் சந்தையாக உருவாகி வந்தது.

எனவே, 'NIC' நாடுகளுடன் வியாபாரம் செய்வதில் இலங்கை அதிகளவுக்கு அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ளவில்லை என நாங்கள் முடிவாகக் கூறலாம். ஆனால், ஓரிரு முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த நாடுகள் புடவை வகைகள், சிந்தெடிக் பொருட்கள், கட்டிடப் பொருட்கள் மற்றும் போக்குவரத்து உபகரணங்கள் என்பவற்றுக்கான இலங்கையின் சந்தையில் பெரும்பகுதியை கைப்பற்றிக் கொள்வதில் வெற்றி கண்டுள்ளன. ஆனால், இலங்கை அதன் உற்பத்திப் பொருட்களுக்கு, கிழக்காசிய பிராந்தியத்தில் சந்தைகளை கைப்பற்றிக்கொள்வதில் இன்னமும் முழு அளவில் வெற்றி பெறவில்லை. இலங்கை, இன்னமும் கூட, அந்நாடுகளுக்கு கடந்த காலத்தில் ஏற்றுமதி செய்து வந்த விவசாய உற்பத்திகள் மீன் உற்பத்திகள், கனிப் பொருட்கள் மற்றும் தேயிலை போன்ற அதே பொருட்களையே ஏற்றுமதி செய்து கொண்டிருக்கின்றது.

( 21 பக்கத் தொடர்ச்சி)

இருந்து வருகின்றார்: மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையில் சுரண்டல் அடிப்படையில் அன்றி, ஒத்துழைப்பு அடிப்படையிலேயே ஒரு தொடர்பு இருந்து வருகின்றது என்பவையே இந்த இரு கருத்துக்களுமாகும். ஏனைய மூன்று கருத்துக்களையும் பொறுத்த வரையில், ஓரளவுக்கு இசைவுத்தன்மை காணப்படுகின்றது; அல்லது அறவே காணப்படவில்லை.

மனிதர்களின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்தி, சிறந்த உற்பத்தி சார் முகவர்களாக அவர்களை மாற்றியமைப்பதே ஒருங்கிணைந்த கருப்பொருள் அணுகுமுறையின் நோக்கமாகும். எரிக் ப்ரொம், மானிட அபிவிருத்தியின் முடிவு குறித்த ஒரு வரைவிலக்கணமாக இதனை ஏற்றுக் கொள்வதில்லை. மனிதன் பொருட்கள் மீதான தனது சக்தியை பெருக்கிக் கொண்டுவரும் நிலையில், இந்த வழிமுறைகளில் மூழ்கி வழி தவறிச் சென்றுள்ளான் என்றும், முடிவு குறித்த தரிசனத்தை இழந்துள்ளான் என்றும் அவர் கருதுகிறார். மனித இருப்பின் மிக முக்கியமான, அடிப்படை யான கேள்வியை-அதாவது, மனிதன் யார்? அவன் எப்படி வாழ வேண்டும்? மனிதனுக்குள் பொதிந்திருக்கும் பேரளவிலான ஆற்றல்களை விடுவித்து, "உற்பத்திசார்" முறையில் அவற்றை எப்படி பயன்படுத்திக் கொள்ள முடியும் போன்ற கேள்விகளை – அவன் கவனத்தில் எடுக்கத் தவறியுள்ளான் என்று அவர் கூறுகிறார். இந்தப் பின்னணியில், மாமூஅ யின் முடிவினை வரை விலக்கணம் செய்வதற்கு ஒருங்கிணைந்த கருப்பொருள் அணுகுமுறை மேற் கொண்டுவரும் முயற்சியை தரிசனமற்ற ஒன்றாக கருத வேண்டியுள்ளது.

புதிய மாமூஅ கருதுகோளின் சிந்தனைக்கும்மனிதாபிமான மற்றும்தீவிர பொருளாதார கருதுகோளின் சிந்தனைக்குமிடையே சில பொதுவான அம்சங்கள் காணப்பட்ட போதிலும், அவை இரு வேறுவகையான சிந்தனைப் போக்குகள் என்பது தெளிவாகும். எனினும், மாமூஅ குறித்த புதிய கருதுகோள், ஆகக்குறைந்தது ஒரு நல்ல முயற்சியொன்றுக்கான ஓர் ஆரம்பமாக இருந்து வருகின்றது என்று கூறுவதில் எவருக்கும் தயக்கம் இருக்க முடியாது.

( 18 பக்கத் தொடர்ச்சி)

தொழிற்படையில் ஏற்பட்ட துரிதமான அதிகரிப்பு ஆகியவற்றின் நிமித்தம் கல்விகற்ற இளைஞர்களிடையே -குறிப்பாக கிராமப் பகுதிகளில் – வேலை வாய்ப்பின்மைப் பிரச்சினை மிகவும் தீவிரமாக இருந்தது. வேலையற்றோரின் கல்வித் தகைமைகளுக்கும், தேவைப்படுகின்ற திறன்களின் வகைகளுக்குமிடையே காணப்பட்ட வேறுபாடுகள் தொழிற்சந்தை சமநிலையின்மைப் பிரச்சினையை மேலும் தீவிரமாக்கியது.

கல்வி பெறுவதற்கான வாய்ப்புக்கள் பரவலாக்கப்பட்ட போதிலும், சுதந்திரம் அடைந்ததிலிருந்து கல்விக் கொள்கையில் பெருமாற்றம் எதுவும் மேற் கொள்ளப்படவில்லை. பரீட்சையை நோக்கமாகக் கொண்ட கல்வி முறைமையானது போட்டித் தன்மையை உருவாக்கியதோடு, கல்விகற்ற இளைஞர்களிடையே உயர்தொழில், இலிகிதர் தரங்களை ஒத்த பதவிகளுக்கான விருப்பினையும் ஏற்படுத்தியது.

தேவைப்படுகின்ற தொழில்நுட்ப, தொழில் முன்னிலைத் திறன்களை விருத்தியாக்குவதற்கு முறைசார் கல்வித் திட்டத்தினால் முடியவில்லை.

கல்விகற்ற மனித வலுவினரின் (குறிப்பாக கலை, சமூக விஞ்ஞானப் பட்டதாரிகள்) மேலதிக நிரம்பல் காரணமாகவும், நடுத்தரமட்டத்திலும் குறைந்த மட்டத்திலும் தேவைப்படுகின்ற மனிதவலுத்திறன்களின் பற்றாக்குறை காரணமாகவும் தொழில் சந்தையில் ஒரு பாரிய சம நிலையின்மையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. திறன்களைக் கொண்ட மனித வலுவினரின் குடியகல்வும் அதிகளவில் இடம் பெற்றமை தற்போதுள்ள மனிதவலுச் சமநிலையின்மைக்கு காரணமாக அமைந்தது.

வேலையில்லாத் திண்டாட்டமும் மனிதவலுச் சம நிலையின்மைகளும் மிகவும் பாரதூரமான அரசியல் பிரச்சினைகளை ஏற்படுத்திய போதிலும், தேசியமட்டத்திலும், தேசிய உப மட்டங்களிலும் ஒரு பரந்த தொழில் வாய்ப்பு, மனிதவலுக் கொள்கை இதுவரை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஒரு பரந்த கொள்கையும், சரியான மனதவலுத் திட்டமும் இல்லாத சூழ்நிலையில், வேலையற்றோர் பிரச்சினைகளினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அவ்வப்போதைய முடிவுகளாக இருந்தமையினால் அவை மட்டுப்படுத்தப்பட்ட பெறுபேறுகளையே தந்தன.

தற்போது மனித மூலவளங்கள் அபிவிருத்திக்னெ செலவழிக்கப்படும் வளங்களின் தொகை தேவைப்படுகின்ற மட்டத்தை விட மிகவும் குறைவாக இருப்பதாகவே தோன்றுகின்றது. இதன்படி, தற்போதைய மனித மூலவளங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் கிராமிய வறிய மக்களிடையேயும், நகர வறிய மக்களிடையேயும் வேலயற்றோரிடையேயும் ஒரு குறிப்பிடத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்துமென எதிர்பார்ப்பது கடினமாகும்.

சுயதொழில் வாய்ப்பினை நோக்கமாகக் கொண்ட தொழில்நுட்ப, தொழில்முன்னிலைப் பயிற்சிக்கான வாய்ப்புக்கள் மேல் மாகாணத்திலும், ஏனைய மாகாணங்களின் நகரப் பகுதிகளிலும் குவிந்து இருப்பதைக் கொண்டு, இத்தகைய வாய்ப்புக்கள் சீரற்ற முறையில் பரந்திருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது. பொதுத் துறையின் சில நிறுவனங்களினால் நடாத்தப்படுகின்ற பயிற்சிகளில் தொழில் முன்னிலைப் பயிற்சி முறை

சேர்த்துக் கொள்ளப்படாத பின்னணியில், இப்பயிற்சித் திட்டங்கள் குறிக்கப்பட்ட குழுவினர்களுக்கு பயன்படத்தக்க முறையில் அமையாததன் காரணமாக இப்பயிற்சித் திட்டங்களின் பயன்படுதன்மை மட்டுப்படுத்தப் பட்டதாக இருக்கும்.

தொழில் வாய்ப்புக்களை நோக்கிய மனிதவலு அபிவிருத்தி நடவடிக்கைகளில் தனியார் துறையினரின் பங்களிப்பு தேவைப்படுகின்ற மட்டத்தினை விடக் குறைவாக இருப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. தனியார் துறையினரோடு ஒப்படுகையில் அரச சார்பற்ற பல்வேறு தொண்டர் ஸ்தாபனங்களினால் மேற்கொள்ளப் படுகின்ற மனித மூலவளங்கள் அபிவிருத்தித் திட்டங்கள் தேசிய அல்லது துணைத் தேசிய மட்டத்தில் உள்ள மனித வலுத்திட்டத்தின் ஆதிக்க வரம்பிற்குள் கொண்டுவரப்படுமிடத்து, பங்களிப்பினை மேலும் பலப் படுத்தலாம்.

தற்போதைய மனித மூலவளங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் உள்ளடக்கம், அவை வழங்கப்படும் முறைகள், நாட்டின் தேவைகளுக்கேற்ப அவற்றின் பொருத்தம் என்பவற்றை விருத்தி செய்யும் நோக்கில், இந்த நிகழ்ச்சித்திட்டங்களை மதிப்பாய்வு செய்ய வேண்டியது மிகவும் முக்கியமாகும். தேசிய மனிதவலுத்திட்டத்திற்கான அடிப்படையினை உருவாக்குவதற்கும், தற்போது அமுல் நடாத்தப்படுகின்ற மனித மூலவளங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் வினைத் திறமையையும் அவற்றின் பயன்படு தன்மையையும் அதிகரிப்பதற்குமாக அனைத்து மனித மூலவளங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களையும் ஒருங்கிணைக்கக்கூடிய வகையில் ஒரு நுட்பமான முறை தேவையாக உள்ளது.

( 23 பக்கத் தொடர்ச்சி)

வசதிகளைப் பெற்றவர்களாக இருந்து வரவேண்டும் என்ற உண்மையினை அது ஏற்றுக் கொள்கின்றது. பெரும்பாலான நிறுவனங்கள் சட்டத்தினால் விதித் துரைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு மட்டங்களுக்கும் அப்பால் சென்று, ஊழியர்கள் பாதுகாப்பானவர்களாகவும் வசதிகளை பெற்றவர்களாகவும் இருந்து வர வேண்டும் என்பதனை உறுதி செய்து கொள்கின்றன. பல நிறுவனங்கள் பல்வேறு சேமநல வசதிகளையும் ஊழியர்களுக்காக பெற்றுக் கொடுத்துள்ளன. ஊழியர்கள் தமது அன்றாட வாழ்க்கையின் வழமையான பிரச்சினைகளின் தொந்தரவுகள் எதுவுமின்றி, வேலையில் கவனம் செலுத்துவதனை இயலச் செய்வதற்கென இந்த வசதிகள் வழங்கப்படுகின்றன.

மனித மூலவள முகாமையாளர் ஒருவரின் முக்கிய பணி ஊழியர்கள் பயிற்றுவிக்கப்பட்டு, அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றார்கள் என்பதனை உறுதி செய்து கொள்வதாகும். எனவே, இன்றைய நிறுவனங்கள் பயிற்சி மற்றும் அபிவிருத்தி என்பன தொடர்பான முற்றிலும் மாறுபட்ட ஓர் அணுகுமுறையை பின்பற்றி வருகின்றன. பெரும்பாலான ஊழியர்கள் ஆரம்ப கட்டத்திலேயே மதிப்பீட்டு நிலையங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள். இந்த நிலையங்களில் இவர்களுடைய ஆற்றல்கள் மிகத் தெளிவான முறையில் இனங்கண்டு கொள்ளப்படுகின்றன. இந்த இனங்காணல்களின் விளைவாக, நிறுவனங்கள் தமது ஊழியர்களை அர்த்தம் உள்ள விதத்தில் எதிர்காலப் பொறுப்புக்களுக்காக வளர்த்தெடுப்பதற்கு வாய்ப்புக் கிட்டுகின்றது. இந்த நிகழ்வுப்போக்கு ஊழியர் அர்ப்பணிப்பினை மேலும் உறுதிப்படுத்துவதுடன், சிறந்த முறையில் திட்டமிடுவதற்கான ஒரு வாய்ப்பினையும் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு பெற்றுக் கொடுக்கின்றது.

சில நிறுவனங்கள் தமது இளநிலை மற்றும் நடுத்தர நிலை முகாமையாளர்களை ஆற்றல் மிக்கவர்களாக மாற்றி அமைக்கும் பொருட்டு கம்பனி அடிப்படையிலான வணிகமுகாமை முதுமாணி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தி வருகின்றன. அதேவேளையில், பல நிறுவனங்கள் தமது ஊழியர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு அனுசரணை அளித்து வருகின்றன.

ஊழியர் படை அர்ப்பணிப் புணர்வு கொண்டதாகவும் செயல்திறன் மிக்கதாகவும், குறிக்கோள்களுக்கு இசைய ஒழுகி வருவதாகவும், செலவுத் தாக்கமான முறையில் முகாமை செய்யப்பட்டதாகவும் இருந்து வருகின்றது என்பதனை உறுதி செய்வதற்கு ஒரு மனிதவள முகாமையாளர் என்ன செய்ய வேண்டும்? இது தொடர்பாக அவர் அதிக அளவுக்கு தனது கவனத்தை செலுத்த வேண்டிய பிரிவு மானிட மூலவள கொள்கை ஒன்றினை வளர்த்தெடுத்துக் கொள்வது தொடர்பானதாகும். எனவே, இந்தப் பின்னணியில், மானிட மூலவள முகாமையாளர் என்பவர், கொள்கையை செயல்படுத்துவதற்கு வசதி செய்து கொடுக்கும் ஒரு நடுத்தர முகாமையாளராக இருந்து வரவில்லை; மாறாக, கம்பனியின் கொள்கைக்கு பிரக்ஞை பூர்வமாக பங்களிப்பினை நல்கிவரும் ஒரு நபராக அவர் இருந்து வருகின்றார்.

( 24 பக்கத் தொடர்ச்சி)

முகாமை நிகழ்ச்சித்திட்டம் ஒன்பது வருடங்களாக செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த நிலையில், இந்த கையளிப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் செயற்பாடு என்பவற்றை மிக விரிவான முறையில் பகுப்பாய்வு செய்ய வேண்டிய அவசியமுள்ளது. ஏனைய இரண்டு நிகழ்ச்சித் திட்டங்களும் சுமார் 3-5 வருடங்களாக செயற்படுத்தப்பட்டு வருகின்றன. கொடை வழங்குவோர், கொள்கை வகுப்போர் மற்றும் அமுல் செய்வோர் ஆகிய பிரிவினர் இப்பொழுது இந்நிகழ்ச்சித்திட்டங்களின் பின்வரும் அம்சங்கள் குறித்து அக்கறைகாட்டி வருகின்றனர்: (1) கையளிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிட்டு, செயற்படுத்துவதற்காக வழங்கப்பட்டு வரும் அரச முகவரகங்கள் மற்றும் ஏனைய சேவைகள் என்பவற்றின் தாக்கத்திறன்; (2) விவசாயிகள் அமைப்புக்களின் வளர்ச்சி மட்டம்; அல்லது இயக்குதல், பராமரிப்புப் பொறுப்புக்களை கையேற்றுக் கொள்வதற்கான விவசாயிகள் அமைப்புக்களின் ஆற்றலும், தொடர்ச்சியான முகாமை முறையொன்றுக்குத் தேவையான உள்ளூர் மூலவளங்களைத் திரட்டிக் கொள்ளும் அவற்றின் திறனும்; (3) இயக்குதல் மற்றும் பராமரிப்பு என்பவற்றுக்கான அரசாங்க செலவு குறைவடைதலும் நீர்ப்பாசன முகாமையின் ஒட்டுமொத்த விருத்தியும் கையளிப்பு நிகழ்ச்சித்திட்டக் கொள்கையின் முக்கிய குறிக்கோள்களை சாதித்துக் கொள்வதற்காக, முதலில், சம்பந்தப்பட்ட அரச முகவரகங்களின் ஆதரவுடன் தாக்கமான விவசாயிகள் அமைப்புக்கள் ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும்.

இலங்கை அஞ்சல் திணைக்களத்தில் செய்திப்பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது. பதிவு எண்: QD/46/News/

மக்கள் வங்கியின் ஆராய்ச்சிப் பிரிவு வெளியீடு

பிரதி விலை : ரூ. 10/-
வருட சந்தா : ரூ. 120/-

உரிய முறையில் "பொருளியல் நோக்கின்" பெயரைக் குறிப்பிட்டு, அதில் இடம்பெறும் கட்டுரைகளை மேற்கோ[ள்]
காட்டவோ மீளப் பிரசுரிக்கவோ முடியும்.

யுனைற்ரெட் மேர்ச்சன்ஸ் லிமிற்ரெட், கொழும்பு 13.